சுவாமிநாதம்

மூலமும் விருத்தி உரையும்

பதிப்பாசிரியர்

டாக்டர் செ. வை. சண்முகம்
துணைப்பேராசிரியர்,
மொழியியல் உயர் ஆய்வுத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்

மொழியியல்துறை வெளியீடு 42
முதற்பதிப்பு: 1976.

அச்சிட்டோர்:
இளங்கோ அச்சகம், பாண்டிச்சேரி.

அணிந்துரை

அண்ணமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வுத் துறை திராவிட மொழித்தொடர்பாக பலதுறைகளில்ஆராய்ந்து வருகிறது. அவற்றுள் ஒப்பிலக்கணம், ஒப்புமை மொழியியல் (Contrastive Linguistics), கிளை மொழிகள், சமூக மொழியியல், தென்னகப் பழங்குடி மக்களின் மொழிகள், திராவிட மொழிகளைப் பிற மொழியினர்க்குக் கற்பிக்கும் மொழி அய்வு, தமிழ் மொழி வரலாற்று இலக்கணம், திராவிட மொழி மரபு இலக்கணங்களின் மதிப்பீடு ஆகிய துறைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அவற்றுள் இலக்கண மதிப்பீட்டு ஆய்வில் இத்துறை பலவேறு பணிகளைப் பலவேறு நிலைகளில் புரிந்து வருகிறது. பழைய இலக்கணங்களைத் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அவற்றில் மறைந்து கிடக்கும் சிறந்த மொழியியல் கோட்பாடுகளை வெளிக் கொணர்வதன் மூலம் மொழியியல் வரலாற்றில் (History of Linguistics) அவற்றிற்கு இடமளிக்க வழிவகை செய்வதும் இன்றைய தலைமுறையினர் பழைய இலக்கணங்களின் உண்மையான சிறப்பையும் குறை நிறைகளையும் உணர்ந்து இலக்கண ஆராய்ச்சியிலும் மொழிவரலாற்று ஆராய்ச்சியிலும் ஈடுபாடுகொள்ள நல்ல வாய்ப்பினை அளிப்பதும் இலக்கண மதிப்பீட்டுத் துறையில் இதுவரை செய்த பணிகளில் குறிப்பிடத் தக்கனவாகும். இலக்கண நூல்களைப் பல்வேறு ஆராய்ச்சிப் பட்டங்களுக்கு எடுப்பதுடன் அவற்றை நூல் வடிவில் வெளியிட்டு மொழியியல் மாணவர்களுக்கும் பிறருக்கும்

பயன்படுமாறு செய்வதும் இதன் பணியாகும். நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரை ஆராயப் பெற்று அதன் அடிப்படையில் Naccinarkkiniyar's Conception of Phonology என்ற நூலையும் நன்னூல் எழுத்ததிகாரத்தைத் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்த நிலையில் A modern evaluation of Nannul-eluttatika:ram என்ற நூலையும் வெளியிட்டதும் தமிழ் இலக்கண வரலாற்றை விரிவாக எழுதும் முயற்சியில் வேற்றுமை பற்றி எல்லா இலக்கண ஆசிரியர்களின் கருத்தையும் ஆராய்ந்து A History of Tamil Grammars with reference to Declension என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைத் தயாரித்துள்ளதும் இங்நிலையில் குறிப்பிடத்தக்கன.

திராவிட இலக்கண நூல்களைப்பற்றி ஏழு கருத்தரங்குகள் நடத்தி அவற்றை நூல்களாக வெளியிடும் பணியையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. *1970*-இல் நடந்த கருத்தரங்கில் தொல்காப்பியம் மட்டும் முழுமையாக ஆராய்ந்து அக்கட்டுரைகளைத் **தொல்காப்பிய மொழியியல்** என்ற நூலாகவும் *1973*-இல் நடைபெற்ற இரண்டாவது தமிழ் இலக்கணக் கொள்கைகள் கருத்தரங்கில் ஆராயப்பெற்ற கட்டுரைகளை **இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1** என்ற நூலாகவும் வெளியிட்டுள்ளது இத்துறை.

இத்துறை ஆசிரியர்கள் பலரும் இலக்கணத்தின் பல வேறு கூறுகளைத் தொடர்ந்து ஆராய்ந்து வெளியிட்டு வருவதும் தொல்காப்பியத்திற்குத் தற்கால மொழியியல் கண்ணோட்டத்தில் தெளிவுரை ஒன்று எழுதி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இந்நிலையில் இத்துறையைச் சார்ந்த செ. வை. சண்முகம் *1972-73* கல்வியாண்டில் உயராய்வுக்காக ரெடிங் பல்கலைக்கழகம் (இங்கிலாந்து) சென்றபோது லண்டனில் உள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலைக் கீழைக் கலைத்

துறை நூல் நிலையத்தில் ஐந்திலக்கண நூலாகிய **சுவாமி நாதம்** முழுமையும் கையெழுத்துப் பிரதியாக இருப்பது அறிந்து அதனைக்கற்று மகிழ்ந்ததுடன் புகைப்பட பிரதி ஒன்றுடன் தாய் நாடு திரும்பினர். தாய் நாடு வந்த அவர் அந்நூலுக்கு நல்லதொரு உரை ஒன்றை வகுத்து, பதிப்பித்த நிலையில் அதனை வெளியிட்டது அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

மேலும் இந்நூல் பற்றிய சில சுவடிகளின் அடிப்படையில் **சுவாமிநாதம்-மூலமும் விருத்தி உரையும்** என்றதலைப்பில் நண்பர் சண்முகம் பதிப்பிக்கும் இந்நூலையும் வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறோம். இந்நிலையில் அவருடைய ஆக்கப் பணிக்குத் தமிழ் உலகம் நல்லதொரு வரவேற்பையும் வாழ்த்தையும் அளிக்கும் என நம்புகிறேன்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்.

ச. அகத்தியலிங்கம்,
இயக்குனர்,
மொழியியல் உயர்
ஆய்வுத்துறை.

பதிப்புரை

இங்கு, கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசை கையெழுத்துச்சுவடி நூல்நிலையத்தில் இருக்கும் எழுத்ததிகார முதல் இயலான எழுத்தாக்கமரபுக்கு மட்டுமே உள்ள விருத்தி உரை, முதல் பகுதியாக அச்சிடப்பட்டுள்ளது. இந்தப் பகுதியைச் சுவடியிலிருந்து பிரதி செய்ய உதவிய டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கும் பிரதி செய்த ஆராய்ச்சி மாணவர் திரு. க. இராசேந்திரன் அவர்களுக்கும் என் நன்றி உரியது. இரண்டாவது பகுதியாகத் தமிழ்ப் பொழிலில் வந்துள்ள எழுத்தாக்க மரபும் பத மரபும் வெளியிடப்பட்டுள்ளது. இதில் முன்னர் உரை எழுதப் பெறாத சூத்திரங்களுக்கு மட்டுமே உரை எழுதப்பெற்றுள்ளது. பாடவேறுபாடும் ஆங்காங்கே குறிப்பிடப்பெற்றுள்ளது.

இந்நூலைப் பதிப்பிப்பதற்குரிய ஊக்கத்தையும் அச்சிடுவதற்குரிய உதவியையும் செய்ததோடு என்னுடைய கல்வித்துறை வளர்ச்சியிலும் பெரிதும் துணைபுரிந்து வரும் மொழியியல் உயராய்வுத்துறை நெறியாளர், பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் அவர்களுக்கு நான் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையேன்.

விருத்தி உரையைப் படித்து விளக்கியும் இலக்கிய மேற்கோளை எடுத்துக்காட்டியும் உதவிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை துணைப் பேராசிரியர் உயர் திரு. க வெள்ளைவாரணனார் அவர்களுக்கு என் உளங் கலந்த நன்றி உரியது.

அச்சுப் பிரதியைத் தயாரிப்பதில் உதவி செய்த ஆராய்ச்சி மாணவர் ஜி. சங்கரநாராயணன் அவர்களுக்கும் அச்சுத்தாள்களைத் திருத்திய டாக்டர் சக்திவேல், டாக்டர் பாலகிருஷ்ணன் ஆகியோருக்கும் என் நன்றியும் வாழ்த்தும் உரியது.

மொழியியல் துறை வளர்ச்சியில் பேரார்வம் காட்டி, வேண்டும் போதெல்லாம் விரைந்து உதவிவரும் எங்கள் பெருமதிப்பிற்குரிய துணைவேந்தர் டாக்டர் S சந்திரசேகர் அவர்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான வணக்கமும் நன்றியும் உரியது.

நூலை நன்முறையில் அச்சிட்ட பாண்டிச்சேரி இளங்கோ அச்சகத்தாருக்கும் என் நன்றி.

ஜகார்த்தா
30–11–76

செ. வை. சண்முகம்

முதற்குறிப்பு விளக்கம்

அகம்.	அகநானூறு
இ. கொ.	இலக்கணக் கொத்து
இ. வி.	இலக்கண விளக்கம்
எழு.	எழுத்ததிகாரம்
கலி.	கலித்தொகை
களவி.	களவியல்
குறள்	திருக்குறள்
கே.ப.	கேரளப் பல்கலைக்கழகம்
சூத்.	சூத்திரம்
சொல்.	சொல்லதிகாரம்
தொல்.	தொல்காப்பியம்
நன்.	நன்னூல்
பக்.	பக்கம்
பி.பொ.	பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலை
மு.வீ.	முத்துவீரியம்
யா.கா.	யாப்பருங்கலக்காரிகை

உள்ளுறை

		பக்கம்
அணிந்துரை	...	iii
பதிப்புரை	...	vii
முதற்குறிப்பு விளக்கம்	...	x
உள்ளுறை	...	xi
முன்னுரை	...	xiii
கேரளப் பல்கலைக்கழகப் பிரதி	...	**1**
எழுத்ததிகாரம் (எழுத்தாக்கமரபு மட்டும்)	...	*1*
கரந்தைத் தமிழ்ச்சங்கப் பிரதி	...	**66**
சிறப்புப்பாயிரம்	...	*68*
எழுத்தாக்க மரபு	...	*81*
பத மரபு	...	*89*

முன்னுரை

சுவாமிநாதம் முழுமையும் பிரிட்டிஷ் பொருட்காட்சிசாலை நூல்நிலையப் பிரதியையொட்டி **சுவாமிநாதம்** எனப் பதிப்பிக்கப்பட்டது. இங்கு கேரளப்பல்கலைக்கழகக் கீழ்த்திசை கையெழுத்துச்சுவடி நூல்நிலையத்தில் உள்ள எழுத்தாக்க மரபு விருத்திஉரையும் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பொழிலில் வெளியிட்ட எழுத்தாக்கமரபு, பதமரபு என்ற இரண்டு இயலுக்கும் உரை எழுதியும் **சுவாமிநாதம் மூலமும் விருத்தி உரையும்** என்று பதிப்பிக்கப்படுகின்றது. சுவாமிநாதத்தின் சிறப்பு, அதற்கும் முன்னூல்களுக்கும் உள்ள தொடர்பு முதலியன சுவாமிநாதத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதால் எழுத்தாக்க மரபு விருத்தி உரையின் தன்மையும் சிறப்பும் மட்டுமே இந்நூலில் பேசப்படும்.

விருத்தி உரை:

சுவாமிநாதம் முழுமைக்கும் இந்த விருத்தி உரை எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஒரு குறிப்பு காணப்படுகின்றது. 2 ஆம் சூத்திர உரையில், 'விடம் முதலிய ஐந்தும் செய்யுட்கண் விளங்குவன ஆதலின் அவற்றின் இலக்கணம் செய்யுள் அதிகாரத்திற் காட்டுதும்' (பக். 15) — என்று வரும் தொடர் அந்த உண்மைக்குச் சான்று. எனவே தமிழகத்திலும் வெளி இடங்களிலும் உள்ள கையெழுத்துச் சுவடிகளையும் பிரதிகளையும் தேடிக் கண்டுபிடித்து பதிப்பிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். அப்போது இன்னும் அரிய தமிழ் நூல்கள் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

சுவாமிநாதத்தின் கருத்தை விளக்கும் வகையில் தொல்காப்பியம், நன்னூல், இலக்கணவிளக்கம் ஆகிய நூல்களில் உள்ள ஒத்த நூற்பாக்களைக் காட்டி சுவாமிநாதத்தின் தனிச் சிறப்பும் அந்நூல்களின் சில குறையும் சுட்டிக்காட்டிச் சென்று

உள்ளார். எனவே பொதுவான இலக்கண ஆராய்ச்சிக்கும் இந்த உரை உதவி செய்வதாய் அமைந்துள்ளது.

உரைகாட்டும் சுவாமிநாதத்தின் தனிச் சிறப்பு:

சுவாமிநாதம் சைவ சித்தாந்த கருத்தும் நாடகநூல் கருத்தும் கையாண்டுள்ள இடத்தையும் உரையில் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார்.

எழுத்துகளின் பிறப்பை நன்னூலார் சமணசமய கோட்பாடடை ஒட்டி, 'நிறை உயிர் முயற்சியின் உள்வளிதுரப்ப எழும்அணுத்திரள்' (சூத். 74) என்று கூறிச் சென்றார். வைத்திநாததேசிகர் சைவராயினும் விளக்கமாகக் கூறாது 'உயிர்உழப்பு உதானன் அளிநாதம்' (சூத். 9) என்று சுருக்கமாகவே சொல்லிச் சென்றார். ஆனல் சாமிகவிராயர் 'நிறை உயிராற்' (சூத் 51) என்று விரிவாகக் கூறியதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் தருவார்.

'நிறை உயிர்' என நன்னூலாரும் 'உயிர் உழப்பு' என்று இலக்கண விளக்கத்தாரும் கூறிய சூத்திரங்கள் எண், எழுத்துப் பிறவி இனிது விளங்காமையான் இனிதின் விளங்கக் கூறும் ஞான நூலிற்கண்டு இடம்முறையின் இலக்கண நூலிற்கு அமையும் என மாட்டுதலின் இது 'மாட்டெறிந்து ஒழுகல் என்னும் உத்தி' (பக். 27) என்று கூறுவதோடு சான்ருக சிவப்பிரகாசம் என்ற சைவசித்தாந்த நூலிலிருந்தும் மேற்கோளும் காட்டுவார். இங்கு சுவாமிநாதத்தின் சிறப்பை நன்கு காட்டும் முறையில் உரை தெளிவாக அமைந்துள்ளது.

எழுத்து வரி வடிவம் பற்றிய நாடக நூல் கருத்து இலக்கண நூலுக்கும் பொருந்துவதாய் அமைந்துள்ளதால் அதைத்தழுவிய பெருமை சுவாமிநாதத்திற்கே உரியது என்று உரையாசிரியர் கூறுகின்ருர்.

' நாடக நூலுள் கான்மாத்திரை முதல் நான்கு மாத்திரை ஈருய் ஆறு உறுப்பு காட்டுவனவற்றுள் ஈண்டைக்கு வேண்டுவன மூன்று உறுப்பும் ஒன்ரேடு ஒன்று கூட்டமாக ஆதி சிருட்டியின் கண்ணே இறைவனுற் அமைக்கப்பட்ட பழைய வடிவே வடிவாம் என்றவாறு ... ... இலக்கண நூலார் 'தொல்லை வடிவின்' (நன் 98) என்று கூறி வடிவிற்குக் காரணம் கூருது ஒழிந்ததை நாடக நூலுள் குருமுன்றமையாற் கண்டு இவ்வாசிரியர் இலக்கண நூலில் தாமேநாட்டி நிறுத்தலின் இது 'தான்நாட்டித் தனது நிறுத்தல்' என்ற மதம்'

நூலாசிரியர் கருத்தும் உரையாசிரியர் தந்த விளக்கமும் எவ்வளவுதூரம் இன்றைக்குப் பொருந்தும் என்பதில் ஐயம் இருந்தாலும் ஒரு நூலுக்கு உரை எழுதும்போது அதன் சிறப்பை வெளிப்படுத்திக் காட்டும் தன்னுடைய கடமையை உரையாசிரியர் செம்மையாகச் செய்துள்ளதை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

இவ்வாறே ஏனைய இலக்கணக் கருத்துகளைக் கூறும் போது பிறஇலக்கண நூல் கருத்துகளை ஒப்பிட்டு சுவாமிநாதத்தின் தனித்தன்மையை விதந்து கூறியுள்ளார்.

எண், பெயர், முறை, பிறப்பு என்ற வரிசையில் எழுத்ததிகாரத்தை நன்னூலாரும் இலக்கணவிளக்கத்தாரும் விளக்கிச் சென்ற முறையை விட்டு பெயர், எண், முறை, பிறப்பு என்று அமைத்துக்கொண்ட நெறியைப் பற்றி

' பெயர் அறிந்தே ஏனைய அறியவேண்டுதலின் முன்னூலார் போல எண்ணை முற்கூருது பெயரை முற்கூறினர் (பக். 14) என்ற உரைவிளக்கம் சுவாமிநாதத்தின் தனிச்சிறப்பை ஒப்புமை நிலையில் நன்கு காட்டுகிறது

சுவாமிநாதம் தரும் சார்பெழுத்துகளின் எண்ணிக்கை வேறு யாரையும் பின்பற்றி எழுந்தது அல்ல.

தொல்காப்பியம்	— 3
நன்னூல்	— 369
இலக்கண விளக்கம்	— 240
சுவாமிநாதம்	— 241

எனவே 3 ஆம் சூத்திர உரையில் நன்னூல் கருத்து எவ்வாறு தவறுனது என்பதையும் இலக்கண விளக்கத்தின் கருத்து எப்படி குறை உடையது என்பதையும் சுட்டிகாட்டிச் சென்றுள்ளார்.

'நன்னூலார் எண்ணின்விரி முந்நூற்று அறுபத்தொன்பது என்றார். எழுத்து வேற்றுமையான் விரிதல் உயிர்மெய் மாத்திரையே அன்றி ஏனைய எல்லாம் இடவேற்றுமையான் அன்றி எழுத்துவேற்றுமையான் விரியாமையானும் விரியுள்ளும் குற்றிகரக் குற்றுகரங்கள் முப்பத்தேழு, முப்பத்தாறு என இடையொற்றுக்கள் டகர றகரங்களொடு மயங்காது என நோக்காது கூறினமையானும் அஃது ஒழித்து இலக்கணவிளக்கத்தார் கொண்ட எண்ணின் விரி இருநூற்றுநாற்பதும் அவர் கொள்ளாது நன்னூலார் கொண்ட ஆயுதக் குறுக்கம் கஃறீது, முஃடீது என்புழித்தன் அரைமாத்திரையினும் குறைதல் செவிகருவியாய் நோக்குழித் தோன்றுதலான் அஃது உண்டு என்று மதிநுட்பத்தால் துணிந்து அஃது ஒன்றுங் கூட்டி இருவர் மாறுபாடு ஒருதலை துணிதல் என்னும் மதம்பட இவ்வாசிரியர் சார்பெழுத்து இருநூற்று நாற்பத்தொன்று என்றார்' (பக். 18) என்ற உரை விளக்கம் நூலின் பெருமையையும் உரையின் சிறப்பையும் காட்டுவனவாக அமைந்துள்ளது என்பது வெளிப்படை.

மெய்மயக்கம் கூறும் சூத்திர (13) உரையில் சுவாமிநாத கவிராயரின் இலக்கணக் கோட்பாடே முன்னூல் கருத்துகளோடு மாறுபடுவதற்குக் காரணம் என்றும் விளக்குகிறார்.

'இச்சூத்திரங்கட்கும் (நன். 119, இ. வி. 33) இந்நூற்

செய்யுட்குஞ் சில பேதங்கள் தனிமொழி, தொடர் மொழி பகுத்தமையான் உள்ளது என்பது உய்த்துணர்ந்து கொள்க' (பக். 60).

இவ்வாறே ஐகாரக் குறுக்கம் மொழிமுதலிலும் ஈற்றிலும் ஒன்றரை மாத்திரையும் இடையில் ஒரு மாத்திரையும் பெறும் என்ற கருத்தின் பொருத்தத்தை இலக்கியச் சான்றுகளோடு கூடிய விளக்கமும் (பக். 47), உயிர் மயக்கம் பற்றிய விளக்கமும் (பக். 56), அளபெடைக்கு மாத்திரை வரையறுப்பது பொருந்தாதது என்பதன் விளக்கமும் (பக். 48) சுவாமிநாதத்தின் பெருமையை விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

சுவாமிநாதத்திற்கு மூலாதாரமாக அமைந்த கருத்துகளையும் ஆங்காங்கே சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். ஏ, ஐ, ஓ, ஔ, ஔ என்ற ஆறு எழுத்தும் கூட்டெழுத்து என்பதை 'நன்னூல் உரையாசிரியர் இவ்வாறே தழுவினர் ஆதலானும் எகர முதலிய ஆறு எழுத்தும் சந்தி எழுத்து என இவ்வாசிரியர் கூறினர் என்று உணர்க' (பக். 21) என்ற தொடரால் வெளிப்படுத்துவது காணலாம்.

இடையிடையே பிறநூலில் உள்ள முரண்பாட்டையும் குறையையும் உரையில் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார் உரையாசிரியர். உதாரணமாக நன்னூலார் நெடிற்றொடர் குற்றியலுகரம் என்று தனிவகைக் கொண்டது அவர் மொழியை ஒரெழுத்தொரு மொழி, தொடர் மொழி என்ற பாகுபாட்டிற்கு மாறுபட்டது என்பதை 8ஆம் சூத்திர உரையில் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியரும் நன்னூல், இலக்கண விளக்கத்தாரும் தனிக்குறில் தொடரைப் நீக்குதற்பொருட்டே நெடிற் றொடரைப் பிரித்ததும் என்று உணர்க .... ஒரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி என மொழிநிலை இரண்டு

எனக் கொண்ட நன்னூலார்க்கும் அஃது அமையாது என்பதூஉம் உணர்க. (பக். 33)

மற்றொரு இடத்தில் இலக்கண விளக்கத்தின் கருத்து பொருந்தாமையைச் சுட்டிக் காட்டுகிறார்.

இவற்றுள் (ஐகார ஒளகாரக் குறுக்கங்கள்) தன்னைச் சுட்டு மாத்திரையே குறுகாதென சூத்திரம் செய்த நன்னூலார் கருத்தறியாது இச்சூத்திரத்திற்கு இலக்கண விளக்கத்தார் 'அளபெடை...... (இ. வி. 31) என்பதோர் சூத்திரக் கருத்தாய்த் தன்னைச் சுட்டுதற்கண்ணும் அளபெடைக்கண்ணும் குறுகாது என்று உரை செய்தார். அளபெடுத்தற்கண் மாத்திரை மிகுதலாய் இருக்க தன்னளவிற் குறையாது என்பது கூற வேண்டாமையின் அது கருத்தன்று என்க' (பக். 35) என்ற உரை இவ்வுண்மையை வலியுறுத்தும்.

சில இடங்களில் இலக்கண விளக்கத்தை நீக்கி நன்னூல் கருத்தையும் ஏற்றுக் கொண்டதையும் (அளபெடை பற்றிய விளக்கம்—பக். 41) இலக்கண விளக்கம் எப்படி நன்னூல் கருத்தை மறுத்து ஒதுக்கியது (ஙகரம் மொழிக்கு முதலில் வரும் என்பது பற்றி—பக். 51) ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதையும் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளார். இவை இந்த உரை சுவாமிநாதத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு மட்டுமின்றி பொதுவாக இலக்கண ஆராய்ச்சியில் சில தெளிவு உண்டாக்கும் பான்மை உடையது என்பதைக்காட்டி இலக்கண ஆராய்ச்சியில் ஒரு நல்ல இடத்தைப் பெற தகுதி பெற்றது என்பதையும் வலுயுறுத்துகிறது.

இறுதியாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் மொழி நிலையைப்பற்றி சுவாமிநாதக் கருத்து விளக்கமாக மட்டுமின்றி தானே சில உண்மைகளைக் கண்டு கூறியது சிறப்பாக எடுத்துக்காட்டத் தக்கது.

'அக்காலத்து இக்காலம் போலத் தமிழின்கண் வட சொற்களும் திசைச்சொற்களும் பயின்று வராமையானும் காலம் நோக்கி நன்னூலார் ஆளுதலானும் அக்காலத்து இயற்றமிழ் போல இக்காலத்து வடசொற் திசைச்சொல் கலவாது செய்யுட்கூறின் இகழப்படுதலானும் புதியன புகுதலும் வழுவல காலவகையினுலே என்ப ஆகலானும் இக்காலத்துள்ளாரிற் சான்றோராகிய புலவோர் செய்யுட்களிலும் நிகண்டிலும் பயின்று வருதலானும் இவ்வாசிரியர் கூறினர் என்பது உணர்க' (பக்-51).

இது உரையாசிரியர் சுவாமிநாதத்திற்குத் தந்த விளக்கம். இதற்கு மேலாக வழக்கிலுள்ள புதிய மொழி முதல் எழுத்துக்களையும் விதந்து எடுத்துச் சொன்னது மொழி வரலாற்று ஆய்வுக்குப் பெரிதும் துணைபுரியும் தன்மை வாய்ந்தது.

'இக்காலத்தில் திசைச்சொல்லும் வடசொல்லும் மிகுந்து பயின்று வருதலின் அவை இயற்றமிழில் வருங்கால் யகரத்தின் முன் இகரமும் ரகரத்தின்முன் அ இ, உ என்னும் மூன்றும் லகரத்தின்முன் இ, உ என்னும் இரண்டும் சேர்ந்து நடக்கும் என்றார். இவை திசைச்சொல்லும் வடசொல்லும் ஆம் என அறிதற்கு இயற்றமிழார் இட்ட குறிகளை நீக்கி இக்காலத்தார் மொழிக்கு முதலாகச் செய்யுட்கண் வழங்குவர். அஃதும் புதியன புணர்ப்பும் வழுவல என்றமையானே மொழிக்கு முதலாம் என்றவாறு இறந்தது தழீஇய எச்ச உம்மையானே இகர முதலியன குறிகள் சேர்ந்து வழங்குவனவும் இறந்து படாமையின் அவ்வாறு வழங்கினும் கொள்க என்பதாம்... இனிமொழிந்த பொருள்வயின் என்ற அவ்வயின் மொழியாதகனை முட்டின்றி முடித்தல் என்னும் உத்தியானே டகரத்திலும் அவ்வாறு சில அருகி வருவனவற்றை **நீக்கியுமாம்** என்னும் உம்மையை எச்ச உம்மையாக்கி விலக்காது கொள்க. அவற்றிற்கு உதாரணம் இடமானம், இடக்கயம், இடால்,

இடாக்கு என்று இகரக்கூறி கூடியும் டம்பக்கம், டாக்கு. டில்லி, டீகு, டௌயாம் எனக் குறி இன்றியும் வந்தன காண்க.

முன்னூலார் விலக்கியன இக்காலத்து இலக்கியங்களில் வழங்கலான் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்ப வேண்டுதலின் அவற்றைத் தழுவி இலக்கணம் நாட்டலின் இது தான்காட்டித் தனது நிறுத்தல் என்னும் மதம்' (பக். 52, 53).

உரையில் எடுத்தாளப்பட்ட இலக்கண இலக்கிய நூல்கள்:

திருக்குறள், நாலடியார், திருவருட்பயன், கந்தபுராணம், கூர்மபுராணம் ஆகியன. முத்தொள்ளாயிரம், நாலடியார், மலைபடுகடாம், யாப்பருங்கலவிருத்தி, முத்துவீரியம் ஆகிய நூல்களிலிருந்தும் மேற்கோள் உள்ளன. ஆனால் அவை அந்நூல்களிலிருந்து நேரடியாக எடுத்துக் கொள்ளப்படாமல் பிற இலக்கண மேற்கோளிலிருந்தே எடுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று எண்ண வேண்டியுள்ளது; ஏனெனில் அந்த உதாரணங்கள் அனைத்தும் ஏனைய இலக்கிய உரை நூல்களில் எடுத்தாளப்படுபவை. மேலும் உரையாசிரியர் இலக்கண நூல்களைப் பாயிரத்தின் உரையில் குறிப்பிடும்போது 'அகத்தியம், தொல்காப்பியம், அபிநயம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், நம்பியாண்டார் அகப்பொருள், பன்னிருபடலம், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம், முதலாய' (பக் 5) என்ற நூல்களைக் குறிப்பிட்டுள்ளாரே தவிர முத்துவீரியம், யாப்பருங்கலவிருத்தி ஆகியவற்றைக் குறிப்பிடவில்லை. எனவே உரைக்கோ நூலுக்கோ மேற்கோள் நூல்களை ஆராயும்போது ஆசிரியர் எங்கெந்தநூல்களிலிருந்து மேற்கோள்களை நேரடியாக எடுத்தாண்டுள்ளார் என்பதைக் காணவேண்டும். இதுவே, தமிழ்க் கல்வியின் வரலாற்றை (History of Tamil Study) அறிய உதவி செய்யும்.

சுவாமிநாத மூலமும் விருத்தி உரையும்

எழுத்ததிகாரம் (எழுத்தாக்க மரபு மட்டும்)

சிறப்புப் பாயிரம்

காப்பு

பூமகளும் பாமகளும் போற்றும்இம வான்மகளும்
கோமகளும் கொண்டார்கைக் குஞ்சரமே – மாமகிமைத்
தொன்னூற்கு ளுண்டாய்ச் சுவாமிநா தப்பெயராம்
இந்நூற்குக் காப்பாகு மே

இதன் பொருள் வெளிப்படை. சரவண பவ முன்னிற்க

பூமிசை பன்மொழியின் வடவேங்கட முக்கடற்குட்
புணர் தமிழ் ஐந்தியல் நிகண்டாய்ந்தார் எளிதின் உணரத்
தோமின் முந்நூல்வழி ஓர் நூல் வேண்டுமெனத்
துறைசைச் சுடர்மணி சுப்பிரமணிய குருமணி பார்த்தருள
ஆம் இது என்றக் குருபதமும் திருக்குறிப்பும் தலைக்கொண்டு
அகத்தியனைச் சிவசுப்பிரமணியனென் ஈன்ற
சாமி கவிராசன் நதிருகுலத்தோன் கல்லிடையூர்ச்
சம்பனன் செய்தனன் சாமிநாதம் என்றிந்நூலே

இதன் பொருள் :

பூமிசை விளங்கிய நான்முகக் கடவுளும், மாமிசை விளங்கிய மணிமறு மார்பனும், இன்னுங் காணாப் பொன் னடிக் கமலம் தன்னடியார்கள்தாம் பெறும் பொருட்டாய்

கேரளப் பல்கலைக் கழகப் பிரதியில் சுவடி எண் 6435—ல் "சுவாமிநாதம் பஞ்சலக்ஷணம், கல்லிடையூர் சாமிக்கவிராயர்" என்று தொடக்கத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.

அருமறை யாகமம் ஆதிய எவையுந் திருவருள் புரிந்த சிவ பரம் பரனையும், அனையவான் பொருளின் மனம், மொழி, மெய்யாய்க், கனிச்சுவை கலந்தெனக் கலந்த பெண்ணமுதையும், ஐங்கரத் தொரு கோட்டு ஆனை மாமுகனையும், செங்கதிர் வடிவேற் செந்திலாண்டவனையும் பணிந்தும், தொழுதும், பல கால் துதித்தும், ஆதிக்கோர் குகநாதனை வணங்கியும், வண் புகழ்த் திருத்தின மந்திரமூர்த்தி செண்பகராமனைச் சிந்தை யில் இருத்தியுந் துறைசையம்பதிவாழ் சுப்பிரமணிய குருபர மூர்த்திதன் அருள்நலம் பெற்றும்; அகத்தியம், தொல்காப்பியம் அவிநயம் முதற் பேரதிகாரப் பெருங் கடற்பரப்பும், நன்னூல், இலக்கண விளக்கம் முதலாய்ச் சிற்றதிகாரச் சிறுகடற் பலவும், ஆராய்ந்து அறிவோர் அறிக: இந்நூல்களின் அளவை யில் விரிவும் மெய் அநித்தமும் நோக்கித் தளர்பவர் உணர்ந்து தெளிவுறல் குறித்துச் சாமிநாதம் எனத் தன்பெயர் நிறீஇக் கல்லிடைப் பதிவாழ் கங்கைகுல திலகன் கவிக்கடல் கவி ராசத்துங்கன் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்கார மெனும் ஐந்தியன் முறைதெரித்து அருள்செயும் தமிழ்நூல். எனை ஈன்றெடுத்தோன் இயற்றும் நூலாதலின் நன்னெறிச் செல்லாப் புன்மதிச் சிறியனும் யானே உரைசெய்குவன் எனத் துணிந்தனன். கற்றுணர் பெரியோர் மற்றிதை நோக்கிப் புகழினும் புகழ்க[1] இகழினும் இகழ்க; இச்சை மீதூர்தலின் சீசவோன்றின்று[2]

இந்நூலாசிரியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங் காரம் என்று ஐந்து இலக்கணமும், ஐந்து அதிகாரமாகக் கூறுவான் தொடங்கி முன்னர் நூலின் இலக்கணம் உணர்ந்தே நூல் உணர வேண்டுதலின் மேல் வரும் செய்யுள் முதல், 'நூல்மரபு' கூறுகின்றார். அற்றேல் இத்தலைச் செய்யுள்

---

1. 'புகழ்கவிகள்' என்ற மூலபாடம் புகழ்க என்று திருத்திக் கொள்ளப்பட்டது.
2. 'நச்ச ஒன்று இன்று' கொள்ளலாம்.

என்ன நுதலிற்றோ எனின் ஆயிர முகத்தான் அகன்ற தாயினும் பாயிரம் அல்லது பனுவலின்றே என்பது ஆசிரிய வசனமாதலானும், பாயிரத்தை நூன்முகம் முகவுரை எனக் கூறப் படுதலானும், ஒருவர்க்கு அவயவம் பலவற்றுள்ளும் முகம் ஒன்றனைக் காணப் பெறின் அவர் இன்னார் என்று அறிதல் கூடுமாறுபோல முதற்கண் உள்ள சிறப்புப் பாயிரம் நோக்கின் அந்நூல் வரலாறுஅனைத்துந் தோன்றும். அஃதன்றி முகம் ஒன்றனை மறைத்து ஏனை அவயவங்கள் எல்லாங் காட்டினும் மயங்குவதல்லது இவர் இன்னார் எனத் தெளிதல் கூடாமைபோலச் சிறப்புப் பாயிரம் இன்றி நூல் உரைப்பின் நூல் வரலாறு தோன்றாது. நோக்கினோன் இடர்ப்படும் ஆதலானும், எந்நூல் உரைப்பினும் அந்நூற்குச் சிறப்புப் பாயிரம் இன்றியமையாச் சிறப்பிற்று ஆதலான் அச்சிறப்புப் பாயிரம் கூறுதல் நுதலிற்று.

அச்சிறப்புப் பாயிரமாவது ஓர் நன்மாணாக்கன் ஓர் நல்லாசிரியனை அடைந்து நூல்கற்பான் புகுந்துழி அந்நூல் பெருமை தோன்ற 1) நூல்பெயர் இஃது என்பதூஉம்[1]; 2) அந்நூல் பலநூலும் ஆராய்ந்தறிந்து தெளிந்த வலியோர் செய்ததாயின் மற்றொருவராற் குற்றம் கூறுதற்கு இடமின்றாம்; எளியோராயின் அந்நூலையும் அந்நூல் கற்றோரையும் இகழப்படும் ஆதலின் அந்நூலாசிரியன் பெருமை தோன்ற நூல்செய்தான் பெயர் இஃது என்பதூஉம்; 3) அவ்வலியோருங் காலவகையாற் சில வேறுபடுப்பது அன்றி ஏனைய எல்லாம் முதல் நூலோடும் மாறுபாடின்றிச்[2] செய்யாக்கால் கற்போர்க்கு விதி விலக்குகளின் ஐயுறவு எய்தி அந்நூலின் மனஞ்செல்லாது வெறுப்புத் தோன்றும் ஆதலின், இவ்வையம் தீர்தற்பொருட்டு இந்நூலின் வழித்து இஃது என்பதூஉம்; 4) அந்நூல் வழங்கு நிலம் இஃது என்பதூஉம்; 5) அந்நூலின் நுதலிய பொருள்

1. வரலாறு அனைத்தும் தோன்றும்
2. மாப்பாடின்றி என்பது மூலபாடம்

இஃது என்பதூஉம்; 6) அந்நூல் கற்றதனல் எய்தும்[1] பயன் இஃது என்பதூஉம்; 7) அந்நூல் கற்றூர்க்கு உரியர் இவர் என்பதூஉம்; 8) முன்னர் இந்நூல் கற்றுணர்ந்தாரே அந்நூல் கற்றற்கு இயையும் என்னும் தொடர்பும், எனச் சிறந்தன வாகிய எட்டும், 1) இன்னுர் காலத்து உண்டாயிற்று எனக் காலமும், 2) இன்ன அவைக்களத்து அரங்கேறியது எனக் களமும், 3) இன்ன காரணத்தான் உண்டாயிற்று எனக் காரணமும், என அத்துணைச் சிறப்பின்ருகிய இம்மூன்றுங் கூட்டிப் பதினென்றுந் தோன்ற விளக்குதல் சிறப்புப் பாயிரம் எனப் பின்னர்க் கூறப்படுவதாம். நூற்பெயர் முதலிய எட்டும், நூல்செய்தார் காலத்து வழங்கும் கால முழுவதூஉம் நிகழ் வதாய்ப் பெரும்பயன்[2] உண்மையானும் எல்லா ஆசிரியரானும் கொள்ளப் படுதலானும் சிறந்தன எனவும், கால முதலிய மூன்றும் நூல்செய்தார் காலத்து மாத்திரையே நிகழ்வதாய்ச் சிறுபயன்படுதலானும் ஒருசார் ஆசிரியராற் கொள்ளப்படு தலானும் அத்துணை சிறப்பின்று எனவும் கூறினும்.

முன்னர் இவ்வாசிரியர் மேல்வரும் செய்யுள் முதனூல் மரபு கூறுகின்றமையின் இச்செய்யுள் யாவராற் கூறப்பட்டதோ எனின் 'தன்னுசிரியன்' தன்னோடு கற்றேன்; தன்மாணுக்கன், தகும் உரையான்[3] என்று இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே' என்பவாகலின் இவ்வாசிரியர்க்கும் மாணுக்கராய் உள்ளார் கூறியது என்க.[4]

இதன் பொருள்: மூவகை உலகங்களுள் இப்பூவுலகின் கண்ணே வழங்கப்படும் பல்வகைப்பாடைகளுள் வடவேங்கடங் கீழ்கடல் தென்கடல் மேல்கடல் என்னும் இந்நான்கு எல்லை யினை உடைய நிலத்து வழங்கப்படும் பாடையாகிய இயல்,

1. யதும் என்பது மூலபாடம்
2. பெருபயனும் என்பது மூலபாடம்
8. உரைகாரன் என்று நன்னூலில் (51) உள்ளது
4. என்ன என்பது மூலபாடம்

இசை, நாடகம் என்னும் மூவகைத்தமிழிற் சிறந்த இயற்றமிழின் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் ஐவகை இலக்கணங்களை முன்னர் நிகண்டு கற்றுச் சொல்லும், பொருளும் உணர்ந்து அச்சொல் முடிபு பொருள் முடிபுகளின்வேற்றுமைகளும் அவற்றின் செய்கை வேற்றுமைகளும் உணர வேண்டும் என்னும் விருப்பு உடையார் எளிதாக உணர அகத்தியம், தொல்காப்பியம், அவிநயம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், நம்பியாண்டார் அகப்பொருள், பன்னிரு படலம், யாப்பருங்கலக் காரிகை, தண்டியலங்காரம் முதலாய குற்றமற்ற முதனூல், வழிநூல், சார்புநூல் என மூவகைத்தாய்க் கூறப்படும் நூல்களின் வழித்தாய் ஓர் இயற்றமிழ்நூல் இக்காலத்திற்கு இயையச் செய்தல் வேண்டும் எனத் திருவாவடுதுறை என்னும் திருப்படை வீட்டின் கண்ணே[1] எழுந்தருளியிருக்கின்ற ஞானப்பிரகாசத்தையுடைய மணியொன்றாயினன் சுப்பிரமணியன் என்னும் பெயரைத் தனக்கு இயற்பெயராய்க் கொண்டு, குருவாயுள்ளார் பலரும் தங்கள் முடிமிசைச் சூட்டிக் கோடற்குரிய மணிஒன்றாயினன் திருநோக்கம் பாலித்தருளிச் செய்ய, ஈண்டிக் குருநாதன் அருளிச் செய்தது இயையும் எனக் கருதிய அக்குருநாதனது திருப்பாதத்தையும் திருவடியார் பலரையும் ஈடேற்றல் குறித்துத் திருவுள்ளத்தின்கண் நிகழ்ந்த திருவருட்குறிப்பையும் தனது சிரத்தின் மேற்கொண்டு அகத்திய மாமுனியைத் தான் எனச் சிவசுப்பிரமணியன் என்னும் பெயரினையுடைய தன்மகவாகப் பெற்ற சாமி என்னும் இயற்பெயருங், கவிராசன் என்னுஞ் சிறப்புப் பெயருங் கூடிச் சாமிகவிராசன் என்றோர் பெயர் ஆயினனாக[2] கங்கைகுலமாகிய வேளாண் மரபில் உதித்தோன், கல்லிடைக் குறிச்சி என்னும் ஊரின்கண்ணே இருக்குஞ்செல்வன் சாமிநாதம் என்னும் பெயரினால் இந்நூல் செய்தான் என்றவாறு.

---

1. வீட்டில் கன்றான் எழுந்யிருளி என்பது மூலபாடம்
2. ஆயினாக என்பது மூலபாடம்

மூவுலகின் வழங்குவதன்றி ஏனை இருவகை உலகத்தும் ஆரியருமேயன்றித் தமிழ்வழங்காமையிற் **பூமிசை** எனவும்,

பதினெண்பாடையேயன்றிப் "பத்தோடொன்பது பாடை நூல்களும்" என இலக்கணக் கொத்தின் (6. 1) எடுக்கப்படுதலானும் இக்காலத்துப் புதியனவாய்ப்பல பாடைகள் வழங்குதலானும் **பன்மொழியின்** என்றும்,

தமிழ்நாட்டிற்கு எல்லை தொல்காப்பியத்தின் வடவேங்கடந் தென்குமரி (தொல். பாயிரம்) யெனக் கூறிக் கிழக்கெல்லை மேற்கெல்லை இரண்டுங் காட்டாமையின் இவ்விரண்டெல்லையும் கடல் என்பது தோன்றுதலான் நன்னூலிற் (பாயிரம் 8–வது வரி) கூறிய குணகடல் குமரி, குடகம், வேங்கடம்' என்பவற்றுள் மேற்கெல்லையாகிய குடகம் கரையேயன்றி அப்பால் ஓர் நாடின்மையின் மேற்கெல்லை மேல்கடலே என்பது கருதி இலக்கண விளக்கத்தின் மேல்கடல், கீழ்கடல், வேங்கடங் குமரி (சிறப்புப் பாயிரம் வரி 6) என்றூர். அவ்வாறே தெற்கு எல்லையாகிய குமரியுங் கடற்கரையேயன்றி அப்பால் ஓர் நாடு இன்மையின் வடக்கெல்லை வேங்கடமும் ஏனைய மூன்று எல்லையும் கீழ்கடல், தென்கடல், மேல்கடலும் ஆதலால் சுருங்கச் சொல்லல் எனும் அழகு தோன்ற **வடவேங்கடமுக்கடற்குள்** என்றும்,

மூவகைத் தமிழ்நூல்களுள் இயற்றமிழ் நூல் ஒன்றுமே அறமுதலிய நால்வகைப் பயனும் உணர்த்தும் நூல்களின் பொருள் உணர்த்துவதற்குக் கருவியாவதன்றி ஏனை இசைத் தமிழ்நூல், நாடகத் தமிழ்நூலும் கருவியாகாமையானும், அவ்விருவகை நூலும் உணர்தற்குங் கருவி இவ்வியற்றமிழ் நூலே ஆதலானும், இதன் சிறப்பும் அவைகளின் சிறப்பு இன்மையும் தோன்றப் **புணர்தமிழ் ஐந்துஇயல்** என்றும்,

நிகண்டு கற்றுச் சொல்லும் பொருளும் உணர்ந்தார் இலக்கண நூல் கற்றதனல் ஓராப்பயன் இன்மையின் **நிகண்டு ஆய்ந்தார்** என்றும்,

அகத்தியம் தொல்காப்பிய முதலாய்த் தொல்லாசிரியர்கள் கூறிய நூல்களுள் பலவேறு வகைப்பட்டுக்கரை காண்டற்கு அரிதாய்க் கடல்போல விரிந்து கிடத்தலின், அவையெல்லாம் வலியோர்க்கு அன்றி எளியோர் உணர்தற்கு அருமைத்து ஆகலின் **எளிதுணர்** என்றும்,

முதனூல், வழிநூல், சார்புநூல் என்னும் மூவகை நூலிற்கும் இது பின்னூல் ஆதலின் **வழியோர் நூல் வேண்டும் என** என்றும்,

விண்ணின் கண்ணிலிருந்து உலகிருள் அகற்று ஞாயிற்றிற்கு விண்மணி என்று பெயராயினாற்போலத் துறைசையின் கண்ணிருந்து மனவிருள் அகற்றுதலின் **துறைசைச் சுடர் மணி** என்றும்,

சகல உயிர்கட்குங் குருமூர்த்தியாகிய சிவனுக்கும் சுப்பிரமணியன் குரு எனக் கூறப்படுதலின் பெயரைத் தனக்கு இயற்பெயராய்க் கோடலிற் குருவாய் உள்ளார் மலர்க்குஞ் சிரோமணி ஆயினான் என்பது தோன்றச் **சுப்பிரமணிய குருமணி** என்றும்,

தீவகமாம் எனக் "குருவாய் வந்து காதன் திருநோக்கால் பரிசத்தாற் திகழும் வாக்காற், பாவனையால், மிகு நூலால், யோகப்பண்பால். பரவி வரு மலத்திரியாற் பாச நாசம் மேவ அருள் உதவும்" என்பவாகலிற்[1] **திருநோக்கத்தைப் பார்த்து** என்றும்,

ஏனைய எல்லாம் அடங்க **அருள** என்றும்;

அக்குருநாதரின் திருநோக்கம் முதலாயின பேரின்[2] ஆகாதன ஒன்று[3] இல்லையாகலின் இது முடியும் எனத் துணிந்து

1. என்பகவகாலில் என்பது மூலபாடம்
2. சேரின் என்று இருத்தல் நலம்
3. போன்று என்பது மூலபாடம்

தன்னடியார் பலர்க்குள்ளும் இப்பணியை என்னிடத்தில் பணித்தமையால் யான்பெரும் பாக்கியம் பெற்றேன் என்றும், கிழவால்[1] திருப்பாதத்தை வணங்கிப்பணித்துத் தலைகொண்டான் என்பது தோன்ற **ஆம் இது என்றக் குருபதமுந் திருக்குறிப்புந் தலைக்கொண்டு** என்றும்;

கல்வி மேம்பாடுடையார்க்கும் மக்கட்பேறு எய்துதல் அரிதாம்; எய்தினும் அம்மக்களும் கல்விமேம்பாடுடையராதல் அரிதாம்; அஃதன்றியும் சிறந்த பெயருடைத்தாதலும், சிறந்த குலத்துத் தோன்றுதலும், சிறந்த நகரத்து இருத்தலும் செல்வத்தோடு கூடி வாழ்தலும் அரிதாம் ஆகலின் அக்குறைபாடுகள் ஒன்றும் இன்றி இவ்வாசிரியர் எல்லாச் செல்வமும் உடையார் என்பது தோன்ற அகத்தியனைச் சிவசுப்பிரமணியன் என ஈன்ற **சாமிகவிராசன் திருக்குலத் தோன் கல்லிடையூர்ச் சம்பனன் செய்தனன் சாமிநாதம் என்று இந்நூல்** என்றும் கூறினர்;

இவற்றுள் சுவாமிநாதம் என்னும் நூல்பெயரும் சுவாமிக் கவிராயர் என்று நூல் செய்தான் பெயரும் கூறப்பட்டது,

1 தமிழ்தரு தென்பொதிகைமலை கயிலைமலை கமலஞ்
சங்கம் இவற்றிறைவருக்குப் பொருளை மலர்வாயால்
உமிழ்குருவாய் ஆறுள்எழுத்துஓர் எழுத்தாய் செந்தூர்வாழ்
ஒருகுமரன் இருசரண் என்னுள்ளத்துறைத்த வளத்தால்
சிமிழ்அனைய களபமுலைப் பூமயிலேமுதியோர்
செப்புஎடுத்துச் சொற்பொருள் யாப்புஅலங்காரம் எனும்ஐந்
தமிழ்தின் இலக்கணவிரி ஓரொன்று ஒருமூன்றுஇயலாய்
அடக்கிஇச் சுவாமிநாதத்தின் மொழிகுவனே

என்பது செய்யுள்.

---

1. பொருள் விளங்கவில்லை

மேற்பாயிரத்துள் 'தமிழ் ஐந்து இயலும்' கூறுகின்றார் என்றமையானே முன்னர் எழுத்து இலக்கணத்தை எழுத் ததிகாரம் எனக் கூறுகின்றார். ஆதலின், அவ்வதிகாரம் எழுத்ததிகாரம் என்னும் பெயர்த்து.

எழுத்ததிகாரம் என்பது எழுத்தின் அதிகாரத்தை உடைய தொகுதி என ஆறும் வேற்றுமைத் தொகைக் களத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய் ஓத்தின் தொகுதிக்கும் காரணக்குறியாயிற்று. எழுத்து என்பது முதல், சார்பு எனப்பின்னர் வகுக்கப்பட்டனவாம். அவற் றிற்கு எழுத்து என்னுங்குறி மேற்காட்டுதும். அதிகாரம் என்பது அதிகரித்தல், அஃது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று ஓரிடத்தில் ஒருசொல் நின்று பல ஓத்துக்களுக்கும் பல செய்யுட்களும்[1] தன்பொருளே குறித்து வரச்செய்வது. ஏனைய ஒன்று: ஓரிடத்தில் நின்ற சொல் பல செய்யுட்க ளோடும் சென்று இயைந்து தன்பொருளைப் பயப்பிப்பது. இவற்றுள் ஈண்டு அதிகாரம் என்றது முன்னையது. அதிகாரத்தை உடையது என எழுத்தைக் குறித்து வரும் பல ஓத்தினது தொகுதி எழுத்ததிகாரம் என்றவாறாயிற்று. இவற்றிற்கு இவ்வாறன்றி எழுத்தின் அதிகாரத்தையுடைய படலம் என உரைப்பாரும். எழுத்தினை உணர்த்திய அதிகாரம் என விரித்து எழுத்து என்றது எழுத்து இலக்கணத்தை, அதிகாரம் என்றது முறை, ஆதலின் எழுத்து இலக்கணத்தை உணர்த்தும் முறைமை என உரைப்பாரும் உளர்.

"ஒருநெறி யின்றி விரவிய பொருளாற்
பொதுமொழி தொடரினது படலமாகும்"

என்ப ஆகலின் எழுத்து ஒன்றன் இலக்கணமே இவ்வதி காரம் முழுவதூஉம் வருவதன்றி ஏனையவற்றின் இலக்கணம் விரவி வாராமையானும் படலம் என்பது காப்பிய உறுப்பாக வருதல் அல்லது இலக்கண நூல் உறுப்பாய் ஆசிரியர்

1. செய்யுட்களுக்கும் என்றிருத்தல் நலம்

தொல்காப்பியனர் முதலாயினோர் ஓதல் இன்மையானும்[1] படலம் என்றல் பொருந்தாது எனவும், எழுத்து இலக்கணத்தை உணர்த்தும் முறைமை என்றதனால் தொகுதி என்பது அமையாது எனவும் கூறி மறுக்க. அற்றேற் பன்னிரு படலம் என இலக்கண நூல் உறுப்பாகக் கொண்டார் உளராலோவெனின் அவரும் இவர் கூறியதுபோலக் கூறினர் என்பது உணர்க. இது பிறிதொரு படாஅன் தன் மதம் கொளல் என்னும் மதம். இத்தொகுதியை முறையின் வைப்பு என்னும் அழகினனே எழுத்தின் இலக்கணமாகிய பத்தையும்[2] எழுத்தாக்க மரபு என ஓரியலாகவும் புறத்து இலக்கணமாகிய 'பதம்' புணர்வு, இரண்டனுள் பதத்தைப் பதமரபு என ஓரியலாகவும், புணர்ச்சியைப் புணர்ச்சி மரபு என ஓரியலாகவும் வைத்துக் கூறுகின்றார். இவற்றுள் விதிக்கப் படுவன கருவியும் செய்கையும் என இரண்டு; அவற்றுட் கருவி முன்னைய இரண்டு இயலானும் செய்கை பின்னையது ஓரியலானும் கூறப்படும். அவை எல்லாம் ஆங்காங்கு உணர்க. அம்மூவகை இயலுள் ஈண்டு எழுத்தாக்க மரபு கூறுகின்றார். அவற்றுள் இத்தலைச் செய்யுள் என்னுதலிற்றோவெனின் வழி படுதெய்வ வணக்கஞ் செய்து மங்கல மொழி முதல்வகுத்து எடுத்துக் கொண்ட இல்க்கண இலக்கியம் இனிது முடியும் எனச் சிறப்புக் கூறுதல் நுதலிற்று. தற்சிறப்பாவது 'தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும் எய்த உரைப்பது தற்சிறப்பாகும்' என்பதனன் அறிக. எழுத்து, சொல், என்னும் தமிழ் உறுப்புகளும் மங்கலமொழி என்பதற்கு ஐயம் இன்மையில் 'தமிழ்தரு தென்பொதிகை' என்று எடுத்துக் கொண்டார்.

இத்தமிழைத் தரும் தென்பொதிகைமலை, கயிலாயகிரி, தாமரைப்பூ, சங்கப்பலகை என்று சொல்லப்பட்ட இந்நான்கு

1. ஓதாமையாலும்
2. பெயர், எண், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி ஆகிய பத்தைக் குறிக்கும்

இடத்துக்கும் முதல்வராகிய அகத்தியன், சிவன், பிரமன், சங்கத்தார் என்னும் இவர்களுக்கு அவரவர் விரும்பும் பொருள்களைத் தனது மலர்போலும் வாயினுனே உபதேசித்த குருமூர்த்தமாகிய சிவபீசம் ஐந்தும், சத்தி பீசம் ஒன்றும் ஆத்த ஆறு எழுத்தும் பீசகாகாம் ஓர் எழுத்தாய்க் கொண்டு திருச்செந்தூரின்கண்ணே எழுந்தருளி யிருக்கின்ற ஒப்பற்ற குமரன் திரண்டு[1] பாதமும் என்பது மனதின்கண்ணே தங்கிய மாட்சிமையினுனே முன்னோராற் சொல்லப்பட்ட எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என்னும் ஐந்துவகை அமிழ்தம் போலும் இலக்கணங்களின் விரிவை எல்லாம் ஓரிலக்கணம் மூன்று மூன்று இயலாக அடக்கி இச்சுவாமி நாதம் என்னும் நூலிற் கூறுவன் என்றவாறு.

'சிமிழ் அனைய களபமுலைப் பூமயிலே' என்பது மகடூஉ முன்னிலை; மகடூஉ முன்னிலை கூறியது என்னெனில் வேத முதலிய நூல்கள் அனைத்தும் சிவன் உமையவட்கு உபதேசிக்க வந்து உலகெலாம் விளங்கலிற் சிவன் கூற்றும் உமையவள் கேட்பவளுமாகக் கூறுவதாம் என்க.

'தமிழை' என்னும் இரண்டன் உருபும் 'குமரனது இரு சரண்' என்னும் ஆறன் உருபும் 'உளத்தின்கண்' என்னும் ஏழன் உருபும், சங்கர் ஆகிய இவற்றிற்கு முதல்வராகிய இறைவர் என்று இடையே ஆகிய என்னும் பண்பு உருபும் ஆறு எழுத்தும் என்னும் முற்றும்மையும் விகாரத்தால் தொக்கன

'உமிழ்' என்றது ஈண்டு உபதேசத்தின் மேல்நின்றது. தமிழைச் சீரணைத்தாரணைஞ் செய்து உலகின் விளக்கிய அகத்தியனுக்கும் தமிழையன்றி ஆரியமும் வேதாகம சாத்திர புராணங்களும் தாமே செய்த பரம சிவனுக்கும் சகல சிருட்டியுஞ் செய்து கலைமகளைத் தன் நாவின் கண்ணே வைத்துச்

1. இரண்டு என்றிருத்தல் நலம்.

சகலகலாவல்லவனாகிய பிரமனுக்கும் இலக்கண இலக்கிய முடிவுகளெல்லாம் உணர்ந்து முடித்துக் காட்டிக் கற்றோர் என்னும் கடற்குத்தாம் வரம்பாகிய சங்கப் புலவோர்க்கும் அவரவர்[1] விரும்பும் பொருளை எல்லாம் உபதேசித்த சுப்பிரமணியத் தெய்வம் என்னும் பரம்பொருள் என் உள்ளத்தின் கண்ணே உறைதலால் யான் துடங்கிய பொருள் இனிது முடியும் என்பது குறித்து இலக்கணங்களை மொழிகுவன் என்று புகுந்தனம்.[2] இனிது நுதலிப் புகுதல் என்னும் உத்தி.

2. மொழிக்குக் காரணமாகிப் பரையருளான் மூலமுகிழ்
நாதகாரியமாம் விந்தொலி;ஓர்ந்தெழுதின்
எழுத்து, அதுதான் பெயர், எண், முறை, பிறப்பு, உரு, மாத்திரை முன்,
ஈறு இடை போலியும், பதமும், புணர்வும் என்று ஆறு இரண்டாம்;
சுழித்த முதல் சார்பு; உயிர், மெய், குறில், நெடில், சந்தி, வினச்
சுட்டு, வன்மை, மென்மை,இடை,அறுகுறுக்கம், உயிர்மெய்
அழுத்து ஆய்தம் ஈரளபு, போலி, விடம், அமுதம், ஆண், பெண், அலி,
இவையவற்றுள் பெயரென எண்ணுகவே.

என்பது என் நுதலிற்றோ எனின் எழுத்து இன்னது என்பதூஉம் அஃது இனைத்து என்பதூஉம் அங்ஙன நிறுத்த முறையானே எழுத்தின் பெயர் இன்ன என்பதூஉம்கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்:

மொழிக்கு..... ஆறு இரண்டாம் (முதல் இரண்டு வரிகள்) என்பது பராசத்தி அருளினாலே மொழிக்குக் காரணமாகி மூலாதாரத்தின் கும்புநாதமாகிய சிவ தத்துவத்தினின்றும்

1. அவ்வா என்பது மூலபாடம்.
2. புகன்றமை என்று இருத்தல் நலம்.

காரியப்படும் விந்துவாகிய சத்தி தத்துவத்தின் எழுத்து அறியப்படும் ஓசையைச் செவிப்புலனால் அறிந்து ஆணி முதலியன கொண்டு எழுதப்படின் எழுத்தாம். அது 1) இன்ன பெயரின என்றும், 2) பெயர் இத்துணைத்து என்று எண்ணும், 3) இம்முறைத்து என்று முறைமையும், 4) இவ்விடங்களில் பிறக்கும் என்னும் பிறப்பும், 5) இவ்வுருவின என்னும் வடிவும், 6) இன்ன அளவின என்னும் மாத்திரையும், 7) முதல் நிற்பன இவையென்னும் முதல் நிலையும், 8) ஈற்றின் நிற்பன இவை என்னும் இறுதி நிலையும், 9) இடையில் நின்று மயங்குபவை இவை என்னும் இடைநிலை மயக்கமும், 10) சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்களாய் இசைக்கும் என்னும் போலியும் ஆகிய பத்தும் 11) அவ்வெழுத்தானாகிய பதமும், 12) அப்பதம் தம்மொடும் பிறவொடும் புணரும் புணர்ச்சியும் கூட்டப் பன்னிரண்டு வகையாம் என்றவாறு. தான் (2-வது வரி) என்பது அசைநிலை கவிப்பொருள் அன்றி ஏனைய எல்லாம் இசை எச்சம். ஈண்டு[1] என்பது வரிவடிவை. அது மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்பொருட்டு வட்டம், சதுரம் முதலிய வடிவிற்றாக வேறு வேறு எழுதப்பட்டுக் கட்புலனாகியே நிற்பது; என்னை?

"மொழிக் காரணமா நாத காரிய வொலி
யெழுத்தது முதல் சார்பென விரு வகைத்தே" (இ. வி. 3)

என்றும்

"எண்பெயர் முறைபிறப் புருவ மாத்திரை
முதலீ றிடை நிலை போலி யென்றா
பதம்புணர் பெனப்பன் னிருபாற் றதுவே" (நன். 57)

என்றும் கூறினர் ஆகலின் எழுத்திற்குக் காரணம் விந்து என்னும் சத்தி தத்துவம் எனக் கொள்ளாது நன்னூலார்

1. இச்சொல் சூத்திரத்தில் காணப்படவில்லை.

"... ... ... அணுத்திரள் ஒலி
எழுத்து ... ..." (நன். 58)

என்றது என்னை எனின் அது சமண மதத்தோர் கொள்கை என்பது அறிக. பெயர் அறிந்தே ஏனைய அறிய வேண்டுதலின் முன்னூலார்[1] போல எண்ணை முற்கூறாது பெயரை முற்கூறினார். பெயர் முதலிய பத்தும் எழுத்தின் அகத்து இலக்கணம் என்றும், ஏனைய புறத்து இலக்கணம் என்றும், அறிதற்கு உம்மை[2] கொடுத்துப் பிரித்தார். பெயர் முதலிய பன்னிரண்டும் இங்ஙனம் தொகுத்தலின் இனிது தொகுத்துச் சுட்டல் என்னும் உத்தி. மேல் அவற்றின் இலக்கணம் தனித் தனி வகுப்பது வகுத்துக் காட்டல் என்னும் உத்தி.

இனி 'சுழித்த... எண்ணுக' (3, 4 வது வரிகள்) என்றது 'முதல்சார்பு' என்பன முதல் 'அலி என்பது' ஈறுகக் கூறப் படும் இவைகள் எழுத்தின் அகத்து இலக்கணம் பத்தனுட் பெயரினது இலக்கணமாம் என்று அறிக என்றவாறு, 'சுழித்த' 'அழுத்து' என்பன தொடை நோக்கி நின்ற அடைகள். இது முன்மொழிந்து கோடல் என்னும் உத்தி.

தம்மால் இயலும் சார்பெழுத்திற்குக் காரணமாகி முதல் நிற்றலான் முதல் எழுத்து என்றும், அவை தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும், பற்றுக் கோடு சார்ந்தும், தோன்றுதலால் சார்பு எழுத்து என்றும், உயிரானது மெய்களை இயக்குதல் போல் உயிரெழுத்துக்களை இயக்குதலான் உயிரெழுத்து என்றும், தமக்கு இனமாகி ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்துக்களை நோக்கில், தாம் குறியவாய் ஓரளவு இசைத்தலால் குற்றெழுத்து என்றும், தமக்கு இனமாகிய ஓரளபு இசைக்கும் குற்றெழுத்துக்களை நோக்கில்

1. இது நன்னூலாரையும் இலக்கண விளக்கத்தாரையும் குறிக்கும்
2. போயும் பதமும் (2வது வரி) என்று வருவதைக் குறிக்கும்

தாம் நெடியவாய் ஈரளபு இசைத்தலால் நெட்டெழுத்து என்றும், அகர இகரங் கூடி எகர ஏகாரங்களும், அகர உகரங் கூடி ஒகர ஓகாரங்களும், அகர இகர யகரங் கூடி ஐகாரமும், அகர உகர வகரங்கூடி ஔகாரங்களும் தோன்றலின் எ, ஏ, ஒ, ஓ, ஐ, ஔ என்னும் ஆறு எழுத்தும் சந்தி எழுத்து என்றும், சுட்டுப் பொருள் உணர்த்துதலால் சுட்டெழுத்து என்றும், வல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கில் தாம் மெல்லென்று இசைத்தலானும், மெல்லென்ற மூக்கு வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்து என்றும், மெல்லெழுத்தையும் வல்லெழுத்தையும் நோக்கில் தாம் இடைநிகரவாய் ஒலித்தலாலும், மிடற்று வளியிற் பிறத்தலாலும், இடையெழுத்து என்றும், கேண்மியா அறுகு என்றவற்றின் ஒரளபிசைக்கும் இகர உகர குறுகி அரையளபு இசைத்தலால் குற்றியலிகரம், குற்றியலுகரம் என்றும், ஈரளபு இசைக்கும்[1] ஐகார, ஔகாரம் குறுக்கம் என்றும், அரையளபு இசைக்கும் மகரமும், ஆய்தமும் குறுகிக் கால் அளபு இசைத்தலான் மகரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம், என்றும், உயிரும் மெய்யும் கூடி இசைத்தலான் உயிர் மெய் என்றும், ஆண்டு, அடுப்புக் கூட்டு போல எழுதப்படுதலான் ஆய்தம் என்றும், உயிர் அளபு எடுத்தலின் உயிரளபெடை என்றும், ஒற்று அளபு எடுத்தலான் ஒற்றளபெடை என்றும், சில எழுத்துக்குச் சில எழுத்து ஒற்றுமையாதலான் போலி என்றும் அவ்வவற்றிக்குக் காரணக்குறி ஆயினவாறு உணர்க. விடம் முதலிய ஐந்தும் செய்யுட்கண் விளங்குவன ஆதலின் அவற்றின் இலக்கணம் செய்யுளதிகாரத்திற் காட்டுதும். ஈண்டுப் பெயரெல்லாம் தொகுத்தலின் ஒன்றென முடித்தலானவற்றை உடன்படுத்திக் கூறினர். இப்பெயர்கள் ஆவி, உயிர் என்றும்.

---

1. இது பொருந்தாது. ஓரளவு இசைக்கும் என்றிருத்தல் வேண்டும். அல்லது 'ஈரளபு இசைக்கும் ஐகாரம் ஔகாரம் குறுகி ஓரளபு இசைத்தலான் ஐகார ஔகாரக் குறுக்கம் என்றும், என்றிருத்தல் நலம்.

உடம்பு, உறுப்பு, மெய், ஒற்று, உடல் என்றும், புள்ளி, அக்கேனம், தனிநிலே, ஆய்தம் என்றும், இத்தொடக்கத்துப் பரியாயங்களாய் வருவனவும் கொள்க.

3. எண், முதல் சார்பு இரண்டு; அவற்றுள் முதல்
உயிர் ஒற்று இரண்டு; ஆறு இரண்டு உயிர்,
மூவாறு உடல், இவ்விரி முப்பான்; ஆய்தம்,
ஒண்ணு குறள், உ, இ, ஐ, ஔ, மவ், வாய்தம், உயிர்மெய்
உயிரளபு, ஒற்றளபு எனச் சார்பின் வகைபத்து: அவற்றுள்
அண்ணுயிர் மெய் இருநூற்றுப் பதினறு, ஏழு உயிரின்
அளபு, பன்னென்று ஒற்றளபு, ஏனைய ஒவ்வொன்ருக
இன்முறையால் இருநூற்று நாற்பத்தொன்று இவ்விரியாம்;
விரியிரண்டும் தொகுத்து இருநூற்று எழுபத்தொன்று அவ்
வகல்வே[1]

நிறுத்த முறையானே எண்ணின் தொகையும், வகையும் விரியும், கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள் :

முன்னர் கூறிய எண்ணுவது முதல் எழுத்து என்றும்: சார்பு எழுத்து என்றும், இரண்டு தொகையாம். அவற்றுள், முதலெழுத்து, உயிர் எழுத்து எனவும், ஒற்றெழுத்து எனவும், இரண்டு வகைத்தாம். அவ்விரண்டனுள் உயிரெழுத்துப் பன்னிரெண்டும், ஒற்றெழுத்துப் பதினெட்டுமாய் இம்முதலெழுத்தின் விரி முப்பதாம். சார்பெழுத்து: 1) ஆய்தமும், பொருந்திய 2) குற்றியலிகரமும், 3) குற்றியலுகரமும், 4) ஐகாரக் குறுக்கமும், 5) ஔகாரக் குறுக்கமும், 6) மகரக் குறுக்கமும், 7) ஆய்தக் குறுக்கமும், 8) உயிர்மெய்யும், 9) உயிரளபெடையும், 10) ஒற்றளபெடையும் எனப் பத்து வகைத்தாம் அவற்றுள் உயிர் பன்னிரு பதினெட்டு இருநூற்றுப்பதினறும், உயிரளபெடை ஏழும், ஒற்றளபெடை பதினென்றும், ஏனைய ஆய்தமும் குறுக்கமும் ஓர் ஒன்ருக ஏழுமாய் இங்ஙனம் கூறிய முறை

1. எழுபத்தொன்ற வலகலவே – என்பது மூலபாடம். க. த. பிரதியில் திருத்தப்பட்டுள்ளது.

யானே இச்சார்பெழுத்தின் விரி இருநூற்று நாற்பத்தொன்றும். முதலெழுத்தின் விரி முப்பதும் சார்பெழுத்தின் விரி இருநூற்று நாற்பத்தொன்றும் கூட்டிய அவ்வெண்ணினது விரி இருநூற்று எழுபத்தொன்றும் என்றவாறு.

"உயிரு முடம்புமா முப்பது முதலே" (நன். 59)

என்றும்

"உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இ உ ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்" (நன். 60)

என்றும்

"உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயர்ஆய்தம்
எட்டு உயிரளபு எழுமூன்று ஒற்றளபெடை
ஆறேழ்; அஃகும் இம்முப் பானேழ்
உகரம் ஆறுறு ஐகான் மூன்றே
ஔகான் ஒன்றே மஃகான் மூன்றே
ஆய்தம் இரண்டொடு சார்பெழுத் துறுவிரி
ஒன்றொழி முந்நூற் றெழுபான் என்ப" (நன். 61)

என்றும் நன்னூலார் கூறிய சூத்திரங்களும்,

"உயிரும் உடம்பும் எனமுதல் இருவகைத்து அவற்றுள்
உயிர் ஈராறு மெய் மூவாறென்ப
அம்முப்பானும் அதனது விரியே" (இ. வி. 4)

என்றும்

"குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தமொடு உயிர்மெய் ஈரளபு ஐஔ
மஃகான் குறுக்கம் உள்உறுத்து ஒன்பதும்
சார்பின் பால என்மனார் அவற்றுள்
உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு உயிரளபேழ்
ஒற்றளபு பதினொன்று ஒன்றுஒன்று ஏனைய
ஆயிரு நூற்று எண்ணைந்தும் அதன்விரியே" (இ. வி. 5)

என்றும் இலக்கண விளக்கத்தார் கூறிய சூத்திரங்களும் நோக்கி அவற்றுள் நன்னூலார் எண்ணின விரி முந்நூற்றுப்

பத்தொன்பது என்றார். எழுத்து வேற்றுமையான் விரிதல் உயிர் மெய் மாத்திரையே யன்றி, ஏனைய எல்லாம் இட வேற்றுமையான் அன்றி எழுத்து வேற்றுமையான் விரியா மையானும், விரியுள்ளும் குற்றிகரக் குற்றுகரங்கள் முப்பத் தேழு முப்பத்தாறு என இடையொற்றுக்கள் டகர றகரங் ளொடு மயங்காது என நோக்காது கூறினமையானும், அஃது ஒழித்து இலக்கண விளக்கத்தார் கொண்ட எண்ணின் விரி இருநூற்றுநாற்பதும், அவர் கொள்ளாது நன்னூலார் கொண்ட ஆய்தக் குறுக்கம் கஃறீது, முஃடீது என்புழித் தன் அரை மாத்திரையினும் குறைதல் செவி கருவியாய் நோக்குழித் தோன்றுதலான், அஃது உண்டு என்று மதி நுட்பத்தால் துணிந்து, அஃது ஒன்றுங் கூட்டி இருவர் மாறுபாடொருதலை துணிதல் என்னும் மதம்பட இவ்வாசிரியர் சார்பெழுத்து இருநூற்று நாற்பத்தொன்று என்றார். இனி ஆசிரியர் தொல்காப்பியனார்

"சார்ந்துவரல் மரபின் மூன்று" (தொல். எழுத்து. 1)

எனச் சார்பெழுத்து மூன்று என்றார் அன்றே. இவர் பத்து என்றது என்னை எனின், அவர் செய்கை ஒன்றினையும் நோக்கி முன்னர் மூன்றெனக் கருவி செய்து பின்னர் ஏனைய வற்றையும் ஒருவாற்றால் தழுவுதலான், எதிரது போற்றல் என்னும் உத்தியானே செய்கையும் செய்யுளியலும் நோக்கி நன்னூலார் சார்பெழுத்துப் பத்து எனக் கருவி செய்தவாறே இவர் செய்தார் என உணர்க. இவை சார்பெழுத்து ஆவ தற்குக் காரணம் அவ்வவ்விதிச் சூத்திரத்தினிற் காட்டுதும், ஆங்காங்கு உணர்க.

4. அகராதி உயிர் ஈராறு அ, இ, உ வெவ்வாக் குறில் ஐந்து;
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ, நெடில் ஏழு; அ, இ, உத்
தகு சுட்டு; ஆ, ஓ, ஈற்று எ, யா முதலே இருபாற் சார் வினுக்;
கம்முதல் மூவாறு உடல்; அவற்றுள்

இகல் க, ச, ட, த, ப, ற, வலி மெலி ங ஞண நமன; இடை
யரல வழள
தாம் அ இக் கூட்டம் எ ஏ
மகிழும் அ, உக் கூட்டம் ஒ, ஓ, அ, இய்க் கூட்டு ஐகான் மற்று
அ இ வக் கூட்டம் ஔ இவ்வாறு சந்தி முறையே

என் நுதலிற்றோ எனின் பெயரிற்கும் எண்ணிற்கும் இலக்கணம் கூறியவழித் தொகுத்துச் சுட்டிய சிலவற்றை வகுத்து உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:

அகர முதல ஔகார இறுவாய் பன்னிரண்டும் உயிரெழுத்து என்றும், அவற்றுள் அ, இ, உ, எ, ஒ, என்னும் ஐந்தும் குற்றெழுத்து என்றும், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்து என்றும்; அ, இ, உ, என்னும் மூன்றும் சுட்டெழுத்து என்றும்; அ, ஒ இரண்டும் ஈற்றிலும், எ, யா என்னும் இரண்டும் முதலினும்; எ என்னும் ஒன்றும் ஈறுமுதல் ஆகிய ஈரிடத்திலும் பொருந்தி வரும் வினவெழுத்து என்றும்; ககர முதல் னகர இறுவாய் பதினெட்டும் உடல் எழுத்து என்றும்; அவற்றுள் வன்மையாகும் க, ச, ட, த, ப, ற என்னும் ஆறும் வல்லெழுத்து என்றும்; ங, ஞ, ண, ந, ம, ன, என்னும் ஆறும் மெல்லெழுத்து என்றும், ய, ர, ல, வ, ழ, ள என்னும் ஆறும் இடையெழுத்து என்றுமாம். அகரமும் இகரமும் கூடிய கூட்டம் எகரமும் ஏகாரமுமாம், அகரமும் உகரமும் கூடிய கூட்டம் ஒகரமும் ஔகாரமுமாம்.[1] அகரமும், இகரமும், யகரமும் கூடிய கூட்டம் ஐகாரமும், அகரமும், உகரமும் வகரமும் கூடிய கூட்டம் ஔகாரமுமாம்.

அகராதி ஈராறு (முதல்வரி) கம்முதன் மூவாறு (2-வது வரி) என முதலும் தொகையும் காட்டலின் ஔகார இறுவாய் னகர இறுவாய் என்பது பெற்றும், 'தகு' (2-வது வரி) 'மகிழும்'

1. ஓகாரமென்றிருக்க வேண்டும்

'மற்று' (3-வது வரி) என்பன தொடை நோக்கி நின்ற அடைகள். 'இகல்' (3-வது வரி) என்பது வன்கை இதலும் என்னும் பெயரெச்சப் பொருட்டாய் நின்றது. வினு எழுத்து எல்லாம் தொகுத்துக் காட்டலின் தன்னின முடித்தலான் யாவென்னும் உயிர்மெய்யையும் உடன் கூறினர். என்னை?

"அம்முத லீரா ருவி கம்முதல்
மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்" (நன். 63)

என்றும்

அவற்றுள்

"அ, இ, உ, எ, ஒக்குறி லைந்தே" (நன். 64)

என்றும்

"ஆ, ஈ, ஊ, ஏ, ஐ. ஓ, ஔ நெடில்" (நன். 65)

என்றும்

அ, இ, உ, இம்மூன்றுஞ் சுட்டே;[1] என்றும், எயா முதலும் ஆ, ஓ, ஈறனுமாறே என்றும் கூறினராகலின் இனி ஏ, ஓ, ஐ, ஔ என்னும் நான்கினையும் வட நூலார் சந்தியக்கரம் எனக் கூறுப ஆகலானும், ஏ, ஓ என்னும் இரண்டின் மாத்திரைக் குறைவே எகரம் ஒகரம் ஆதலானும், ஆசிரியர் தொல்காப்பியனர்

"அகர இகரம் ஐகாரமாகும்" (தொல். 54)

என்றும்

"அகர உகரம் ஔகாரமாகும்" (தொல். 55)

என்றும்

1. அ, இ, உம் முதல் தனிவரின் சுட்டே என்பது நன்னூல்-69

"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (தொல். 56)

என்றும்

"இகரமும் யகரமும் இறுதியின் விரவும்" (தொல். 58)

என்றும் கூறினமை பற்றியும் நன்னூல் உரையாசிரியர்[1] இவ்வாறே தழுவினராதலானும் எகர முதலிய ஆறு எழுத்துஞ் சந்தி எழுத்தெனெ இவ்வாசிரியர் கூறினர் என்பது உணர்க.

5. முறை, சிறப்பான் இனத்தான், அம்முதல் நடத்தல், பிறப்பு
முயற்சி, பொருள், அளவு, உருவும், ஏற்பன ஒப்பு இனமாம்;
நிறை, உயிராற், சூக்குமையாவ மூலவிந்தாற், புந்தி
நேர்ந்து தானனைக் கலந்து சிதறி மயிர் கருநீர்
உறழ எழுத்து ஒடுக்கு பைசந்தியதாய் நெஞ்சு உயிர்
சேர்ந்து, உருத்தெரித்து, உள்ளுணர்வு ஒலி மத்திமையாய்க் கண்டம்,
செறியும், உச்சி, நாசியுற்று; நா, அண்ணம், பல், இதழின்
செயலால் வைகரியாய் வெவ்வேறு எழுத்து ஆயிடுமே

என் நுதலிற்றோவெனின் நிறுத்த முறையானே முறையின் இலக்கணமும் அவற்றின் இனம் என்பதூஉம் பிறப்பின் பொது இலக்கணமும் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள் :

"முறை ... நடத்தல்" (முதல் வரி) என்பது சிறப்பினாலும் இனத்தினாலும் அகர முதலாக நெடுங்கணக்கினுள் வழங்கல் தானே நூலுள்ளும் முறையாம் என்றவாறு. குறிலினது விகாரமே நெடில். ஆதலால் குற்றெழுத்துச் சிறப்பான் முன்னிற்றலும், நெட்டெழுத்து அதற்கு இனமாய்ப் பின்னிற்றலும் பற்றிச் சிறப்பான் இனத்தான் என்றார். என்னை? சிறப்பினும் இனத்தினும் செறிந்தீண்டு அம்முதல் நடத்தல் தானே முறையாகுமே[2] (நன்.73) என்றார் ஆகலின்.

---

1. சிவஞான முனிவர் திருத்திய விருத்தி உரையில் (நன். 125) காணப்படுகின்றது,
2. 'முறை எனல் வேண்டும்' என்பது மூலப்பாடம்

இனிப் பிறப்பு ... ... இனமாம் (முதல் வரி) என்பது நெஞ்சு முதலியவாய்ச் சொல்லப்படும் பிறப்பினும், முயற்சியும், பொருளும், அளவும், உருவும் ஆகியவற்றுள் ஏற்புடைய ஒத்தலான் ஒன்றிற்கு ஒன்று பொருத்தமுடையவாகலின் இனம் என்றவாறு. முயற்சி அங்காத்தல் முதலியன பொருள்; பாலன், விருத்தன் ஆனாற்போலக் குறிலினது விகாரமே நெடில் ஆதலின் இரண்டற்கும் பொருள் ஒன்றென்று முதனூலில் நியமிக்கப்பட்ட பொருள்: அளவு, மாத்திரை, உரு — வடிவு அஃது ஒலிவடிவு, வரிவடிவு என இருவகைப்படும். உருவும் என்னும் உம்மையை எச்ச உம்மையாக்கிப் புணர்ச்சிக்கட்படும் செய்கையும் தம்மிற் சேர்ந்து வரும் சொற்கள் பலவாதலும் சந்த இன்பத்திற்கியையும் இன்னோரன்ன பிறவும் இனமாதற்கு இயைபுடையன முறையாதற்குங் கருவியாம் எனக் கொள்க. இவ்வினம் ஒத்தல் முழுதும் ஒத்தலும், ஒருபுடை ஒத்தலுமாம் எனக் கொள்க. இவ்வாற்றான் நெடுங்கணக்கினுள் அகர முதல னகர இறுவாய்க் கிடக்கை முறை ஒருவாற்றாற் காட்டுதும்.

அகரமுதலிய பன்னிரு உயிரும் தனித்தியங்கும் ஆற்றல் உடைமையானும், ககர முதலிய பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடி அல்லது இயங்கும் ஆற்றல் இன்மையானும், அச்சிறப்பும், அச்சிறப்பின்மையும் நோக்கி உயிர் முன்னும் மெய் பின்னுமாக வைக்கப்பட்டன. உயிர்களுள் அகரம் அங்காத்தல் மாத்திரையே முயற்சியாகலாம்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள் 1)

எனத் திருவள்ளுவ நாயனார் உவமை கூறியவாற்றானும் கண்ணன் எழுத்துக்களுள் அகரமாகின்றேன் என உண்மை கூறியவாற்றானும் 'அகர உயிர்போல் அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கு நிறைந்து' எனத் திருவருட்பயனில் (1) பதி இயல்பு கூறியவாற்றானும் எகர முதலிய சந்தி எழுத்து

ஆறினும் அகரம் கூட்டி வரும் என்றமையானும், அகரம் உயிரெழுத்தினுங் கலந்து நிற்கும் என்பது தோன்றலானும், இறைவன் எல்லாப் பொருளின் கண்ணும் கலந்து அவ்வவற்றின் தன்மையாயே நிற்குமாறு எல்லார்க்கும் ஒத்தமைபோல அகரமும் எல்லா எழுத்தின் கண்ணும் அவ்வவற்றின் தன்மையாயே நிற்குமாதலான், அச்சிறப்பு நோக்கி எல்லா எழுத்தின் முன்னர் அகரமும் அதற்கு இனமாகலானும், அவ்வகரம் ஒரு மாத்திரையாகலின் அவ்வகரமே இரண்டு மாத்திரையாய் நீண்டு விகாரித்தலானும் அவ்வகரத்தின்பின் ஆகாரமும் அவ்வங்காத்தல் முயற்சியோடு அவ்வண்பல்லடி நா விளிம்புறக் கூறும் முயற்சியானும் அகரத்தொடு அளவுஞ் சுட்டும் பொருட்டாதலும், ஒத்தலானும் ஆகாரத்தின்பின் இகரமும்; அதற்கு இனமாகலானும் மாத்திரை இரட்டித்து விகாரித்தலானும் இகரத்தின்பின் ஈகாரமும் அவ்வங்காப்பொடு இதழ்குவித்துக் கூறும் முயற்சியானும் சுட்டுப் பொருட்டாதலும், இகரத்தொடு அளவொத்தலானும் ஈகாரத்தின் பின்னர் உகரமும்; அதற்கு இனமாதலானும் மாத்திரை இரட்டித்து விகாரித்தலானும் உகரத்தின் பின்னர் ஊகாரமும், முறையே முன்னர் வைக்கப்பட்டன. எகர முதலிய ஆறெழுத்தும் சந்தி எழுத்து என்பது அறிதற்குப் பின்னர் வைக்கப்பட்டன. அவற்றுள் அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்து இசைத்து நிற்பது ஒன்றுதலானும், அ, இ, உ என்பனவோடு அளவொத்த லானும் ஊகாரத்தின் பின்னர் எகரமும், அதற்கு இனமாதலானும் மாத்திரை இரட்டித்து விகாரித்தலானும் எகரத்தின் பின்னர் ஏகாரமும் அகரமும், இகரமும், யகரமும் தம்முள் ஒத்திசைத்து நிற்பது ஒன்றுகலானும் ஏகாரத்தோடு அளவொத்தலானும் ஏகாரத்தின் பின்னர் ஐகாரமும், அகரக் கூறும் உகரக் கூறும் தம்முள் ஒத்திசைத்து நிற்பது ஒன்றுகலானும் அ, இ, உ, என்பவற்றோடு அளவொத்தலானும் ஐகாரத்தின் பின்னர் ஒகரமும் அதற்கு இனமாதலானும் மாத்திரை இரட்டித்து விகாரித்தலானும் ஒகரத்தின் பின்னர்

ஓகாரமும் அகரமும் இகரமும் வகரமும் தம்முள் ஒத்து இசைத்து நிற்பதொன்று ஆகலானும் ஓகாரத்தோடு அள பொத்தலானும் ஓகாரத்தின் பின்னர் ஔகாரமும் முறையே வைக்கப்பட்டன.

இனி வலியார் முன்னும் மெலியார் பின்னும் அவ்விரு வரும் அன்றி இடைப்பட்டார் வேறிட்டு நிற்றல் முறையாக லினும் மெய்களுள் அச்சிறப்பும் சிறப்பின்மைகளும் நோக்கி, வல்லெழுத்துக்கள் முன்னும் அவற்றிற்கு இனமொத்த மெல் லெழுத்துக்கள் அவற்றின் பின்னும் அவ்விரண்டு நோக்கி யல்லது இடைநிகரனவாய் ஒலித்தல் அறியப்படாமையின் இடையெழுத்துக்கள் அவ்விரு கூற்றிற்குப் பின்னும் வைக்கப்பட்டன.

இனி, அவற்றுள் க, ஙவும் ச, ஞவும் ட, ணவும் த, நவும் ப, மவும் அடிநா அண்ணம், இடைநா அண்ணம், நுனிநா அண்ணம், அண்பல்லடி, இதழ் என்னும் இடங்களில் முயற்சியிற் பிறத்தலான் அப்பிறப்பிடத்தின் முறையே முறையாக வைக்கப்பட்டன.

யரல வக்களும், அடியண்ணம், இடையண்ணம், அண்பல் முதல், இதழ் என்னும் இவற்றின் முயற்சியான் பிறத்தலால் அப்பிறப்பிடத்தின் முறையே முறையாக வைக்கப்பட்டன. ழகர றகர னகரங்கள் தமிழ்ச் சிறப்பு எழுத்து என்று அறிவித் தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன. இவ்வாறே எகர ஒகரங்கள் ஒருவாற்குன் சிறப்பு எழுத்து ஆயினும் பிராகிருத மொழியில் பயின்று வருதலானும் சாமவேதம் உடையாருள் ஒருசாரார் இசைபற்றிக் குழூஉக்குறி போலக் கொண்டு ஓதுப ஆதலானும் இறுதிக்கண் வையாது முறைபற்றி ஏகார ஓகாரங்களின் முன் வைக்கப்பட்டன. ளகாரம் வடமொழியின் ளவோர் அபேதம் என ஓரெழுத்தாய்க் கூறப்படுவதாய்த் தனியே ஓரெழுத்து அண்மையாய்க் கொள்ளப்படுதலால் சிறப்பின்மை பற்றியும் லகரத்தொடு பிறப்பொக்கும் ஆயினும்

ய, ர, ல, வக்கள் போல ஒருவாற்றானுயினும் மொழிக்கு முதலாகாமை பற்றியும், எல்லா எழுத்திற்கும் ஈற்றின் வைக்க வேண்டுமாயிற்று. இடையெழுத்து ஆதலின் இடையெழுத்தில் தமிழ் எழுத்தாகிய ழகரத்திற்குப் பின் வைக்கப்பட்டது.

சார்பு எழுத்துக்களுள் ஆய்தம், அகர, ஆகாரங்கள் போல அங்காந்து கூறும் முயற்சியால் பிறத்தலானும், ஒற்றெழுத்தோடு அளபு ஒத்தலானும் ஒற்றின்பாற்படுத்திப் புள்ளியெனப் பெயர் பெறுதலானும் ஒற்றுக்கள் போல உயிர் ஏறாமையானும் உயிர்க்கும் ஒற்றுக்கும் இடையே வைக்கப்பட்டது ஏனைச் சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களோடு ஒத்து அம்முறையே முறையாக நடக்கும் என்று உணர்க. ஐகார ஔகாரங்கட்கு இகர, உகரம் இனம் என்றாரும் உளர். அவைகட்கு அவை இனமாயின், இனம்பற்றி முறை பெருமையாலும்

''ஐ, ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்'' (தொல்.42)

என ஆசிரியர் தொல்காப்பியனார் இசை நிறைத்தற்பொருட்டு வரும் என்றதன்றி இனம் என்றாமையாலும் அது முறையன்று என்பதறிக. இவ்வாறு உலகத்தும் பிறப்பொத்தல் பற்றியே இனம் என்று வழங்குபவாகலான், **ஈண்டு இனத்தான்** (முதல் வரி) என்றதற்குப் பிற காரணங்கள் உளவேனும் பெரும்பான்மை பிறப்பொத்தல் எனின் எனக் கொள்க. இது பற்றியே இனங்களுள் பிறப்பை முற்கூறினார்.

இனி, **நிறை உயிர் எழுத்தாயிடுமே** (2 முதல் 4 வரை) என்றும் உடலின் கண் நிறைந்த உயிர்க்கிழவனது முயற்சியானே முன்னர் கூறிய முறையே மூலாதாரத்தில் சக்தி தத்துவமாகிய விந்துவின் சூக்குமை வாக்காய் எழுகின்ற ஓசை, உந்தியின் வந்து பொருந்தி உதாள வாயுவைக் கலந்து, பின்னப்பட்டு, மயில் முட்டைக் கருச்சலத்தில் பல

வன்னமும்[1] தோன்றி உருத்தெரியாது நின்றாற்போல எழுத்துகட்குத் தோற்றமும் நிலையும் ஒடுக்கமும் உடைத்தாகிய பைசந்தி வாக்காய்ப் பின்பு நெஞ்சினிடத்துப் பிராண வாயுவைக் கலந்து எழுத்துக்களின் வடிவங்களைத் தெரிவித்துச் செவிக்குக் கேளாததாய்த் தனக்குள் அறியப்பட முரங்கியும் முழக்கம்; கண்டம், உச்சி, மூக்கு என்னும் மூன்று இடத்தினும் ஒலிக்கப்பட்டு மத்திமை வாக்காய்ப் பின்பு நாக்கு, அண்ணம், பல், இதழ் என்னும் இந்நான்கு இடத்தையும் பொருந்திய அவற்றின் முயற்சியானே பிறர் செவிக்குக் கேட்கப்படும் வைகரி வாக்காய் வேறு வேறு எழுத்தாய் வழங்குமென்றவாறு. இறுதியிலென்பது தொடை நோக்கி[2] நின்றது. இச்சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்ற நான்கு வாக்குந் தோன்றுதற்குக் காரணமாய் நின்ற விந்துவைப் பஞ்சமை வாக்கென்றும் அதற்கிடம் மூல தாரம் என்றும் விந்துவினொலியாகிய சூக்குமைக்கு மூலாதாரத்திற்கு மேல் நாபியடி வரையுமிடமென்றும் பைசந்திக்கு நாபிக்கு மேல் நெஞ்சு வரையிடமென்றும் மத்திமைக்கு மிடருச்சி மூக்கு வரையிடமென்றும், வைகரிக்கு நா, அண்ணம், பல், இதழென்று நான்கும் இடமென்றும் இவ்வைவகை வாக்குகளுக்குச் சாந்தியாதீதம், சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தியென்னுங் கலை களைந்து முறையே பற்றுக் கோடென்றும் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்னுஞ் சக்திகளைந்து முறையே இவ்வைவகை வாக்குகளை நடத்துமென்று முய்த்துணர்ந்து கொள்க.

"நிறையுயிர் முயற்சியி னுள்வளி துரப்ப
எழுமணுத் திரளுரங் கண்ட முச்சி
மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
வெவ்வேறெ ழுத்தொலி யாய்வரல் பிறப்பே" (நன். 74)

என நன்னூலாரும்.

1. வன்னம் = வண்ணம்
2. இந்தச் சொல் சூத்திரத்தில் காணப்படவில்லை.

"உயிர்உழப் புதானளி நாதம் உச்சி
மிடறுஉர மூக்குஉற்று இதழ் நாப் பல்லணத்து
அடைந்து பின்னர வற்றது விளையான்
வேறுவே றெழுத்துஒலி யாய்வரல் பிறப்பே" (இ. வி. 9)

என்று இலக்கண விளக்கத்தாரும் கூறிய சூத்திரங்கள் எண், எழுத்துப் பிறவியினிது விளங்காமையான் இனிதின் விளங்கக் கூறும் ஞான நூலிற் கண்டு இம்முறையிலக்கண நூலிற்கும் அமையுமென மாட்டுதலின் இது மாட்டெறிந்து ஒழுகலென்னும் உத்தி. என்னை!

"ஒருநாதம் படருந்தானே" (சிவப்பிரகாசம் 37.4)

"வந்தடைந்து பின்னமாய் வன்னங்க டோற்றம்
வருமடைவு படவொடுக்கி மயிலண்ட சலநேர்
சிந்தைதனி லுணர்வாகும் பைசந்தி யுயிரிற்
சேர்ந்துவரு மவைமருவு முருவெவையுந் தெரித்து
முந்தியிடுஞ் செவியிலுரு துள்ளுணர்வா யோசை
முழங்கியிடு மத்திமைதான் வைகரி யிலுதானன்
பந்தமுறு முயிரணைந்து வந்தமொழியி செவியின்
பாலணைய நினைந்த பொருள் பகருந்தானே"
(சிவப்பிரகாசம் 38)

6. இடையுயிர்கண் மிடற்றின் உச்சி வலிமெலி மூக்கவற்றுள்
இயல்பின் அ, ஆ, அங்காப்பு; அவ்வங்கப்போடு அண்பல்
அடிநாவின் விளிம்புற இ, ஈ, எ, ஏ, ஐயாம்; அவற்றோடு
இதழ்குவிவின்
உ, ஊ, ஒ, ஓ, ஔ உதிக்கும்;
தொடரடி அடிநா அடிஅண்ணமுறக் க, ஙவாம்; இடை நாத்
துன்னும்
'இடையண் ணமுற ச, ஞ வாகும்;
முடிநா முடியண்ணமுற ட, ணவாம்; அண்பல்லடி அதினு'[1]
முடியுற
வாம்த, ந; மீகீழ் இதழுறவாம் ப, மவே

என்பது என் நுதலிற்றோ எனின் முன்னர்ப் பொதுப்படக் கூறிய எழுத்துப் பிறவியைப் பகுத்துணர்த்துதனுதலிற்று.

1. அடிநா என்று பாடம் இருக்க வேண்டும்.

இதன் பொருள்:

இடையொற்று ஆறும் உயிர் பன்னிரண்டும் மிடற்றினும் வல்லொற்று ஆறும் உச்சியினும் மெல்லொற்று ஆறும் மூக்கினும் பிறக்கும் அவற்றுள் முன்னர்க் கூறிய நால் வகை முயற்சிகளின் அண்ணத்தின் முயற்சியாகிய அங் காந்து கூறும் அகரம், ஆகாரம் இரண்டும் பிறக்கும். அவ் வங்காப்புடனே அண்பல்லை, அடிநா விளிம்பு தொட இகர, ஈகார, எகர, ஏகார ஐகாரங்களாகிய ஐந்துயிரும் பிறக்கும். அவ்வங்காப்புடனே இதழ்குவிந்து கூறும் முயற்சி யானே உகர, ஊகார, ஒகர, ஓகார, ஔகாரங்களாகிய ஐந்துயிரும் பிறக்கும். அடிநாவும் அடியண்ணமும் பொருந்தக் ககர, ஙகரங்களிரண்டும் பிறக்கும். இடை நாவும் இடை யண்ணமும் பொருந்தச் சகர, ஞகரங்கள் இரண்டும் பிறக்கும். நுனிநாவும் நுனியண்ணமும் பொருந்த டகர ணகரங்கள் பிறக்கும்; அண்பல்லடியை நாநுனி பொருந்த தகர, நகரங்கள் பிறக்கும். மேலிதழும் கீழிதழும் பொருந்தப் பகர மகரங்கள் பிறக்கும் என்றவாறு என்னை!

"அவ்வழி யாவி யிடைமிட றுச்சி
வன்மை மென்மை மூக்கிசை யிற்றேன்றும்" (இ. வி. 10)

"அவற்றுள் முயற்சியுள் அ ஆ அங்காப் புடைய" (நன். 76)

என்றும்

"இ, ஈ, எ, ஏ, ஐ அங்காப்போடு
அண்பல் முதல்நா விளிம்புற வருமே" (நன். 77)

என்றும்

"உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே" (நன். 78)

என்றும்

"அண்பல்லடி நாமுடி யுறத்தர வரும்" (நன். 80)

என்றும் கூறினர் ஆதலின் அங்காப்பின்றி ஓரெழுத்தும் பிற வாமையின் அவற்றேடு (2-வது வரி) என்பதனைப் பின்னும் இடந்தொறு மொட்டுக.

7. பம்பும் அண்ணக்குழி சேர்ந்த மிடற்றுக்கால் அடிநாப்
பற்றயவ்வாய்; அண்ணநுனி நாவருட ர, ழவா(ம்);
நம்பும் அண்பல் முதல் நா விளிம்பு ஒற்றலவ்வா(ம்);
நாவின் விளிம்பு அண்ணத்தை வருடளவ்வா(ம்);
மேற்பல்
வம்பில் இதழ்குற்ற வவ்வா(ம்); நுனிநா அண்ணத்தின்
வலிது ஒற்றனவாம்; ஓரிடத்தினில் பல்லெழுத்துத்
தம்பிறப் போதினும் எடுத்தல், படுத்தல், நலிவு, உழப்பின்
தத்தமில் சில பேதம் உளகாண் மதியால் உனியே.

இதன் பொருள்:

அண்ணக் குழியைச் சேர்ந்த மிடற்றின் கண்ணே உண்டாகிய காற்றுன்ஆய ஓசை அடிநாவின் கண்ணே செறிய யகரம் பிறக்கும். அண்ணத்தை நுனி நா தடவ ரகர, ழகரம் பிறக்கும். அண்பல் முதலை நாவிளிம்பு ஒற்ற லகரம் பிறக்கும். அண்ணத்தை நா விளிம்பு தடவ ளகரம் பிறக்கும். கீழிதழின் மேற்பல் குற்ற வகரம் பிறக்கும். அண்ணத்தை நுனிநா வலிதின் ஒற்ற றகர, னகரங்கள் பிறக்கும். இங்ஙனம் ஒரோரிடங்களில் பல் எழுத்துக்களின் பிறவி கூட்டிக் கூறினுமாயினும் எடுத்தல், படுத்தல், நலிதல், உழப்பவென்னும் ஓசை வேற்றுமையால் தத்தமில் சிறிது வேறுபாடுள. அவை அண்ணவாதல் மதி நுட்பத்தால் உன்னிச் சொல்லி காண்க என்றவாறு. உயிரு மெய்யுந் தனித் தனி கூறிக்காண்பதன்றியும் உயிர் மெய்யாகக் கூறியும் செக்கை, வெங்கை . தவ்வையென மொழிப் படுத்துக் கூறியுங் காண்க. என்னை !

"அடிநா அடியண்ண முறளத் தோன்றும்" (நன். 82)

என்றும்

"அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரமும்" (இ. வி. 12. 5-7)

என்றும்

"அண்ணம் நுனிநா வருட ரழவரும்" (நன்.83)

என்றும்

"அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நா விளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகரம் ளகாரம் இரண்டும் பிறக்கும்" (நன்.84)

என்றும்

"மேற்பல் இதழுற மேவிடும் வவ்வே" (நன்.85)

என்றும்

"அண்ணம் நுனிநா நனியுறில் றனவரும்" (நன்.86)

என்றும்

"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பிற்
திரிபும் தத்தமிற் சிறிதுளவாகும்" (நன்.88)

என்றும் கூறினாராதலின் என்க.

8. உனித்தெரி நெஞ்சொலியான் அங்காந்து இயன்று குறிற்கீழ்
உயிர்வலிமேல் ஒற்றியல்போல் வரும் ஆய்தப்புள்ளி;
தனிக்குறில் நீங்கு உயிர்கணமூன்று ஆய்தம் என்று ஐந்தொடர்க்கீழ்
சார்வலியூர் உக்குறுகும்; ய முன்குறள் உத்திரிவிற்
புணைத்த மியாவினில் இகரங் குறுகும் முதல்
இடையின் பொருள் ஐகுன்றும்; அற்றும் ஒளவும்; வ, ளத்திரிந்த
ணன பின் வம்மென[1] மக்குறுகும் தனிக்குறில் சார் ல, ளப்பின்னும்
தகரத் திரிவின் முன்னாய்தம் குறுக்காயிடுமே

என் நுதலிற்றோ எனின் சார்பெழுத்துக்கட்கு இடமுயற்சி வகையாற் பிறப்புணர்த்த வேண்டுதலின் அவற்றுள் ஆய்தப் பிறப்பும், அஃது இடம் சார்ந்து வருமாறும் ஏனைச் சார்பெழுத்துக்களெல்லாம் இடமுயற்சிகள் தம் முதலெழுத்துக்களோடு ஒப்பனவாயினும் சார்ந்து வருமாறு ஓர் பிறப்பாதலின் பிறப்பதிகாரத்துள் அடக்கிக் கூறுவான் தொடங்கி, அவற்றுள் அறுவகைக் குறுக்கமும் இடனும் பற்றுக்கோடுஞ் சார்ந்து வருமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

1. வம்முன் என்று இருத்தல் நலம்.

இதன் பொருள்:

உனி . . . புள்ளி (முதல் வரி) என்றது மத்திமை வாக்காய்த் தன்னுளறியப்படும் நெஞ்சோசையானே அங்காந்து கூறு முயற்சி கொண்டு பிறந்து குற்றெழுத்தின் முன்னதாய் உயிரொடு கூடிய வல்லெழுத்தாறன் மேலதாய் ஒற்றினது இயற்கை போல வழங்கும் ஆய்தப் புள்ளி என்றவாறு. ஆய்தமென்பது அடுப்பின் பெயர். அஃதீண்டு உவமையாகு பெயராய் இவ்வெழுத்திற்காயிற்று. இது பற்றியே பெயர்க்குக் காரணக்குறி கூறிய வழி அடுப்புக் கூட்டுப் போல எழுதப்படுதலின் ஆய்தமென்று ஆயிற்றும். உயிர் வருக்கத்து இறுதியின் அக்கேனம் என எழுதும் ஆய்த வடிவை இக்காலத்தார் வேறுபட எழுதுவாராகலின் அஃது அதன் வடிவன்றென நீக்கித் தொல்லை வடிவே கொள்க என்பார் ஆய்தப் புள்ளி என்றார். என்னை!

"ஆய்தநெஞ் சோசையின் அங்காந் தியலும்" (இ. வி.31)

எனவும்

"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" (தொல்.38)

என்றும் கூறினாராகலின்.

உதாரணம் எஃகு, கஃசு, கஃடு, கஃபு, கஃறு. என்றும், இருபஃது அஃகாமை என்றும் தனிக்குறில் என்று வரைந் தோதாமையின் விலஃஃகு வீங்கிருளோட்டமே மாதர் குனி இலஃஃகு முத்தினினம் என்று வரும். அஃகு என்புழி அக்கு என்புழி நின்றக் ககர ஒற்றுப் போல நிற்றல் பற்றி ஒற்றியல் போல் (முதல் வரி) என்றாரேனும் ஒற்றுக்கள் போல உயிர் ஏறாது ஓசை பற்றி விகாரமாய் நிகழ்வது ஒன்றாகலின் ஆய்தஞ் சார்பெழுத்தென ஒற்றின்வேறாயிற்று.

இனித்தனி . . . . உக்குறுகும் (2-வரி) என்றும் தனிக்குறித் தொடர் ஒழித்து ஏனைய உயிர்த்தொடரும், வன்கணல்

தொடரும், மென்கணத்தொடரும், இடைக்கணத் தொடரும், ஆய்தத் தொடரும் என்று இவ்வைந்து தொடர்மொழி ஈற்றின் கண்ணுஞ் சார்ந்த வல்லெழுத்துக்களை ஊர்ந்து வந்த உகரம் தன்னளவிற் சுருங்கும் என்றவாறு ஆசிரியர் தொல்காப்பியர்,

"நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே" (தொல்.36)

எனத் தொகுத்துக் கூறியவாறே கூறின், அத்தொடர் மொழியின் பகுப்பறிதல் அருமைத்தாகலானும்

"நெடிலோ டாய்தம் உயிர்வலி மெலியிடை
தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே (நன்-94)

என நன்னூலார் இலக்கணவிளக்கத்தார் (இ. வி 16) தொடர்மொழி விளக்கத்தார்[1] தொடர்மொழியை வகுத்துக் கூறியவாறு கூறினும் உயிர்த்தொடர் ஒன்றனையே நெடிற் றொடர் எனவும், உயிர்த்தொடரெனவும் இரண்டு படுத்திக் கூறுதலானும் அவர் கூறிய ஈரிடமும் இவர் கூறிய ஆறிடமும் கொள்ளாது ஐந்தொடர் ஈற்றினும் நெடிற்றொடரை உயிர்த்தொடருள் அடக்கினும் குறுகுமென்றும், அவ்வாறு நெடிற்றொடரை உயிர்த்தொடருள் அடக்கில் தனிக்குறில் ஈற்றில் வரும், அது, இது; படு, கடு என்று முற்றுகரங் களுங் குற்றுகரமாவான் செல்லும் என்று ஐயுருது தனிக் குறில் நீங்கு உயிர் (2-வது வரி) என்றுங் கூறினர்.

தொல்காப்பியரும், நன்னூல், இலக்கண விளக்கத்தாரும் தனிக் குறில் தொடரை நீக்குதற் பொருட்டே நெடிற் றொடரைப் பிரித்ததும் என்றுணர்க. அதைப் பிரித்துக் கூறிய வற்றுள் ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடர்மொழி என மொழிநிலை மூன்றெனக் கொண்ட

1. தொன்னூல் விளக்கமாக இருக்கலாம்.

தொல்காப்பிய (தொல். 45) இலக்கண விளக்கத்தார்க்கும் (இ. வி. 38) ஈரெழுத்தொரு மொழியின் நெடிலைப்பிரித்து மூவெழுத்து முதற்றொடருந் தொடர்மொழியையும் காட்டினமையால் தனிக்குறில் தொடர் நீக்கம் அமையும்; ஓரெழுத்தொரு மொழி, தொடர்மொழி என மொழிநிலை இரண்டெனக் கொண்ட நன்னூலார்க்கு (நன். 128) அஃது அமையாது என்பதூஉம் உணர்க.

உதாரணம்:

வரகு, வடாது, இனிது, மருது, தரகு, காசு, கரடு, காது, கரபு, காறு, போவது, வருவது, ஒன்பது என்றும் கொக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று என்றும் கொங்கு, மஞ்சு, கண்டு, பந்து, அம்பு, நன்று என்றும் தெள்கு வெய்து, சால்பு, ஏர்பு என்றும் எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என்றும் வருப பிறவும் அன்ன. வலியூர் உவ்வெனப் பொதுப்படக் கூறினமையானே வல்லெழுத்தாறனையுந் தொடர்மொழி வேண்டுமென யாப்புறவின்றி ஏற்ற பெற்றி தொடரும், இடையொற்று ஆறு வல்லொற்றுள் சிலவற்றோடு அன்றி ஆறோடும் மயங்காமையின் என்று உணர்க. இனி மொழிந்த பொருள் வயின் ஒன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல் என்றும் உத்தியானே நுந்தையென்னும் முறைப் பெயரின் ஒற்றிய நகரமிசை ஊர்ந்து நின்ற உகரங் குற்றியலுகரமாமெனவும் செக்குக்கணை, சுக்குக்கோடு என வன்றொடர்க் குற்றுகரம் வல்லெழுத்துப் புணர்மொழியிடைப்படின் தன் அரை மாத்திரையினும் குறுகுதல் குரங்கு, கடிது முதலியவற்றோடு படுத்துச் செவி கருவியாக உணர்க. உயிர்த்தொடரெனப்[1] பொதுப்படக் கூறினரேனும் எகர, ஒகர, ஔகாரங்கள் ஈற்றயலெழுத்தாய்த் தொடரப்பட்டுக் குற்றியலுகரம் வாரா என்பது உரையிற் கொள்க.

---

1. இவ்வாறு சூத்திரத்தில் யாண்டும் வரவில்லை.

"நெடிலே, குறிலிணை, குறில்நெடில் என்றுஇவை
ஒற்ளுெடு வருதலொடு குற்ளுெற்று இறுதியென்று
ஏழ்குற் றுகரக்கு இடனென மொழிப."

என ஏழிடம் கொள்வாரும் உளரோவெனின் அவ்வாறு ஏழிடம் கொள்வார்க்குப் பிண்ணுக்கு, சுண்ணும்பு, பட்டாங்கு, இறும்பூது முதலியனவும் ஆய்தந் தொடர்ந்தனவும் போவது, வருவது, ஒன்பது முதலியனவும் அடங்காவாம். அற்றேல் இவ் வாசிரியரும் தொல்காப்பியர், நன்னூலார், இலக்கண விளக்கத் தாரும் ஈற்றயல் நின்ற எழுத்தை இடமாகக் கொண்டமை போல அவ்வேழிடங் கொண்டாரும் ஈற்றயல் நின்ற அசையை இடமாகக் கொண்டு குற்றெழுத்துத் தனியே வரும் அசையோடு கூடிய வல்லாறு உகரம் முற்றுகரமாம் ஆதலின் அவ்வசையொன்றனையுமொழித்து ஏனைபேழன் ஏழசை யினையும், ஈருகக் கூறினரன்றிக் குற்றுகரச் சொல் முழுவதும் அன்றே எனினும் முன்னர்க் காட்டியவற்றுள் பிண்ணுக்கு முதலிய நான்கு நெட்டெற்றிறுதியும் இறும்பூது, நெடில் இறுதியுமாய் அடங்கும்; ஏனைய அடங்காவெனவும் அவ்வேழும் இவ்வாசிரியர் கூறிய ஐந்தனுள் அடங்கும் எனவும் உய்த்துணர்ந்து கொள்க. இது பிறர் நூல் குற்றங் காட்டல் என்னும் மதம். உடன்படாப்பிறன் கோட்கூறல் என்னும் உத்தியென்றலுமொன்று. இக்குற்றியலுகரத்திற்கு ஐந்தொடர் மொழியும் இடம்; ஈற்று வல்லெழுத்துப் பற்றுக் கோடு என அறிக.

இனி, 'ய முன் குறள் உத்திரிவிற் புணைத்த மியாவினில் இகரங் குறுகும்' (2, 3, வரி) என்றது யகர மொழிக்குமுதலாய் வருமொழியாய் வர அதற்கு முன்னே நிலைமொழிக்கு ஈறுகி நின்ற குற்றியலுகரம் திரிந்து இகரமாவதூஉம்; மியா வென்ற முன்னிலை அசையாகிய அசைச்சொல்லின் மகர மூர்ந்து லகரத்தின் முன்னின்ற இகரமும் தன்னளவில் சுருங்கும் என்றவாறு. எனவே இங்ஙனம் வருமாயின் இவ்வெழுத்தின் தொடர்பால் குறுகும் என்பதாம். புணைத்த என்றது தொடை நோக்கி நின்றது. என்னை!

"யகரம் வகரக்குற ளுத்திரி யிகரமும்
அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய" (நன். 93)

என்ருராகலின்.

உதாரணம்:

வரகியாது, கொக்கியாது, குரங்கியாது, தெள்கியாது, எஃகியாது என்றும் கேண்மியா, சென்மியா என்றும் வரும். இதற்குக் குற்றுகரம் நின்ற வல்லெழுத்தும் மகரமும் பற்றுக் கோடு; யகரங்கள் இடம் என அறிக.

இனி 'முதல் .. ஔவும்' (3 வது வரி) என்றது மொழிக்கு முதல், இடை, கடை மூன்றிடத்தும் பொருட்கொண்டு ஐகாரந் தன்னளவிற் சுருங்கும் அவ்வாறே ஔகாரமும் மொழி முதற்கண் மாத்திரையே தன்னளவிற் சுருங்தும் என்றவாறு. பொருள் ஐ எனவே பொருட்கொள்ளாது தன்னையே சுட்டி நிற்கின்ற இடத்துக் குறுகாது என்பதாம். இஃது ஔகாரத்திற் கும் ஒக்கும். என்னை!

"தற் சுட்டள வொழியைம் மூ வழியும்
நையும் ஔவும் முதல் அற்றுகும்" (நன். 95)

என்ருகலின் இவற்றுள் தன்னைச் சுட்டு மாத்திரையே குறுகாதெனச் சூத்திரம் செய்த நன்னூலார் கருத்தறியாது இச்சூத்திரத்திற்கு இலக்கண விளக்கத்தார்[1]

"அளபெடை தனியிரண் டல்வழி ஐ, ஔ
உளதாம் ஒன்றரை தனிமையும் ஆகும்" (இ.வி. 21)

என்பதோர் சூத்திரக்கருத்தாய்த் தன்னைச் சுட்டுதற்கண்ணும் அளபெடைக்கண்ணும் குறுகாதென்று உரை செய்தார். அளபெடுத்தற்கண் மாத்திரைமிகுதலாயிருக்க தன்னளவிற் குறையாது என்பது கூறவேண்டாமையின் அது கருத்தன்று என்க.

---

1 இங்கு குறிப்பிடுவது தன்னைச் சுட்டுதற்கண்ணும் அளபெடுத்தற்கண்ணும் அல்லாத வழி வந்த ஐகாரம் . . . என்ற உரையையே குறிக்கும். (இ. வி. 21 உரை)

உதாரணம்:

ஐப்பசி, மைப்புறம் என்றும் இடையன், வலையன் என்றும் திணை, குவளை என்றும் ஔவை, மௌவல் என்றும் வரும்.

இனி 'ளலத்திரிந்த ணன வமுமுன்[1] மக்குறுகும்' (3, 4 வரிகள்) என்றது ளகர லகரங்கள் திரிந்த ணகர, னகரங் களின் பின்னர் வரும் மகரமும், வகரத்தின் முன் வரும் மகரமும் தன்னளவில் சுருங்கும் என்றவாறு. என்னை!

"லளமெய் திரிந்த னணமுனும் வருமொழி
வகார மிசையு மகாரங் குறுகும்." (இ. வி. 22)

என்றாராகலின்.

உதாரணம்:

பசுப்போல்வார் முற்பட்டாற் பாற்பட்ட சான்றோர்
முசுப்போல முள் காந்திருப்பர்-பசுத்தான்
வெருளினும் எல்லாம் வெருளுமஃ தன்றி
மருளினு மெல்லா மருண்ம்

என்றும்

திசையறி மீகானும் போன்ம்

என்றும் மரம் வலிது என்றும் வரும். இக்குறுக்கத்துப் போன்ம், மருண்ம் என்பனவற்றின் னகர, ணகரங்களின் பின்னின்ற மகரம், செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றெனவும் அவ்வீற்றயல் உகரம் கெட (போல்-ம், மருள்–ம்) ளகர, லகரங்கள் ஈற்று மகரத்தொடு மயங்காமையின் மயங்குதற்குரிய ணகர, னகரங்களாய்த் திரிந்தனவும் இவ்வாறு ஈரொற்று உடனிலையாய் மகரங் குறுகுமெனவும் உணர்க.

1. வம்முன் என்ற பாடம் இருத்தல் நலம்.

இனித் 'தனிக் குறில்சார் ... ஆயிடுமே' (4-வரி) என்றது தனிக் குறிலைச் சார்ந்த லகார, ளகார ஈற்றின் வரும் தகரம் திரிந்து றகர, டகர மாகுங்கால் அதற்கு முன் ஆய்தந் தோன்றித் தன் அரை மாத்திரையினுங் குறுகும் என்றவாறு. எனவே இரு மருங்குமாய் எழுத்தின் தொடர்பால் குறுகும் என்பதாயிற்று. என்னை!

''லளவீற் றியைபினு மாய்த மஃகும்'' (நன். 97)

என்றாராகலின் முள், கல் என்பனமுன் தீது என வரின் முட்டீது, கற்றீது எனத் திரியுமல்லது முஃடீது, கஃறீது என்று நில்லாமையின் ஆய்தம் டகர, றகர ஒற்றுப் போல நின்று முடிந்தன என உணர்க. இக்குறுக்கம் ஒன்று, இன்று எனச் சாதிப்பாரும் உளர்[1]. அதனால் ஐயுறற்க. முட்டீது, கற்றீது என்புழி அரை மாத்திரையாய் நின்ற டகர, றகர ஒற்றின் திண்மையும் எஃகு என்புழி அரை மாத்திரையாய் நின்ற ஆய்த ஒலித்தன்மையும் முஃடீது, கஃறீது என்புழி நின்ற ஆய்தத்தின் மெலிவும் செவி கருவியாய்க் கூறிக் கண்டு தெளிந்து கொள்க. இவ் ஆறு வகைக் குறுக்கத்தும் குற்று கரம் குற்றிகரங்கள் இரண்டும் இடனும் பற்றுக் கோடும் சார்ந்து குறுகும் எனவும் ஏனை நால்வகைக் குறுக்கங்களும் இடமாத்திரையே சார்ந்து குறுகும் எனவும் ஓர்ந்து உணர்க. இனிப் பொன் தேயிற் பொன்னேயாமன்றி இரும்பு ஆகாமை போல உயிரும் ஒற்றும் குறுகினும் யிருமொற்றுமே ஆமேனும்[2] புணர்ச்சி வேற்றுமையானும் பொருள் வேற்றுமையானும் மாத்திரைச் சுருக்கத்தானும் குற்றுகர முதலியவைந்துஞ் சார்பெழுத் தெனவும் யீரொற்றின் வேறாகவும் மாத்திரைச் சுருக்கத்தால் ஆய்தக் குறுக்கம் சார்பெழுத்திற்குச் சார் பெழுத்தாய் ஆய்தத்தின் வேறாகவுமாயின வென்றுணர்க.

---

1. உதாரணம் இலக்கண விளக்க உரை (பக். 21, 22)
2. விளங்கவில்லை.

9. ஆயும் ஒற்றுஎல் லாமும் அப்பான் முன்னுருவாய்; உயிர்வேறு
ஆகில்கால், மேற்கீழாம் விலங்கு,கோடு இரட்டாய்
காயம் வெவ்வேறு ஆகி,உயி ரளவாய்,அவ் வடிவைக்
கரந்து, உயிர்பின் னுய்த்தாம்முந் துயிர்த்தலுயிர் மெய்யாம்;
ஏய இசை கெடின்மொழிக்கு முன்பின் இடைகுறிதம்
இனக்குறிலாய் நெடில்நீளும் ஐ. ஔ, இ, உ குறியாய்க்
கூயளவாம், ஆய்தம்வ,ய ல, ள, ங, ஞ, ண, ந, ம, னக்
குறிற்கீழ் ஆயிடை கடைமிக் காம்குறிஒற் றுதற்கே

என்னுதலிற்றோ எனின் நிறுத்த முறையானே உயிர்மெய்யா மாறும் ஈரளபெடை ஆமாறும் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்:

'ஆயும் ... ... உயிர் மெய்யாம்' (முதல் 2 வரி) என்றது பதினெட்டு மெய்யும் அகரத்தோடு கூடிய இடத்துத் தம் முன்னை வடிவே வடிவாகியும்; ஏனை உயிர்களோடு கூடிய வழிக் காலும் மேல்விலங்கும் கீழ்விலங்கும் கோடும் இந் நான்கும் இரட்டிப்புமாகி வடிவு வேறுபட்டும் தமை ஊர்ந்து நின்ற உயிரின் அளவே தமக்கு அளவாய், அவ்வுயிரின் வடிவைக் கரந்த அவ்வுயிர் ஒலி பின்னர்த் தோன்றத்தாம் முன்னாக ஒலித்தலே உயிர்மெய்யாம் என்றவாறு. 'ஆயும்' என்னும் விதப்பானே முன்பு புள்ளியோடு நின்ற ஒற்று உயிர் கூடுங்கால் புள்ளிநீங்கி நிற்கும் என்பது பெற்றாம். என்னை!

"புள்ளி யில்லா வெல்லா மெய்யு
மவ்வொடு முன்னுரு வாகியு மேனை
யுயிரொடு திரிந்து மேறிய வுயிரி
னளவா யதனுரு வடக்கிமுந் துயிர்த்த
லுயிர்மெய் யென்மனா ருணர்ந்திசி னோரே" (இ. வி. 18)

என்றாராகலின் கால் முதலாக வேறுபடுதலாவது ஆகாரத்திற்குக் கால் பெற்றும் இகரத்திற்கு மேல்விலங்கு பெற்றும் ஈகாரத்திற்கு மேல் விலங்கு இரட்டித்தும் உகரத்திற்குக் கீழ்விலங்கு பெற்றும் ஊகாரத்திற்கு கீழ் விலங்கு இரட்டித்தும் எகர, ஏகாரங்கட்குக் கோடுபெற்றும்

ஐகாரத்திற்குக் கோடு இரட்டித்தும், ஒகர, ஓகாரங்கட்குக் கோடுங்காலும் பெற்றும் ஔகாரத்திற்குக் கோடு பெற்றும் கால் இரட்டித்தும் வருமாறு உணர்க. முற்காலத்து எழுத்தும் புள்ளியை இக்காலத்துக் காலாக எழுதுப ஆகலின் இறந்தது விலக்கல் எதிரது போற்றல் என்னும் உத்திகளான் இவ்வாசிரியர் 'கால்' என்றார். தொல்லாசிரியர் 'உருபு திரியும்' (தொல்.17:3) எனத்தொகுத்துக் கூறியவற்றை இவர் கால் முதலாக வகுத்துக் காட்டலின் இது வகுத்து உணர்த்தல் என்னும் உத்தி.

உதாரணம்:

க, ங, ம, எனவும் கா, கி, கூ, கெ, கே, கை, கொ, கௌ, எனவும் வரும். இவையன்னவாதல் காண்க. உயிரும் மெய்யுங்கூடி ஒலிக்குங்கால் உருபு திரியாதும் திரிந்தும் நிற்குமெனக் கூறியதன்றி உயிர்மெய்க்கு வடிவு கூறியதன்று. எழுத்துகட்கெல்லாம் வடிவு மேற்கூறுபவர் ஆதலின்; உயிரளவே அளவாதல் உப்புநீரும் கலந்து நீரளவே ஆயினாற் போல ஓரளவும் ஈரளபுமாகிய உயிரும் அரையளவாகிய ஒற்றுங் கூடிய வழி ஒன்றரையளபும் இரண்டரையளபும் ஆகாது ஓரளபு ஈரளபுமாய் ஒலித்தல் அவ்வடிவைக் கரத்தல் 'அ' என்புழி உள்ள வடிவு 'க' என்புழிக் கரந்து நிற்றல் காண்க. இவ்விலக்கணத்தான் ஓரொரு மெய்யில் பன்னீருயிருங் கூடிப் பன்னிரு, பதினெட்டு, இருநூற்றுப் பதினாறாய் வழங்குமாறு வரிவடிவுள்ளும் ஒலிவடிவுள்ளும் காண்க. இவ்வாறாதலின் உயிர்மெய் சார்பெழுத்தெனா முதலெழுத்தின் வேறாயிற்று.

இனி 'ஏய ... ... அளவாய்' (3,4 வரி) என்றது வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் பொருந்திய ஓசை குன்றுவதாயின் அவ்வோசை நிறைத்தற் பொருட்டு மொழிமுதல், இடை, கடை என்று மூன்றிடத்தும் நின்ற நெட்டெழுத்துக்கள் தமக்கு

இனமொத்த குற்றெழுத்துக்களை வரிவடிவின் அறிகுறியாய்க் கொண்டு தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அவற்றுள் தமக்கு இனமொத்த குற்றெழுத்து இல்லாத ஐகார, ஔகாரங்கள் ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர, உகரங்களை நிரல், நிரை வகையால் குறியாய்க் கொண்டு அளபெழும் என்றவாறு. ஐகாரம் அகரக்கூறு முந்தியும் இகரக்கூறு பிந்தியும் நிற்றலானும் ஔகாரம் அகரக்கூறு முந்தியும், உகரக்கூறு பிந்தியும் நிற்றலானும் பின்னர் நிற்கும் ஒலிபற்றி அவ்விரண்டிற்கும் இவ்விரண்டும் குறி என்றார். என்னை!

"இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்
அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே." (நன். 91)

என்றும்

"ஐ ஔ என்னும் ஆயிரெ ழுத்திற்கு
இகர உகரம் இசைநிறை வாகும்" (தொல். 42)

உதாரணம்:

வாஅகை, ஈஇகை, ஊஉதும், பேஎகன், தைஇயல், தோஒணி, மௌஉவல் என்றும்

ஆஅ அளிய வலவன்றன் பார்ப்பினோ
டிஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றேள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்

என்றும்

உருஅர் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழியவென் னெஞ்சு (குறள். 1002)

என்றும்

அனிச்சப்பூக் கால்களையால் பெய்தா ளுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை (குறள். 1115)

என்றும்

வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் இசை நிறைத்தற் பொருட்டு மூவிடத்தும் அளபெழுந்தவாறு காண்க.

ஏய என்னும் விதப்பானே இசைகெடின் எனப் பொதுப் படக் கூறினரேனும்

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை (குறள். 15)

வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின் (குறள். 1194)

என்றும் வரும். இவற்றுள் கொடுப்பதூஉம், எடுப்பதூஉம், கெழீஇலர் என இசை கெடாத வழி இன்னிசை தோன்றற் பொருட்டாய் வருவளவுங் கொள்க. இலக்கண விளக்கத்தார் (சூ. 19) நெட்டெழுத்தோடு குற்றெழுத்து கூடி அளபெழும் என்றார். நன்னூலார் (சூ. 91) நெட்டெழுத்தே அளபெழும். அளபெழுந்த குறி அறிதற்குக் குற்றெழுத்து குறியீடாய் நிற்கும் என்றார். இவ்விருவர் கருத்தும் நோக்கி நெடிலே விகாரப்பட்டு ஓரொலியாய் ஒலித்தானும் அங்ஙனம் அள பெழுத்து அறிதற்குக் குறியாய் குற்றெழுத்து நிற்பதன்றி குற்றெழுத்து கூடின் அல்லது நெட்டெழுத்து மிக்கொலியா என்பது வேண்டாமையானும் எழுத்து அடை என்னது அள பெடை என்றமையானும்

''மாத்திரை வகையால் தளைதம் கெடாநிலை
யாப்பழி யாமையென் றளபெடை வேண்டும்''
(யாப்பருங்கல விருத்தி-2 மேற்.)

என ஆசிரியர் தொல்லாசிரியர் கூறுதலான் எழுத்திற்கு மாத்திரை கோடலும், அசைத்தலும், சீர்செய்தலும், தளை அறுத்தலும் ஓசைபற்றியல்லது எழுத்துபற்றியல்ல ஆகலானும் 'மறுத்தல்' என்னும் மதத்தினானே இலக்கண விளக்கத்துக் கருத்து நீக்கி 'உட்படல்' என்னும் மதத்தினால் நன்னூல் கருத்தே சிறப்பெனக் கொண்டு குறில் தம் இனக்குறிலாய்

கெடில் சீஇரும் (3-வரி) என்று ஒருதலை துணிதலான் இது ஒருதலை துணிதல் என்னும் உத்தி. தந்து புணர்ந்துரைத்தல் என்னும் உத்தியால் 'இசைகெடின்' என்றதனை மேல் ஒற்றள பெடைக்கும் கொள்க.

'ஆய்தம் ... ஒற்றதற்கே' (4. வரி) என்றது செய்யுட்கண் ஓசை குன்றின் அவ்வோசை நிறைத்தற்பொருட்டு ஆய்தம் முதலிய பதினொன்றும் குற்றெழுத்தின் கீழ் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அஃது அளபெடுத்தது அறிதற்குக் குறி அவற்றின் பின்னர் அவ்வொற்றுகளேயாம் என்றவாறு. என்னை!

"ஙஞண நமன வயலள வாய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீ ழிடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே." (நன் 92)

என்றாராகலின் தனிக்குறில் என வரையாமையானும் அவ்வள பெடைக்குப் பின்னர் நிற்பது குற்றெழுத்தே ஆதலானும் குறிலிணையும் அவற்றுள் அடங்கும்.

உதாரணம்:

எஃ ஃகிலங்கிய கையரா யின்னுயிர்
வெஃ ஃகுவார்க்கில்லை வீடு

என்றும்

விலஃ ஃகி வீங்கிரு ளோட்டுமே மாத
ரிலஃ ஃகு முத்தி னினம்.

என்றும்

இவ்வ்வுலகை இனிதாண்டு

என்றும்

செய்ய்ய தொழிலைச் செய் நோக்கி

என்றும்

கல்ல்லன்ன வன்னெஞ்சிற்

என்றும்

பகல்ல்லன்ன என்றும் யானெங்ங் கெனத் திரிவாரின்

எனவும்

இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடி யார்க்குக்
கலங்ங்கு நெஞ்சமிலைக் காண்

என்றும்

மஞ்ஞ்சு, முரஞ்ஞ்சு என்றும்
'கண்ண் டண்ணெனக் கண்டுங் கெட்டும்' (மலைபடுகடாம் 352)

என்றும்

அரண்ண் கொண்ட வடுதோளினர்

என்றும்

பருந்ந்து[1] என்றும், அம்ம்பு அரும்ம்பு என்றும்
மின்ன் னன்ன வேல் விளக்கி முரன்ன்று

என்றும் வரும். பிறவு மன்ன.

ஙகர, ஆய்தங்கள் மொழிக்கு ஈறுகாமையின் ஈண்டு ஈற்றில் வந்து அளபெழா என்றும் யகர, வகரங்கள் குறிலிணைக் கீழ் அளபெழா என்றும் குரவ்வை, அரைய்யர் என ஒற்றில் வழி ஒற்றுப் பெற்றால் அவையும் அளபெழும் எனவும் உய்த்துணர்ந்து கொள்க. உயிரளபெடை, ஒற்றளபெடை உயிரொற்றுக்களின் மிக்கொலித்தலால் சார்பெழுத்தென வேறாயின என்றுணர்க.

10 ஒற்றுயிரா திகள்பாதத் தாறுறுப்பின் முக்கூட்
டூழ்மைத்த வடிவெகர மொகரமெய்ப்புள் ளியுமா
மற்றநெடி லிரண்டுகுறு கையெனமுத லீரொன்
றரை யிடையொன் றுங்குறிலொன் றுய்தமெய் குற்றுகரங்

1 தனிக் குறிற்கீழ் நகரமெய் இரட்டித்து வருவதற்கு உதாரணம் இல்லை. பந்து என்பதை உதாரணமாகக் கொள்ளலாம்.

குற்றிகர மரைமவ்வாய் தக்குறுக்க முங்கால்
குறித்துணரிற் கண்ணிமைத்த ஞெடித்தன் மாத்திரைதான்
மற்றளவுக் கொலிக்கெடுநி றைப்பளவாம் பண்ட
மாற்றுவிளி யிசைகுறிப்பு மிகலுமெழுத் துறுமே

என்பது என்நுதலிற்றோ எனின் நிறுத்த முறையானே வடிவமாறும் மாத்திரையாமாறுங் கூறுதனுதலிற்று.

இதன் பொருள்;

'ஒற்றுயிர்.......வடிவு' (முதல் வரி) என்றது ஒற்றும் உயிருமாதியாகிய வெழுத்துக்களெல்லா நாடக நூலுட் கான மாத்திரை, முதனன்கு மாத்திரையீராய் ஆறு உறுப்புக் காட்டுவனவற்றுள், ஈண்டைக்கு வேண்டுவன மூன்றுறுப்பும் ஒன்றோடொன்று கூட்டமாக ஆதி சிருட்டியின் கண்ணே இறைவனால் அமைக்கப்பட்ட பழைய வடிவே வடிவாமென் றவாறு. அவ்வாறுறுப்பாவன கான் மாத்திரைக்கு எனவும் அரை மாத்திரைக்கு எனவும் ஒரு மாத்திரைக்கு எனவும் இரண்டு மாத்திரைக்கு எனவும் மூன்று மாத்திரைக்கு எனவும் நான்கு மாத்திரைக்கு எனவும் காட்டுவர். இவ் வாறு உறுப்புக்களுள் கான் மாத்திரை முதல் ஒரு மாத் திரை வரையிலுள்ள மூன்றுறுப்புமேயீண்டைக்கேற்பன வெனவும் அவையும் ஒன்றோடொன்று கூடியல்லதொரு றுப்பே தனித்து நின்று வடிவாகாதெனவு மேனைய மூன்று றுப்பு நாடகத்தின் அன்று ஈண்டைக்கு ஏகலாவெனவும் அ= என்புழி மேற்புள்ளியரைமாத்திரையுங் கீழ் நீண்டு கிடப்பது ஈற்றின் நீண்டு கிடப்பதொடு கூடி, மேற்கான் மாத்திரையும் அவ்வாறு உற கீழ் கான் மாத்திரையும் ஒரு மாத்திரையாகியதெய்தற்கு வடிவாகியதெனவும் ஏனையவு மிவ்வாறே அம்மூன்றுறுப்பும் கூட்டமாம் எனவும் இஃது குரு முறைமையாற் காணவேண்டுமெனவுமுய்த்துணர்ந்து கொள்க.

இலக்கண நூலார்

"தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி" (நன். 98)

எனக் கூறி வடிவிற்குக் காரணம் கூறுதொழிந்ததை நாடக நூலுட் குரு முறைமையார் கண்டு இவ்வாசிரிய விலக்கண நூலிற்றுமே நாட்டி நிறுத்தலினிது தாஞட்டித்தறைது நிறுத்த லென்ற மதம். இனி 'எகர ஒகர மெய்ப்புள்ளியுமாம்' (1. வரி) என்றது தனித்தும் உடம்பொடு கூடியும் வரும் எகர வொ கரங்கள் அவ்வாறு வரும் ஏகார ஓகாரங்களோடு ஐயப் படுதலுந் தனி மெய்யுயிர் மெய்யோடையப்படுதலும் நீங்க எகரத்திற்கும் ஒகரத்திற்கும்[1] தனிமெய்க்கும் மேலே புள்ளி யிட்டெழுதிக் கொள்ளுதலும் எதிரது தழீஇய வெச்சவும் மையானே பொருளுணர்ச்சியானேயஃது ஒழித்து எழுதி இக்காலத்துய்த்துணர்ந்து கோடலுமாம் என்றவாறு உம்மை யாற்புள்ளி நீக்கந்தழீஇயினது எதிரது போற்றலென்னு முத்தி.

உதாரணம்: எரி, ஏரி, ஒளி, ஓளி, உல்கு, உலகு என வரும். இனி 'அற்ற மாத்திரை தான்' என்பது மாத்திரைக்கு முடிவாவது நெட்டெழுத்திரண்டு மாத்திரையாம். ஐகாரக் குறுக்கம் ஒளகாரக் குறுக்கம் முதலினும் ஈற்றினும் ஒன்றரை மாத்திரையும் இடையிலொரு மாத்திரையுமாம். குற்றெழுத் தொரு மாத்திரையாம். ஆய்தமும் ஒற்றுக்களுங் குற்றியலுக ரமும் குற்றியலிகரமும் தனித்தனியரை மாத்திரையாம். மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமுந் தனித்தனிகான் மாத்திரையாம். இம் மாத்திரைக்குக் கால்சங்கைக் குறித்தறியுமிடத்திற் கண் ணிமைத்தற் பொழுதும், நொடித்தற்பொழுதும் ஒரு மாத்திரை யாமென்றவாறு. ஏனைக் கான் மாத்திரை முதலியன அறியு மாறு.

1. எகரத்திற்கும் மகரத்திற்கும் என்பது மூலபாடம்

"உன்னல் காலே யூன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே"
(முத்து வீரியம், எழுத்து. 98)

என ஒரு மாத்திரையாகிய நொடித்தற் பொழுதைப் பகுத்துக் கூறியவற்றானுணர்க. 'அற்றம்' என்பது முடிவு. தானெனயான், ஔகார மொழி முதன் மாத்திரையே குறுகுமென முன்னர் கூறிப் போந்தமையான்; இடை, கடை யிரண்டினுங் குறுகாமையினேற்புழுகி கோடலான் மொழி முதன் மாத்திரையே ஒன்றரை மாத்திரையாமெனக் கொள்க. 'கண்ணிமைத்தல்' (3—வரி) எனக்கண்ணென்னும் எழுவாய்க்கு இமைத்தல் என்னும் பயனிலை கொடுத்து முடித்தலின் இயல்பாக இமைத்தலென்பது பெற்றும். தன் குறிப்பின்றி நிகழ்தலின் இமைத்தலை முற்கூறினர். கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவை ஆராயின் வரம்பின்றி ஓடுதலான் முடிந்தனை முடித்தலென்று முத்தியாற் குறித்து உணரின் என்றார். உயிர்மெய்க்கு அளவு கூறுதொழிந்தார். முன்னர் 'உயிரளவாய்' (சூ, 9. 2) என்றலின் இஃது உரைத்தாம் என்னும் உத்தி. அளபெடை வரம்பின்றியோடுமெனப் பின்னர் கூறுவாராகலின் உரைத்தும் என்னும் உத்தியான் அளபெடைக்கு மாத்திரை கூறிற்றிலர். அற்றேல்,

"மூன்றுயி ரளபிரண் டாநெடி லொன்றே
குறிலோ டையெளக் குறுக்க மொற்றள
பரையொற் றிஉக் குறுக்க மாய்தங்
கால்குறண் மஃகா னுய்த மாத்திரை" (நன். 99)

என மாத்திரை இலக்கணங்கூறிய நன்னூலார் உயிரளபெடை மூன்று மாத்திரை யென்றும் ஒற்றளபெடை ஒரு மாத்திரை யென்றுங் கூறினராலோவெனின் செய்யுட்கள் ஓசை சிதையுங்கால் நெட்டெழுத்து ஏழும் ஒற்றெழுத்துக்களுந் தம்மளபின்மைக்கு அளபெடுப்புழி அம்மூன்று மாத்திரை, ஒரு மாத்திரையின் நில்லாது உயிர் பன்னிரண்டு மாத்திரை வரையும், ஒற்று பதினொரு மாத்திரை வரையும் ஏழுமென இசை நூலார் கூறுபவாகலானும்

"ஆவியு மொற்று மளவிறந் திசைத்தலும்
மேவு மிசைவிளி பண்டமாற் றாதியின்" (நன். 101)

என அவர்தாமே கூறுபவாகலானும் அளபெடைக்கு மாத்திரை வரையறுத்து அமையா எனவறிக. நன்னூலார் அஃதன்றியும் அச்சூத்திரத்தின்,

"... ... ... ஒன்றே
குறிலோ டையெளக் குறுக்கம்" (நன். 99. 1,2)

என ஐகார ஔகாரக் குறுக்கங்கண் மூன்றிடத்தும் ஒரு மாத்திரையே என்றார். இலக்கண விளக்கத்தாரும் அவ்வாறே கூறினர். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான." (தொல். 57)

என இடையிலொரு மாத்திரையெனக் கூறியவாற்றானும் ஐ, ஔ அளபொன்றரை தனிமையுமாகும் என ஒரு சாராசிரியர் ஒன்றரை மாத்திரை யென்றும் ஒரு மாத்திரையுமா மென்றுங் கூறியவாற்றானும் இவ்வாசிரியர் உய்த்துணர்த்த லென்னு முத்தியானே அவையெல்லாம் உய்த்துணர்ந்து நோக்கி மொழி முதலினும் ஈற்றினும் ஒன்றரை மாத்திரையும் இடையிலொரு மாத்திரையும் பெறுமெனக் கூறினர். அவ்வாறு உய்த்துணர்ந்து கூறுக்காற் 'சைவசமயஞ் சமய மெனிவ் சமையத் தெய்வம் பிறை சூடுந்தேவென்னில் ஐவரை வென்றானந்த வெள்ளத்தழுந்துவதே முத்தியெனில் வானங் கான் பெயவீர மழை' என்றும்

வைகலும் வைகல் வாக கண்டும் (நாலடியார் 39- 1)

என்றும்

கை வேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும். (குறள். 774)

என்றும்

அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும் (குறள். 169)

என்றும் வருமிலக்கியங்களுக்கு இலக்கணமின்றாயத்தனை சிதையுமென்பதாய் முடியுமென்பதறிக.

இனி 'மற்றளவுக் கொலிக் கெடு நிறைப்பவாம்' என்றது எழுத்தெல்லாவற்றிற்கு மாத்திரை கூறி மாத்திரை கூறா தொழிந்தவளபெடைக்கும், மாத்திரையாவது செய்யுட்கட் ஓசை சிதையுங்கால் அவ்வோசைக்கேடு எவ்வளவைத்தே அவ்வளவும் ஓடி அவ்வோசையை நிறைத்தலே அதற்கு மாத்திரையாம் என்றவாறு வரலாறு.

உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு (குறள். 1200)

இதனுள் உறாஅர் என்புழி (உறா அய் உறாதார் என நிற்கிற ஓசை குன்றாது உறுகர், என்புழி) மூன்று மாத்திரையும் உறா அர் என்புழி நான்கு மாத்திரையுமாயின. செறா அஅயென்புழி நிரையென ஆயினும் நிரை நேர் என ஆயினும் நேர் நேரெனவாயினும் ஓரசை யீரசை கூடிநிற்கின்ற ஓசை குன்றாது. அவ்வாறு அவ்வெவ்வசைக் கேற்ற சொல் வருவித்து முடிக்குங்கால் நாலுமாத்திரை முதல் ஆறு ஏழு மாத்திரை வரையுமாயின. இவ்வாறாதலின் அவ்வோசைக்கேடு நிறைத்தலே அளவென்றார். எனவே அளபெடைக்கு மாத்திரை வரையறுத்து அமையா தென்றவாயிற்று.

இனி, 'பண்டமாற்......உறுமே' (4 வரி) என்றது ஒற்று முயிருமாகிய எழுத்துக்களெல்லாம் பண்டமாற்றின் கண்ணும் விளியின் கண்ணுங் குறிப்பின் கண்ணும் இசைத்த தமிழின் கண்ணுந் தம் அளவினில்லாது மிக்கொலித்தலும் பொருளாம் என்றவாறு. அவ்வவற்றிற்குக் கூறிய வளவு இறவாது நிற்றலே யன்றி இவ்விடங்களின் மிகுதலும் உண்டெனப் பொருட்படு தலான் 'மிகலும்' என்னும் உம்மை இறந்தது தழீஇ நின்றது.

'இசையும்' என்னும் உம்மை எதிரது தழீஇய எச்ச வும்மையாக்கி முறையிடுதல், புலம்பல், நாவற்பாட்டு, எல்லெம்-தோணி வலித்தல், புள்ளோச்சல் முதலியன வெல்லாங் கொள்க. இவற்றுட் பண்டமாற்று, உப்போஓஒ என்பது முதலாயின விளியின் மிக்கு வருதல் சொல்லதி காரத்தின் விளியுருபினிலக்கணத்தான் அறிக.

கஃஃஃ .றென்னுங் கல்லத ரத்தம்
சுஃஃஃ றென்னுந் தண்டோட்டுப் பெண்ணை
(தொல். செய்.11 பேரா.)

என்பன குறிப்பு. இசையின் மிக்கு வருவன இசைத் தமிழர் ஒரு சொல்லைப் பற்றியே வேண்டுமட்டும் நீட்டுவர். அஃதிசை பாடுவோர் வாய்க் கேட்டுணர்க. முறையிடுதல் கூஉஉ, கூ வென்பது முதலியன. புலம்பல். ஐயோஒஒ, அப்பாஅஅ என்பது முதலியன. நாவல்-நெல்லரிதொழுவரை யுழவரெவுவ தோர் சொல். அது,

"காவ லுழவர் கடுங்களத்துப் போரேறி
நாவலோஒஒ வென்றழைக்கு நாளோதை-மாவலவன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு'' (முத்தொள்ளாயிரம் 65)

என்பதனுனறிக. ஏனையவெல்லாம் பொருள் வெளிப்பட்டுக் கிடத்தலில் தம் அளவின் மிக்கொலித்தல் வந்துழி காண்க.

11. உறுமுயிர்க, ச,த,ந,ப,ம வரியும் உ,ஊ,ஒ,ஓ
ஒழிந்தவொடு வ்வவுமீ உ,ஊ,ஓ,ஐ,ஔ
வறுமுயிரி னோடு ஞவ்வும்ஒவ் வை இ ஈ, எ,ஏ
யலவின்யவ் வுமாநூற்று நான்குமொழி முதற்காம்
பெறுயமுனி முன்வியுல் முனியு நீங்கியுமாம்
பின்னிலே யேயுயிர் ஞ,ண,ந,ம,ன,ய,ர,ல வ,ழ,ளக்
குறுகுமுவ்வோ டறுநான்கா மொந்நவோடாங் கலவிற்
கூடியெள வாமெய்யோடே லாதெகர வுயிரே

என்பது என்நுதலிற்றோ எனின் நிறுத்த முறையானே மொழிக்கு முதனிலே யெழுத்தா மாறும் அவற்றிற் சில சிறப்பு

விதியும் இறுதி நிலை யெழுத்தா மாறும் அவற்றிற் சில சிறப்பு விதியுங் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்:

'உறு ... ... முதற்காம்' (1–2வரி) என்றது உயிர் பன்னிரண்டும் க, ச, த, ந, ப, ம என்னுமாறு ஒற்றினும் பன்னீருயிருங் கூடி ஓரோர் வருக்கமாய் நின்ற எழுபத்திரண்டு உயிர் மெய் எழுத்தும், வகரவருக்கம் பன்னிரண்டின் உ, ஊ, ஒ, ஓ வென்னு நான்குயிரும் நீக்கி ஏனைய உயிரொடு கூடிய வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்னும் எட்டுயிர் மெய்யெழுத்தும் ஞகர வருக்கம் பன்னிரண்டின் ஈ, உ, ஊ, ஒ, ஐ, ஔ என்னுமாறுயிரும் நீக்கி ஏனை உயிரொடு கூடிய ஞ, ஞா, ஞி, ஞெ, ஞே, ஞொ என்னும் ஆறு உயிர்மெய் யெழுத்தும் யகர வருக்கம் பன்னிரண்டின் ஒ, ஐ, இ, ஈ, எ, ஏ யென்னுமாறு ஈறு நீக்கி ஏனைய உயிரொடு கூடிய ய, யா, யு, யூ, யோ, யௌ என்னும் ஆறு உயிர்மெய்யெழுத்துமாகத் தொகை நூற்றுநான்கெழுத்துகளுமொழிக்கு முதலாமென்றவாறு. என்னை!

"பன்னீ ருயிருங் க ச த ந ப ம வ ய
ஞ ங வீ ரைந்துயிர் மெய்யு மொழி முதல்" (நன். 102)

என்றும்

"உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல்" (நன். 103)

என்றும்

"அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல்" (நன். 104)

என்றும்

"அ ஆ எ ஒவ்வோ டாகு ஞம் முதல்" (நன். 105)

என்றும் கூறினராகலின் இவ்வாறு கூறிய நன்னூலாரும் ங வீரைந்துயிர் மெய்யுமொழி முதலெனத் தொகையினங்காட்டி

"சுட்டியா வெகர வினவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலா கும்மே" (நன். 106)

என வகையுங் கூறினர்.

ஙகரந் தனித்து முதலாமாறின்மையானும் அதனை இலக்கண விளக்கத்தார் உடன்படாது மறுத்து நீக்குதலானும் இவ்வாசிரியரும் நீக்கினர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் அவ்வழித்தாய் இலக்கணவிளக்கத்தாரும் நூற்றுநான்கென்றவற்றுட் சிலவற்றை மொழிக்கு முதலாகாவென விலக்கினர். அக்காலத்திக்காலம் போலத் தமிழின்கண் வடசொற்களுந் திசைச் சொற்களும் பயின்று வராமையானுங் காலநோக்கி நன்னூலாராளுதலானும் அக்காலத்து இயற்றமிழ் போல இக்காலத்து வடசொற்றிசைச் சொற் கலவாது செய்யுட் கூறின் இகழப்படுதலானும் புதியன புகுதலும் வழுவல் காலவகையினானே என்பவாகலானும் இக்காலத்துள்ளெரிற் சான்றோராகிய புலவோர் செய்யுட்களினும் நிகண்டினும் பயின்று வருதலானும் இவ்வாசிரியர் கூறினாரென்பதுணர்க. நன்னூலாசிரியர் நீக்கிய ஞி, ஞெ என்பவற்றிற்கும் இவ்வுரை கொள்க.

உதாரணம்:

அடை, ஆடை, இலை, ஈயம், உடல், ஊடல், எரி, ஏரி ஐயம், ஒதி, ஓதி, ஔவியம் என்றும் கலை, காலை, கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கெழல், கொடை, கோடை, கௌவை என்றும்

சட்டி, சாந்து, சினம், சீற்றம், சுரும்பு, சூரல், செம்பு சம்பு, சையம், சொல், சோறு, சௌரியம் என்றும்

தந்தை, தாய், திரு, தீமை, துடி, தூசு, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை என்றும்

நலம், நாரை, நிலம், நீலம், நுனி, நூல், நெய்தல், நோதல், நைதல், நொச்சி, நோக்கம், நௌவி என்றும்

படி, பாடி, பிடி, பீடு, புகழ், பூமி, பெண், பேதை, பொன், போர்வை, பௌவம் என்றும்

மறி, மாலை, மிடறு, மிளி, முலை, மூப்பு, மென்மை மேன்மை, மையல், மொழி, மோத்தை, மௌவல் என்றும்

வளி, வாளி, விளி, வீளி, வெளி, வேள், வைகல் வெளவினன் என்றும்

ஞமலி, ஞாலம், ஞிமிறு, ஞெகிழி, ஞேயம், ஞொள்கிற்று என்றும்

யவனர், யானை, யுத்தி. யூபம், யோகம், யௌவனம் என்றும் வரும்.

இனி, 'பேறு.........நீங்கியுமாம்' (3-வரி) என்பது இக்காலத்தில் திசைச் சொல்லும் வடசொல்லும் மிகுந்து பயின்று வருதலின் அவை இயற்றமிழில் வருங்கால் ய கரத்தின் முன் இகரமும், நகரத்தின் முன் அ, இ, உ என்னும் மூன்றும் லகரத்தின் மூன் இ, உ என்னும் இரண்டும் சேர்ந்து நடக்குமென்றார். இவை திசைச்சொல்லும் வடசொல்லுமாமென அறிதற்கு இயற்றமிழார் இட்ட குறிகளை நீக்கி இக்காலத்தார் மொழிக்கு முதலாகச் செய்யுட்கண் வழங்குவர். அஃதும் புதியன புணர்ப்பும் வழுவல வென்றமையானே மொழிக்கு முதலாமென்றவாறு. இறந்தது தழீஇய எச்சவும்மையானே இகர முதலிய குறிகள் சேர்த்து வழங்குவனவுமிறந்து படாமையின் அவ்வாறு வழங்கினுங் கொள்க என்பதாம். யகரம், இகரக் குறி நீங்கி வருதல் முன்னர்க் காட்டினும் ஏனையவற்றிற்கு உதாரணம்: ரந்தாரம், ராசன், ரீபுருசி ரூபம், ரெங்கு, ரேபந்தன், ரொக்கம், ரோகம், ரௌரவம் என்றும் லளிதம், லாலினை, லிகுசம், லீலை, லுத்தம், லூகலம், லெக்கம், லேசு, லோகம், லௌகிகம் என்றும் ரகாரம், லகாரம், அ, இ, உ, இன்றி வழங்குவனவாகலின் காலவகையாமெனக் கொள்க. அவ்வாறு வழங்கும் இலக்கியங்களை ஈண்டு விரிப்பிற்பெருகும். வந்துழிக் கண்டு கொள்க. இயக்கன், இயமன் என்றும் அரங்கம், அராகம், இரதி, இராமன், உரூபம், உரோகம் என்றும் இலங்கை, இலக்குமி, உலோபம், உலுத்தன் என்றும் அக்குறிகள் சேர்த்து வழங்குவனவுங் கொள்க. இனிமொழிந்த பொருள்வயினென்றவவ்வயின்

மொழியாததனை முட்டின்றி முடித்த லென்னும் உத்தியானே டகாரத்தினும் அவ்வாறு சில அருகி வருவனவற்றை 'நீக்கி யுமாம்' என்னுமும்மையை யெச்சவும்மையாக்கி விலக்காது கொள்க. அவற்றிற்கு உதாரணம்: இடமானம், இடக்கயம், இடால், இடாக்கு என இகரக்குறி கூடியும் டம்பக்கம், டாக்கு, டில்லி, டீகு, டௌளாயம் எனக்குறி இன்றியும் வந்தன காண்க.

முன்னூலார் விலக்கியன இக்காலத்திலக்கியங்களில் வழங் கலான் இலக்கியங் கண்டதற்கு இலக்கணமியம்ப வேண்டு தலின் அவற்றைத் தழுவி இலக்கணங்காட்டி நாட்டலின் இது தானுட்டித் தனது நிறுத்தலென்னு மதம்.

இனி. 'பின்னிலை ....அறுநான்காம்' (3, 4 வரி) என்றது இறுதி நிலையாவது பன்னிரண்டுயிரும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினேரொற்றும் குற்றியலுகரமு மாகிய இவ்விருபத்துநான்கெழுத்துமாமென்றவாறு. உயிர் எனப் பொதுப் படக் கூறினமையானே உயிர் தனித்து வந்தனவும் ஒற்றெடு கூடி வந்தனவுமாமெனக் கொள்க. குற்றியலுகரம் உயிர் பன்னிரண்டினும் உகர வீருயடங்கு மேனும் புணர்ச்சி வேறுபாடுண்மை இனிது தோன்ற வேறு கூறினரென உணர்க. என்னை!

"ஆவி, ஞண நமன யரலவ ழளமெய்
சாயு முகரநா லாறு மீறே." (நன். 107)

என்றாராகலின்.

உதாரணம்:- சுட்டும், வினவும், உவம முதனிலையாகிய அ, இ, உ, எ, ஓ என்னும் உயிர் தனித்தீருயின.

இவற்றுள் ஊ, இறைச்சி, ஓ, மதகுநீர் தாங்கும் பலகை,

விள, பலா, கிளி, குரீ, கடு, மரு, சே, தை, கோ என உயிரொற்ருெடு கூடி ஈருயின.

உரிஞ், உண், பொருந், தீரும், தீன், வேய், வேர், வெல், தெவ், வாழ், கேள் என ஒற்றீருயின ...[1] குற்றியலுகரம் ஈருயின.

இனி 'ஔங் நவ்வுயிரே' என்றது ஒகரம் மெய்யொடு கூடி யீருகுங்கால் நகரத்தோடு மாத்திரையே யீரும் (நொ), ஔகாரந் தனித்தீருகாது; மகர, வகரங்களோடு மாத்திரையே கூடியீரும் (கௌ, வௌ). எகரவுயிர் தனித்தீருகாததேயன்றி மெய்யோடு கூடியீருகாதென்றவாறு ஈண்டு ஒகர, ஔகார, எகரங்களை விதந்தோதவே ஏனைய உயிர்கள் தனித்துந் தமக்கேற்ற மெய்யோடு கூடியுமீருமென்பதாயிற்று. இவற்றுள் உய்த்துணர்தலென்னும் உத்தியானே உயிர் நகரத்தொடு கூடியும் எகர, ஏகார ஓகாரஞ் ஞகரத்தொடு கூடியுமீருகா வென்றும் உயிர்கள் மொழி முதலீறு செய்யுளாதி மொழியினும் ஈற்றின் ஓரெழுத்தொரு மொழியாய்த்தனித்து நிற்கினும் இடையில் விட்டிசைத்து நிற்பினும் தம்முருபொடு நிற்கும். ஏனை முதலீறிடைகளினுடம்பொடு கூடியல்லது நில்லாவென வும் ஓர்ந்துணர்க. ஏனை முதலீறிடை நிலைகளிலுனுடம் பொடுகூடியல்லது நில்லாதெனிற் குற்றுயிர் அளவினீருமென நன்னூலார், இலக்கண விளக்கத்தார் கூறியதென்னை எனின் நெட்டுயிரளபெடுப்புழி அணுத்திரளொலி எழுத்தென்றும் நாதகாரிய ஒலியெழுத்தென்றும் ஒலியே எழுத்தென்பது அது அவ்விருவர்க்கும் உடன்பாடாகலான் அவ்வொலி வடிவின் நெட்டுயிரொலி ஒன்றே நீண்டு காண்பதன்றி ஆஅ, என்புழி நெட்டுயிர் குற்றுயிர் இரண்டிஞெலியுங்காண் பது போலக் குற்றுயிர் ஒலி யாண்டுங் காணுமையானும் வரிவடிவின் எகர, ஏகாரங்கள் ஒரு வடிவினவாயும் ஒகர, ஓகாரங்கள் ஒருவடிவினவாயுந் தனி மெய்யும் அகரமூர்ந்த

1. இங்கு உதாரணம் கணப்படவில்லை. நாடு என்ற சொல்லைச் சேர்த்துக்கொள்ளலாம்.

உயிர்மெய்யும் ஒரு வடிவினவாயு நிற்றல் பற்றி அவற்றின் வேற்றுமையுணர்தற்கு எகர, ஒகரந்தனி மெய் கெட்டு மேலே ஒரு புள்ளியிட்டெழுதுவர்; அப்புள்ளிகள் அம் முன்றெழுத்திற் கும் விசேட உறுப்பாய் நிற்பதன்றி வேருெரெழுத்தாகாமை போல இயல்பாய் நின்ற நெட்டுயிர்க்கும், அளபெடுத்த நெட்டு யிர்க்கும் வேற்றுமை அறிதற்கு அறிகுறியாய் நின்ற குற்றுயிர் அந்நெட்டுயிர்க்கோர் விசேட உறுப்பாய் நின்றதன்றி வேருெரு எழுத்தாகாமையானுமது கருத்தன்றெனக் கூறி மறுக்க. எண்ணதிகாரத்துளுயிர் மெய்யை ஓரெழுத்தாக எண்ணினர். அவ்வாறே உயிர்மெய் முதலீறென்னது உயிரொடுகூடி மெய் முதலாமெனவு(ம்) மெய்யொடு கூடியீரீருமெனவுமிரண்டெழுத் தாக ஈண்டு எண்ணியதென்னையெனின் உயிரொடுகூடிய மெய் தன்னளவு தோன்ருது நிற்றலினெற்றுமை நயத்தினல் உயிரும் மெய்யுங் கூடியதோர் எழுத்தென உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாய் ஓரெழுத்தாயும், ஒற்று முன் னும் உயிர் பின்னுமாய் ஒலித்து நிற்றலின் வேற்றுமை நயத் தினல் உயிரும் மெய்யும் எனவும்மைத் தொகையாய் ஈரெழுத் தாயும் நிற்றலினென்றுணர்க. எனவே ஈண்டு உயிரீறு மெய் முதலென்பதன்றி உயிர்மெய் முதலுயிர் மெய்யீறென வழங்கப் படா என்பதாயிற்று. அஃதெற்ருலோ எனின் ஆய்தமொழித்து ஏனைய எழுத்தெல்லாம் உயிருமெய்யுமாயடங்குதலின் மேல் வரும் புணர்ச்சி விதியடங்குதற் பொருட்டு உயிர் முதல் மெய் முதல் உயிரீறு மெய்யீறென வகுத்துக் கொண்டாராதலின் என்றுணர்க.

12 உயிர்மயக்கு மெய்மயக்கொற் றுயிர்மயக்கொற் றெருருமூன்
றெருருமொழியிற் றெடர்மொழியி னிடைமயங்கு முயிர்முன்
வியனுயிர்விட் டிசைத்த தொடர்ச்சொலினுமெய் மயக்கம்
வேற்றுமைநிலை யுடனிலையென் றிருவகைத்தா மவற்றுண்
மயலிலுட னிலைதமிற்ரும் ர, ழ, வ, ல, வீ ரெட்டு
மயங்கு.ந, ஙத் தனிச்சொல்லுரு க, ச, த, பநீத் தீரேழ்
இயல்பிறமெய் யொடுமயங்கல் வேற்றுமைநிலை மயக்காம்
ஈண்டினியொற் றுயிர்மயக்க மவற்றெடவை மயக்கே

என்பது என்நுதலிற்றோ எனின் நிறுத்தமுறையானே இடைநிலை மயக்கமாமாறுணர்த்துவான் துடங்கியவ் இடைநிலை மயக்கமித்துணைய என்பதூஉம் அவை மயங்கும்இடமும் அவற்றின். இலக்கணங்களும் கூறுதல் நுதலிற்று.

இதன் பொருள்:

முன்னர்க் கூறிய மயக்கமாவது உயிர்மயக்கமென்றும் ஒற்றுயிர் மயக்கமென்றும் இருவகைப்பட்டுத் தனி மொழியினுந் தொடர் மொழியினுமிடையே நின்று மயங்கும். அவற்றில் உயிர் மயக்கம் உயிர்முன் உயிர்விட்டிசைத்து நிற்குந் தொடர்ச் சொல்லினிடையே மயங்கும். மெய்மயக்கம் வேற்றுநிலை மயக்கம், உடனிலை மயக்கமென இருவகைப்படும்; அவற்றுள் உடநிலை மெய்மயக்கம் ர, ழ வென்னுமிரண்டு மெய்யுமொழித்த பதினாறு மெய்யுந் தம்மொடு தாமே நின்று மயங்கும். அவ்வாறு மயங்குழி ரகர, மகரமாகிய இரண்டு மெய்யுந் தனிமொழிக்கணின்று மயங்கா; தொடர்மொழிக் கண் மாத்திரையே மயங்கும். வேற்றுநிலை மெய் மயக்கம். க, ச, த, ப என்னும் நான்கு மெய்யுமொழித்த பதினான்கு மெய்யும் பிற மெய்களோடு மயங்கும். இனி ஒற்றுயிர் மயக்கம் ஒற்றின் முன் உயிரும் உயிரின் முன் ஒற்றும் நின்று மயங்குமென்றவாறு. இடையே வியன் மயல் இயல், ஈண் டென்பன தொடை நீக்கி நின்றன. இவற்றுள் உயிர்மயக்கம் 'விட்டிசைத்த தொடர்சொலின' (2- வரி)மென்றலின் தனிமொழிக் கண் மயங்காவெனவுந் தொடர்மொழிக் கண்ணும் விட்டிசைத்து நின்று அன்றிக்கூடி மயங்காவெனவும் மெய் மய்க்கத்திற் க, ச, த, ப வென்று நான்கு மெய்யுந் தம்மொடு தாமே மயங்கு மெனவும் ர, ழ வென்னுமிரண்டு மெய்யுந் தம்மொடு பிறவே மயங்குமெனவும் ஏனைப்பன்னிரண்டு மெய் யுந் தம்மொடு தாமும் பிறவும் மயங்குமெனவும் ஓர்ந்து கொள்க. என்னை!

"க, ச, த, ப ஒழித்த ஈரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழவொழித் தீரெட்
டாகுமிவ் விருபால் மயக்கும் மொழியிடை
மேவும் உயிர்மெய் மயக்கள வின்றே" (நன். 110)

என்றாராகலின் இச்சூத்திரத்தில்......ஒழிந்தஉயிர் மயக்கம் சான்றோர் செய்யுட்களின் அவ்வாறு உயிர் தன் வடிவோடு நின்று விட்டிசைத்த தொடர் மொழிக்கண் மயங்குதலின் அவற்றிற்கு இலக்கணங்காணாமையிற் புதியன புணர்த்தலாய் இவ்வாசிரியர் தாமே நாட்டி நிறுத்தினாராதலின் அது தானட்டித் தனது நிறுத்தலென்னும் மதம். இன்னும் அச் சூத்திரத்து மொழியிடை மேவுமெனப் பொதுப்படக் கூறினமை பற்றி இம்மயக்கந் தனிமொழிக்கண்ணே என்பாரும் இருமொழிக் கண்ணுமாம் என்பாரும் உளராதலின் அவை பற்றியையுறாது எங்ஙன மயங்கினும் இரண்டெழுத்து இயைந்து பொருந்தும் பொருத்துவாயை இடைநிலை என்பத னாலும் இயையாதெனவரின் இயைவனவாய் விகாரப்படுத் தலானும் மேற்கூறுந் தொடர்மொழிப் புணர்ச்சிக்கும் இதுவே விதியன்றி வேறு விதி கூறாமையானும் இருமொழியினுமிம் மயக்கங் கோடல் வேண்டுமென்பார். 'ஒரு மொழியீற்றொடர் மொழியினிடை மயங்கு' (1- வது வரி) மெனவும் இவை இரு மொழியினும் மயங்கும். இவை தொடர் மொழியின் அன்றித் தனிமொழியின் மயங்காவென வரைந்து வகை பிரித்துங் கூறினர் இன்னும் அச்சூத்திரத்தின் 'உயிர் மெய் மயக்கள வின்றே' என்பதனை உயிருமெய்யுமாறி மயங்கலென கொள் ளாது, உயிர்மெய் முன் உயிர்மெய் மயங்கல் என்பாருமுளராதலின்; உயிர்மெய்யை யீண்டிரண்டெழுத்தாக முதலீரிடை நிலைகளிற் பிரித்து விதி கூறலான் அதை ஒன்றாகக் கூறுதல் பொருந்தாமையானுங் கூறின் மேல்வரும் புணர்ச்சி விதிகட்கு இயையாமையானும் இந்நூலினுமுயிர்மெய் மயக்

1. இவ்வரி சூத்திரத்தில் காணப் படவில்லை.

கெனக் கூறினவாறு மயங்குவரெனக் கருதி 'ஈண்டினி...... வற்ரெடவைமயக்கே' (4-வரி) வேற்றுமை நிலை மயக்கத்திற்கு மேல்வருஞ்செய்யுளாற் சிறப்பு விதி கூறலின் அங்ஙனம் உதாரணம் காட்டுதும், ஏனையவற்றிற்குமுதாரணம்.

உதாரணம்:

காக்கை, காக்கைக் கூட்டம் எனவும் பச்சை, பச்சைச் செடி எனவும் மஞ்ஞை, மெய்ஞானம் எனவும் பட்டை,மட்டார் (குழல்) எனவும் மண்ணை, கண்ணீர்(நிழல்) எனவும் தத்தை, தத்தைத் திரள் எனவும் அப்பு, அப்புப் பெருக்கு எனவும் அம்மி; மும்மணி எனவும் வெய்யா; மெய்யுணர்தல் எனவும் எல்லி; நல்லுணர்ச்சி எனவும் செவ்வி, எவ்வழி எனவும் கிள்ளி, புள்ளினம் எனவும் கொற்றி, பற்றற்ரூர், கன்னி என்றுயிர்; க, ச, ஞ, ட, ண, த, ந, ப, ம, ய, ல, வ, ள, ற, ன என்னும் பதினன்கு[1] மெய்யுமிரு மொழிக் கண்ணும் வெந்நீர் எங்ஙனமென நகரங் நகர மிரண்டுந் தொடர் மொழிக்கண் மாத்திரையுந் தம்மொடு தாமே நின்று மயங்கினவாறு காண்க. அல, கல, கருவி, கா, ஆமை எனத் தனி மொழிக் கண்ணும் ஆனேறு, ஏறு உயர்த்தான் எனத்தொடர் மொழிக்கண்ணும் உயிர்முன் மெய்யும் மெய்முன் உயிரு நின்று மயங்கினவாறு காண்க. இவ்வாறுமொழிக்கண் மயங்குவதன்றியுங் க, கி, கு, என எழுத்தின் கண்ணும் ஒற்றின் முன் உயிர் மயங்குவதாய் இம்மயக்கம் வருதலினிடம் விதந்து வரையறுத்தற்கமையா தெனக்கருதி 'அவற்ரேடவை மயக்கே'. (4-வரி) எனப்பொதுப் படக் கூறினர். எழுத்தின்கண் மயங்குழி உயிர்முன் ஒற்று மயங்காவென்பதறிக.

13. மயங்குமென்மைமு . . . . முன் கசப
வரும்ன,ணமுன் க, ப, மவரும் லளமுன்வரும் பகவ
தயங்குயர, ழமுன்க, ப, ம, வ, த, நவரும் லம்முன்
சவுமம்முன் வவுமயங்கு மிருசொலினும் ய, ர,ழ,

1. இங்கு பதினைந்து மெய்உள்ளது.

வயின்ச, ஞவும் ன, ண முன்வச ஞவும்ளம் முன்சவும்
வலிங, ய, வில் பத்தின்முன்னர் யவுந்தொடர்ச் சொலி
டையா
முயர்ந்தயர ழமுன்க, ப, ம த, ந, ச, ஞ, ங வீரொற்
றுறும்ர, ழவும் யவின்ஙவ்வுந் தனிக்குறிலு ருவே.

என்பது என்நுதலிற்றோ எனின் மேற்கூறிய வேற்று நிலை மெய் மயக்கத்தின் சிறப்பு விதி யுணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:-

ங, ஞ. ண ந, ம, ன, என்ற மெல்லெழுத்தாறன் முன்னும் அவற்றிற்கு இனமாகிய க, ச, ட, த, ப, ற, என்னும் வல்லெழுத்தாறும் முறையே ஙம்முன் கவ்வும், ஞம்முன் சவ்வும், ணம்முன் டவ்வும், நம்முன் தவ்வும், மம்முன் பவ்வும், னம் முன் றவ்வும் நின்று மயங்கும். டம் முன்னும் றம் முன்னுங் க, ச, ப என்னும் மூன்றொற்றும் மயங்கும். ணம் முன்னும் ணம் முன்னும் க, ப, ம என்னும் மூன்றொற்று மயங்கும்; லம் முன்னும் ளம் முன்னும் ப, க, வ என்னும் மூன்றொற்று மயங்கும். யம் முன்னும் ரம் முன்னும் ழம் முன்னும் க, ப, ம, வ, த, ந என்னும் ஆறொற்றும் மயங்கும். லம்முன் ப, க, வ, என்பதன்றிச் சகரமும் மம்முன் பகரமன்றி வகாரமும் மயங்கும். இங்ஙனம் விதந்தவைகள் தனிமொழி, தொடர்மொழி இரண்டினுமாம். யம் முன்னும் ரம் முன்னும் ழம் முன்னுஞ் ச, ஞ, என்னும் இரண்டு ஒற்றும் னம் முன்னும் ணம் முன்னும் வ, ச, ஞ என்னும் மூன்றொற்றும் னம் முன் சகரமும் வல்லெழுத்தாறும், ங, ய என்னும் இரண்டுமாக எட்டு ஒற்று நீக்கி ஞ, ந, ண, ம, ன, ர ல, வ, ழ, ள என்னும் பத்தொற்றின் முன்னும் யகரமும் தொடர் மொழிக்கண் மயங்கும். ய, ர, ழ என்னும் மூன்றொற்றின் முன்னும் இரு மொழியினுந் தொடர்மொழியின் மாத்திரையும் மயங்குவனவாய் முன்னர் விதந்த க, ப, ம, வ, த, ந, ச, ஞ என்னும் எட்டொற்றின் முன் ... ... விதவாதங் கரமுமாக எட்டொற்றும் ய, ர, ழ, ஒற்றின் முன்வந்து மயங்குழித் தனி ... ... த மெய்யுமாக மயங்கின தன்றியும் ஈரொற்றுயும் மயங்கும். அவ்வாறு மயங்

குங்கால் ரகர, ழகர ... ... அவ்வெட்டொற்றும் யகரத்தின் முன்னர்; ஙகரமுந் தனிக் குற்றெழுத்தின் கீழ் அவ்வாறு ஈரொற்ருகா என்றவாறு; யவினங்வவெனப் பிரித்தமையால் ர, ழ முன் எட்டொற்று மென்ரும்.

இடையே 'தயங்கு' (2-வரி) 'உயர்ந்த' (4-வரி) என்பன தொடை நோக்கி நின்றன. உய்த்துணர்த லென்னும் உத்தியானே அவ்வாறீறு ஈரொற்ருய் மயங்குங்கால் யகரத்தின் முன் ஙகரமும் ரகரத்தின் முன் ஞகரமும் நகரமும் ழகரத்தின் முன் மகர, ஞகர, ஙகரமுந் தனிமொழிக்கண் வாராதெனவும் தனிக்குறிலின் கீழ் (யகரத்தின்) யகரத்தின் முன் வரைந்த ஙகர மன்றி ஏனை ஏழொற்று மயங்குழிக் க, ப, த, ச என்னும் நான்கொற்றும் இருமொழிக்கண்ணும் ம, ந, ஞ என்னும் மூன்ருெற்றுந் தனிமொழிக்கண் மாத்திரையு நின்றும் மயங்குமெனவும் உரையிற் கொள்க. என்னை!

"ஙம்முன் கவ்வும் வம்முன் யவ்வும்
ஞந முன் இனமும் யகரமும் டறமுன்
கசபவும் ணனமுன் இனமும் கசஞப
மயவவும் மம்முன் பயவவும் யரழமுன்
மொழிமுதல் மெய்யும் லளமுன் கசப
வயவும் நின்று மயங்கும் என்ப" (இ வி. 32)

என்றும்

"யரழ ஒற்றின்முன் க ச த ப ங ஞ ந ம
ஈரொற் ரும்ரழ தனிக்குறில் அணையா" (நன்.119, இ. வி.33)

என்றும் கூறினராகலின் இச்சூத்திரங்கட்கும் இந்நூற் செய்யுட்குஞ் சில பேதங்கள் தனிமொழி தொடர்மொழி பகுத்தமையான் உள்ளது என்பது உய்த்துணர்ந்து கொள்க. இவற்றிற்கு உதாரணம்; கங்குல், செங்கை என்றும் மஞ்சு, செஞ்சுடர் என்றும் வண்டு, பெண்டண்மை என்றும் பந்து, செந்திரு என்றும் அம்பு, பைம்புனம் என்றும் நன்று, தென்றிசை என்றும் மெல்லெழுத்தாறன்முன்னும் அவ்வல்லெழுத்தாறும் இருமொழிக் கண்ணும் நின்று மயங்கின.

வெட்கம், உட்கனிவு என்றும் வெட்கி, உட்சிலே, பட்சி, வெட்பா என்றும்[1] டகரத்தின் முன்னும் ஒற்கம், பொற்கிழை என்றும் முயற்சி, பொற்சிலே, பொற்பனி என்றும் ரகரத்தின் முன் க, ச, ப என்ற மூன்ருற்றும் இருமொழிக் கண்ணும் புன்கு, நின்கழல் என்றும் அன்பு, நன்பொருள் என்றும் நன்மை, தென்மலே என்றும் னகரத்தின் முன்னும் க, ப, ம என்னும் மூன்ருற்றும் இருமொழிக்கண்ணும் நின்று மயங்கின. சால்பு, வேல்பெரிது என்றும் அல்கல், கொல் கூற்றம் என்றும் செல்வம், நல்வினே என்றும் லகாரத்தின் முன்னும் விள்பலா, வாள்பெரிது என்றும் உள்கல், கொள்கலன் என்றும் கள்வன் வெள்வளே என்றும் ளகரத்தின் முன்னும்; ப,க,வ என்னும் மூன்ருற்று இருமொழிக்கண்ணும் மயங்கின.

பொய்கை, செய்கடன் என்றும் தெய்வம், உய்வழி என்றும் செய்தல், செய்தொழில் என்றும் ஆய்நர், வேய் நன்று என்றும் யகரத்தின் முன்னும் சேர்க்கின்ருர். வேர்குறிது என்றும் சேர்பவர், வேர்பெரிது என்றும் சீர்மை, போர்முனே என்றும் ஆர்வம், போர்வலி என்றும் தீர்தல், ஊர்தணந்தான் என்றும் சேர்நர், சீர்நன்று என்றும் ரகரத்தின் முன்னும் வாழ்கின்ருர், ஊழ்கடிந்தார் என்றும் வாழ்பவர், வீழ் பெரிது என்றும் கீழ்மை, பாழ்மனே என்றும் வாழ்வு, ஊழ் வலி என்றும் வாழ்தல், கீழ்திசை என்றும் வாழ்நர், வீழ் நன்று என்றும் ழகரத்தின் முன்னும் க, ப, ம, வ, த, ந. என்னும் ஆருற்றும் இரு மொழிக்கண்ணும் மயங்கின. வல்சி, பல்சுடர் எனலகரத்தின் முன் சகரமும் சம்வாகம், நிலம் வலிது என மகரத்தின் முன் வகர இருமொழிக்கண்ணும் மயங்கின. வேய் சிறிது, வேய் ஞான்றது என யகரத்தின் முன்னும் வேர் ஞான்றது என்றும் ரகரத்தின் முன்னும் வீழ்சிறிது, வீழ் ஞான்றது என்றும் இரண்டொற்றும் பொன்வலிது, பொன் சிறிது, பொன்ஞான்றது என னகரத்தின் முன்னும் கண்

1. 'என்று' என்று இருத்தல் நலம்

வலிது, கண்சிறிது, கண்ஞான்றது என ணகரத்தின் முன்னும் வ, ச, ஞ என்னும் மூன்றொற்றும் வாள்சிறிது என ளகரத்தின் முன் சகரமும் உரிஞ்யாது, தடம்யாது, பொன்யாது, வெரிந்யாது, மண்யாது, பொருள்யாது, வேர்யாது, வெல்யாது, தெவ்யாது, வீழ்யாது, வாள்யாது என ஞ, ண, ந, ம, ன, ர, ல, வ, ழ, ள என்னும் பத்தொற்றின் முன்னும் யகரமுந் தொடர்மொழிக்கண் மயங்கின. வாய்க்கும், வேய்க்குறை என்றும் வாய்ப்பு, வேய்ப்புனம் என்றும் மொய்ம்பு வேய்ம்பொழில் என்றும் வாய்த்தது, வேய்த்தரு என்றும் வாய்ந்தது, வேய்ந்தரு என்றும் வாய்ச்சது, வேய்ச்சினை என்றும் வெய்ஞ்சினை என்றும் யகரத்தின் முன் க, ப, ம, த, ந, ச, ஞ, என்னும் ஏழொற்றும் பீர்க்கு, வேர்க்குறை என்றும், ஆர்ப்பு ஊர்ப்பொது என்றும் ஆர்தல், கார்த்திறன் என்றும் நேர்ந்தார் நீர்ந்தடம் என்றும் நீர்ச்சி, நேர்ச்சிறை என்றும் சார்ங்கம், ஈர்ங்கை என்றும் ரகரத்தின் முன் க, ப, ம, த, ந, ச. ங, என்னும் ஆறொற்றும் வாழ்க்கை, பாழ்க்கை, வீழ்க்குறை என்றும் தாழ்ப்பு, காழ்ப்பனை என்றும் காழ்த்தல், ஊழ்த்திறன் என்றும் வாழ்ந்தார், பாழந்தெரி என்றும் தாழ்ச்சி, கேழ்ச்சுடர் என்றும் ழகரத்தின் முன் க, ப, ந, த, ச என்னும் ஐந்தொற்றும் இருமொழிக்கண்ணும் நின்று மயங்கின. வேய்ங்குழல் என யகரத்தின் முன் ஙகரமும், ஈர்ஞ்சுனை, ஈர்ம்பனை என ஞகரத்தின் முன் ஞகர மகரங்களும் வீழ்ம்படை, பாழ்ஞ்சுனை, பாழ்ங்கின்று என ழகரத்தின் முன் மகர, ஞகர, ஙகரங்களுந் தொடர்மொழிக்கண் மாத்திரையே மயங்கின. மொய்க்கும், மொய்த்தண் எனவும் மேய்தல், பொய்த்தலை எனவும் மேய்ச்சல், பொய்ச்சொல், வாய்ப்பு, பொய்ப்பல் என்றும் தனி யகரத்தின் முன் க, ச, த, ப என்னும் நான்கொற்று இருமொழிக்கண்ணும் மொய்ம்பு, உய்ந்தான், தேய்ஞ்சான் என ம, ந, ஞ, என்ற மூன்றொற்றுந் தனிமொழிக்கண் மாத்திரையும் ஈரொற்ருய் நின்று மயங்கின. ஈண்டு புதியன புணர்த்தலாய் மொழிக்கு முதலாக்கிய லகர, டகரங்கள் அவற்றிற்குக் கூறிய

அ, இ, உ என்னுங் குறிகளன்றி வருங்காலம் மயக்கவிதி இறந்துவரும். அதுவுங் கால வேற்றுமையாற் கொள்க.

உதாரணம்:-

எட்டானைத் தம்பத்தோ டிகல் புரிதன்
சயத்தம்ப மினிதி ஞட்டுஞ்
சிட்டனில விதழ்ச் சுமதி முலைதோய்ந்து[2]
ரிபு விருக தேசன் விப்பிரன்
மட்டவிழ்தா ரிபுஞ்சயன்சொல் விருகலெனன்
பவர்ப் பயந்தான் ரிபுவும் வாய்ந்த
பெட்பிஞெடும் பிருகதிதன் முலைதோய்ந்து[2]
சக்குசனைப் பெற்ரு னன்றே
(கூர்ம புராணம் – 3 தக்கனை சபித்த அத்நியாயம்-2)

இதின் அதிவீரராமர் மொழிக்கு முதலாகாத ரகரத்தை மொழிக்கு முதலாக்கியும் ரகரத்தொடும், ஙகரத்தொடும் மயங்கா ரகரத்தைத் தார் ரி, பு, ஞ, ச யன பயந்தானிரிபுவென மயக்கமாக்கியுங் கூறினர். இஃதன்றியும்

எண்டகுஞ் சம்புடம் வேட்டி தம்விசும் பிதமுதற் புல்லம்
பிண்டிதம் பீடிதம்மே பிரே துகைய நுபாதந்தான்
பண்டதங் கடகமத்த பத்ம வாசனஞ் சமூர்த்தந்
தண்டகம், லளிதம்வேணுச் சாரிதஞ் சமவேசன்னம்
(கந்த புராணம், தேவகாண்டம், இந்திரபுரிப்படலம் 47)

என்னுஞ் செய்யுள் வியாழபகவன் இந்திரற்குக் காமநூல் உபதேசம், கந்தபுராணச் செய்யுள் - இதன் இலக்கணம் கச்சியப்பர் லளிதம் என்பதை மொழிக்கு முதலாக்கியும் மகரத்தொடும் யகர, ஙகர, லகரத்தை மயக்கமாக்கியுங்

1. இங்கு ஏழு ஒற்றுள்ளது.
2. கூர்மபுராணம் முதநூலில் இரண்டு இடத்திலும் சேர்ந்து என்பது மற்ருெரு பாடமாக அடிக்குறிப்பில் உள்ளது.

கூறினர். அந்நூற்கள் தெய்வத்தன்மையாய் உள்ளதாதலால் வ……விலக்கக் கூடாமையானும் இன்னும் இவ்வாறு பல சான்றோர் செய்யுளினும் பயின்று …… இலக்கியங் கண்ட தற்கு இலக்கணம் இயம்ப வேண்டுதலின் இவ்வாசிரியர் 'காலகரமொழி … … எனவும்; டகரத்தை உம்மையாற்றழுவி யுங்' கூறினர்[1]. இவ்வாறு பிறவும் வந்துழிக் காண்க. எழுத்துக்களெல்லாம் உயிரும் ஒற்றும் ஆய்தமும் ஆய் அடங்கிலின் உயிர்க்கு ஏமாற்றிற்கு முதலீறு இடை நிலை கூறி ஆய்தத்திற்கு கூறுதொழிந்தார். அஃது முதலினும் ஈற்றினும் வராமையானும் இடையின் மயக்க விதியதன் பிறப்பதிகாரத்தினமைந்து கிடந்தமையானும் எனவறிக.

14. தனையுணர்த்தி னெழுத்துமுன்பின் னிடைவிதி நீத்தலுமாந்
தன்மையொன் றெற்றுமையா யப்பொருட்டாம் போலி
இனம்மதிரண் டிரண்டாயொற் றுமையாநீத் தம்முன்
இயவுறினே யுவ்வுறினெள மோவ்வுவேய்யி
மனசதப சதவயவே வமலளவே ஞநவா
மற்றிடைமுன் சஞயமுன்னமை'வையியையும் மகரம்
பனுகரங்கான் காரணச்சாரியை யெழுத்திற்கொன்று
பலவினென்று பலவியையு மிலதுமா பெழுத்தே.

என்பது என்நுதலிற்றோ எனின் முன்னர்க் கூறிய முதலீறு இடைநிலை 'கடகாவ' தொடர் புறனடையு நிறுத்த முறை யானே போலி இலஃகணமும் அவற்றின் விகற்பங்களும் எழுத்துச் சாரியைகளா மாறுங் கூறுதனுதலிற்று[2]

இதன் பொருள்:

'தனை … நீத்தலுமாம்' (1-வரி) என்றது எழுத்துக் கடமையுணர்த்தி நிற்கின்ற முதலீறு, இடைநிலை கடங்னனம் …… தியனறி முதலீறு இடைநிலைகளாய் வரினுமாம் என்ற வாறு. 'தனை' என்றது சாதியொரு …… மாபிசைப்பின் முதலீறு இடைநிலையம்மா பில்லவும் பிரமென மொழிய என்றாராகலின்.

---

1 இவ்வரி சூத்திரத்தில் காணப்படவில்லை.

2. சாரியைகளும் கூறுதல் நுதலிற்று என்று இருப்பின் நல்லது.

"னலமுன் றனவும் ணளமுன் டணவும்
ஆகுந் தநக்க ளாயுங் காலே" (நன்.237)

என்புழி னகர மொழிக்கு . . . தொடும் . . . டகரத்தொடு மயங்காத நகர னகர மயங்கியும் வந்தன. கேப்பெ ... டிது என்புழி மெய்யோடு ஈருகாத எகரமெய்யொடு ஈருயும் நகரத் தொடனறியீரு . . .க்காத தொடீருயும் வந்தன. பிறவும் விதி நீங்கி வருதல் வந்துழிக் காண்க. நீத்தலும் மாமென்னும் உனைமயாற்றம்மை யுணர்த்துழியும் விதித்தமுறையே வருதல் இலக்கணமென்றவாயிற்று.

இனி தன்மை போலி என்பது எழுத்தொன்றின் நிலைக் களத்தொன்றுற்றுப் பொருள் வேற்றுமைப்படாது ஒற்றுமை யாய் அப்பொருளை உடைத்தாம் போலி என்றவாறு தம்மை என்பதெழுத்து. இப்போலி எழுத் . . .

கரந்தைத்தமிழ்ச் சங்கப் பிரதி

சுவாமிநாதம் மூலம்

காப்பு

அ. திருவுங் கல்வியுஞ் சீருந்த ழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம்ப ழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவோம்

கடவுள் வணக்கம்

செல்வம், கல்வி, புகழ் ஆகியவை பெருகவும் அருள் சுரக்கவும் மருள் நீக்கவும் நமது உள்ளம் பக்குவப்படவும் மேன்மேலும் வளரும் விநாயகப் பெருமானை வணங்குவோம்.

நூன் மரபு

ஆ. பூமகளும் பாமகளும் போற்றுமிம வான்மகளுங்
கோமகளுங் கொண்டார்கைக் குஞ்சரமே - மாமகிமைத்
தொன்னூற் குளுண்டாய்ச் சுவாமிநாதப் பெயராம்
இந்நூற்குங் காப்பா குமே.

நிலமகளும் பாமகளும் போற்றுதற்குரிய உமாதேவியும் இலக்குமியும் உள்ளத்தில் கொண்டு நிறைதற்குக் காரணமான விநாயகப்பெருமானே. தொன்னூல்கள் பலவற்றிலிருந்து தொகுத்த இலக்கணமான சுவாமிநாதம் என்ற இந்நூலுக்குக் காப்பாகும்.

பாடவிளக்கம்:

பி. பொ. பிரதியின் முதல் வரியில் ... போற்றுமே நாமகளும் என்ற பாடமும், மூன்றாவது வரியில் தொகுத்த இலக்கணம் என்ற தொடரும் (சுவாமிநாதப் பெயராம் என்ற தொடருக்குப் பதிலாக) காணப்படுகின்றன.

சிறப்புப் பாயிரம்

1 பூமிசைபன் மொழியின்வேங் கடமுக்க டற்குட்
புணர்தமிழைந் தியல்நிகண்டாய்ந் தார்எளிதினுணரத்
தோமின்முன்னூல் வழியொருநூல் வேண்டுமெனத் துறைசைச்
சுடர்மணிசுப் பிரமணிய குருமணிபார்த் தருள
ஆமிதெனக் குருபதமும் திருக்குறிப்புந் தலைக்கொண்
டகத்தியனைச் சிவசுப்பிர மணியனென வீன்ற
சாமிகவி ராசனதி குலத்தோன்கல் லிடையூர்ச்
சம்பனன்செய் தனன்சாமி நாதமென்றிந் நூலே.

நூலாசிரியன் பற்றி (சிறப்புப் பாயிரம்) கூறுகின்றது.

2வது வரி . . . முந்நூல் . . .
3வது வரி எனக் (குருபதமும்)
,, சிவசுப்பிரமணியனேன் ஈன்ற

ஏனையவை கே. ப. பிரதி பாடத்தோடு (2ஆம் ...
ஒத்துக்காணப்படுகிறது. இந்த சூத்திரத்திற்கு வி...
உரை காணப்படுவதால் இங்கு உரை எழுதப்படவில்லை.

பி. பொ. பிரதியில் உள்ள சூத்திரக்கருத்து ஒ...
காணப்படுகிறதே தவிர சொல் ஒற்றுமை மிகக் குறை...
உள்ளது.

2 நூல்பதிகங் குற்றமின்மை யழகுமத முத்தி
நுவல்பயன்சூத் திரந்திரட்டோ டுரைதழீஇ யினதாஞ்
சாலும்அது முதல்வழிசார் பெனமூன்ற(ம்); முதனூற்
றலைவனூல்; அவ்வழித்தாய்ச் சிலவிகற்பாம், வழிநூ...
மேலவற்றோர் மருங்குபற்றிச் சார்புகா லத்தால்
வேறுபடும் பாயிரந்தான் பொதுச்சிறப்பென் றிரண்...

ஏலவற்றிற் பொது,வீவோன் றன்மை, கொள்வோன் றன்மை
யீதல்,கொளல், இயல்பெனநாற் பகுதிகுல வுறுமே (எ)

நூலின் பண்பு, நூலின் வகை, பாயிரத்தின் வகை, பொதுப் பாயிரத்தின் பண்பும் விளக்குகின்றது.

உரை:

பதிகம் உடையதாய் (பத்து வகை) குற்றத்தை அகற்றி, (ஏழு) மதமும் (முப்பத்திரண்டு) உத்தியும் நூற்பயனும் உடைத்தாய் சூத்திரம், திரட்டு ஆகியவற்றோடு உரையும் பொருந்தியது நூல். அது; முதல், சார்பு, வழி என்று மூன்று வகைப்படும். அவற்றுள் முதநூல் என்பது தலைவன் எழுதிய நூல். முதநூலைத் தழுவி சில வேறுபாடுகளைச் செய்துகொள்வது வழி நூல். சார்புநூல் முதநூலும் வழி நூலும் ஒருபுடை ஒற்றுமை உடையதாய் காலத்தால் வேறு படுவது.

பாயிரம்: பொது, சிறப்பு என்று இருவகைப்படும். அவற்றுள் பொதுப்பாயிரம் என்பது ஆசிரியனது பண்பு, மாணுக்கனின் பண்பு, கற்பிக்கும் முறை, கற்கும் முறை என்று நான்கு வகைப்படும்.

பாட விளக்கம்:

இது பி. பொ. பி. 3வது சூத்திரத்தோடு ஒருபுடை ஒப்புமையே உடையது.

பி. பொ. பிரதியில் நூலின் வகை, அவற்றின் விரி, நூலின் இலக்கணம், பாயிரத்தின் வகை என்ற முறை காணப்படுகின்றது.

கே ப. பிரதியில் பாயிரம் பற்றிய சூத்திரங்கள் காணப்படவில்லை. எனவே இதற்கும் அடுத்துவரும் பன்னிரண்டு சூத்திரங்களுக்கு உரை எழுதப்பட்டுள்ளது.

3 குலன்,அருள்,வெஃகாமை,சுசி யொழுக்க,மன்பு, தெய்வங்
கொள்கை,செல்வம் வாய்மை,யெழி, லின்றியமையாமை,
யுலகியற்கை யறிதல்,ழுக் காறின்மை, மேன்மை,
யுரைவன்மை, பொறைநிலைமை, தோற்ற,நடு நிற்றல்
கலைபயிலுந் தெளிவு,முக மலர்ச்சி,யையந் தீர்த்தல்,
கரவின்மை பொருளாழ, மளவின்மை, கீர்த்தி,
நல,முயற்சி, யளவு,பயன், குணம் பிறவு முடையான்
நற்குருவா, மிவற்றெதிர் துர்க்குருவின்றன் னியலே (௩)

இது ஆசிரியனின் இலக்கணம் (ஈவோன்) கூறுகின்றது.

உரை:

உயர்குடிப் பிறப்பும் அருள் உணர்வும் பொருள்களின் மேல் விருப்பம் இன்மையும் தூய்மையும் நல்லொழுக்கமும் அன்பும் தெய்வ வழிபாடும் செல்வமும் வாய்மையும் அழகும் இன்றியமையாத தன்மையும் உலகியல் அறியவும் பொறாமை இல்லாமையும் ஆகியவற்றால் எய்திய மேன்மையும் எடுத்துச் சொல்லும் ஆற்றலும் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலும் அசைக்கப்படாத நிலைமையும் தோற்றப்பொலிவும் நடுநிலைமையும் பல நூல்களைப் பயின்ற தேர்ச்சியும் முகமலர்ச்சியும் ஐயங்களை நீக்கும் பண்பும் கரவு இல்லாமையும் பொருள் ஆழம் உடைமையும் அளவிலா அறிவும் புகழும், நலமும் முயற்சியும் அளவும் பயனும் குணமும் பிறபண்புகளும் உடையவன் நல்ல ஆசிரியன். இப்பண்புகளுக்கு மாறுபட்ட பண்புகளை உடையவன் தீய ஆசிரியன் ஆவான்.

பாட விளக்கம்:

பி. பொ. பிரதியில் நல்ல ஆசிரியனின் இலக்கணமும் (4-வது சூத்.) தீய ஆசிரியனின் இலக்கணமும் (5-வது சூத்.) தனித் தனி சூத்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

4 தன்மகன்,மன் மகனு,சான் மகன்,கொடுப்போன், பணிவோன்,
றகக்கூரி யன்,னிவருட் கொலை,களவு, காமம்,

வன்மடி,நோய், கட்குடி,பொய்,மிடி,சின,நூற் கச்சம்,
ஆனமந்தம், பிணக்க,மட நகை,துயில்வன், கண்மை
புன்மதி,தீ துணர்கை,பல(ர்) பாற்கற்றிடல்அச் சுறுத்தல்,
புகன்றதுண ராமை,யின்றிச் சொற்சொற்றுங் குணர்தல்,
நன்முறைசூழ்ந் துணர்தல்,பத்தி, குலாதியினோர் பனவும்
தன்னினன்கொள் வோனிவெற்றி னெதிருளன் கொள்
கிலனே. (சு)

மாணாக்கன் இலக்கணம் (கொள்வோன்) கூறுகின்றது.

உரை:

தன்னுடைய மகன், அரசனுடைய மகன், ஆசிரியனுடைய மகன், பொருள் கொடுப்போன், பணிவு உடையோன், கூரிய அறிவு உடையோன், ஆகிய பண்பு உடையவர்களுள் கொலை, களவு, காமம், சோம்பல், நோய், கட்குடி, பொய், வறுமை, சினம், பல்நூல்களைப் படிக்க வேண்டும் என்ற அச்சம், மந்தம், பிணக்கம், மடநகை, தூக்கம் மிகுதி உடையோன், தீய அறிவு, தீய உணர்வு, பலரிடம் சென்று கற்றல், அச்சுறுத்தல், சொன்னதை அறிந்து கொள்ளாத அறிவு ஆகிய பண்பு இல்லாதவனும், சொல்லியதை சொன்னவாறு உணர்தல், சூழ்நிலையை உணர்தல், பத்தி உடையோன் ஆகிய பல நல்ல குணங்களைப் பொருந்தியவன் நல்லமாணாக்கன் ஆவான். இந்தப் பண்புகளுக்கு எதிரான பண்புகள் உடையவன் அறிவு கொள்ள முடியாத தீய மாணாக்கன் ஆவான்.

பாட விளக்கம்:

பி.பொ.பி. 6-வது சூத்திரத்தை ஒத்தது. இரண்டிற்கும் பாட ஒற்றுமை இல்லை.

5 கொள்பவன்கோ ளுணர்ந்திடங்கா லங்குறித்து விரைவு
கோபமின்றி யோதல்கொடை பொழுதொடுசென் றிறைஞ்சி
வள்ளல்குணங் குறிப்பினிசைந், தகம்வயிருய்ச், செவியே
வாயாய், நூல் சோருயுண் பவனில்விரைந் தறிதல்

உள்ளன் முக்காற் கேட்டல்வழக் கறிதல்கூ ரியனூல்
உடன்பயிறல் நூல்பலகால் பார்த்திடல்சிந் தித்தல்
பிள்ளையெனக் குருவையுவப் பித்தலக லாமை
பிறர்க்குரைத்தல் பிறிதுறினுண் டொழிதலுநூற் கொளலே.
(ரு)

கற்பிக்கும் முறையும் (ஈதல்) கற்றுக்கொள்ளும் முறையும் (கொளல்) உணர்த்துகின்றது.

உரை:

அறிந்துகொள்ள வேண்டியவைகளை உணர்ந்து இடம், காலம் அறிந்து விரைவும் கோபமும் இல்லாமல் படித்து கற்கத்தக்க காலத்திலே சென்று வணங்கி ஆசிரியனின் குணத்தைக் குறிப்பாக அறிந்து மனமே வயிறாகவும் செவியே வாயாகவும் கற்கவேண்டிய நூலே சோறாகவும் உண்பவனைப் போல் விரைந்து அறியவேண்டும். ஆராய்தலும் மூன்றுமுறை கேட்டலும் வழக்கை அறிந்துகொள்ளலும் உடன் பயில்வோரொடு கலத்தலும் பலமுறையும் பார்த்தலும் சிந்தித்தலும் செய்யவேண்டும்.

குழந்தை போன்று ஆசிரியரை மகிழ்ச்சியடையச்செய்தல், ஆசிரியரை விட்டு நீங்காமை, தான் அறிந்தவற்றைப் பிறர்க்கு, எடுத்துச் சொல்லுதல், பிறிது உற்றால் அங்கேயே விட்டு விடல் ஆகியவைகள் கற்றுக்கொள்ளும் முறைகளாகும்.

பாட விளக்கம்:

பி. பொ. பி. ஏழாம் 'சூத்திரத்தின் கொள்பவன்.... விரைந்தறிதல்' (முதல் 2வரி) வரையும் முழு ஒப்புமை உடையது, ஏனைய பகுதி வேறுபாடு உடையது.

6 நூற்பெயர், நூல்செய்தான்பேர், வழிபயனே டெல்லை
நூலினுத லியபொருள்கேட் பவர்யாப்பா மெட்டும்

பாற்படுங்கா லங்களன்கா ரணமூன்றுந் தொகுத்துப்
பதினொன்றும் பிறவும்வைத்தல் சிறப்புப்பா யிரமாம்
வாய்ப்புறுத்தன் குறுத்தன்சேய் தன்னொடுங்கற் றவன்றன்
மாணுக்க னுரைசெய்வோ னதுகூறல் கடனும்
மேற்படக்கற் றுணர்ந்துதெளிந் தெவர்க்கும் விளங்காத
விளங்கினுந்தான் றனைப்புலவன் புகழ்ந்திடத்த காதே. (சு)

சிறப்புப் பாயிரம் கூறுகின்றது

உரை:

நூலின் பெயர், நூலாசிரியன் பெயர், நூல்வழி, நூற் பயன், எல்லை, நூல் கூறும் பொருள், நூலைக் கேட்பதற்கு உரியவர், யாப்பு முதலிய எட்டும் காலம், களம், காரணம் என்ற மூன்றும் ஆக பதினொன்றும் பிறவும் வைத்தல் சிறப்புப் பாயிரம். தன்னுடைய ஆசிரியன், தன்னுடைய மகன், தன்னோடு படித்தவன், தன்னுடைய மாணுக்கன், உரை செய் வோன் ஆகியோர் சிறப்புப் பாயிரம் எழுதத் தகுதி உடை யோன். நன்றாகக் கற்றுணர்ந்து தெளிந்து எவர்க்கும் விளங் காத நுட்பங்களை விளக்கிச் சொன்னாலும் தான் தன்னைப் புகழக் கூடாது.

பாட விளக்கம்:

பி. பொ. பி. 8 ஆம் சூத்திரத்தோடு ஒப்புமை உடையது. பி. பொ. பிரதியில் உள்ள பாயிரத்தின் இன்றியமையாமை யும் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளும் இடமும் என்ற இரு செய்திகள் இங்கு காணப்படவில்லை ஆனால் இவை இரண்டும் அடுத்த சூத்திரத்தில் பேசப்படுகின்றன.

7 தரும்புலவோற் கரசவைக்க ணேலைத்தூக் கிடினுந்
தன்வலியோ ராரிடையுஞ் சூழ்சொலிவெல் லிடத்தும்
இகழ்ந்துபிறர் சொலுமிடத்துந் தனைப்புகழ்ந்தோ தலுமுன்
னிசைத்தவழ தொகுத்தலே விரித்தலுரைகை விரியே
புகன்றமொழி பெயர்ப்பெனநால் வகைத்தாமங் கையர்க்குப்
பொற்பூணின் றெனிலழகு குன்றுதல்போ லெவரும்

மகிழ்ந்து கற்பப் பல்லாற்றுற் பல்பொருளும் விரித்து
வகுக்கினும்பா யிரமில்லா நூற்சீர்குன் றிடுமே (எ)

நூலின் வகையும்பாயிரத்தின் சிறப்பும் உணர்த்துகின்றது.

உரை:

நல்ல தகுதி உடைய புலவர்க்கு அரசவையில் ஓலைச்சுவடிகளைத் தூக்கிச் சென்றாலும் தன்னுடைய திறமையை உணராதவர்கள் இடத்தும் தன்னுடைய சொல்லுக்கு மதிப்பு ஏற்படும் இடத்தும் பிறர் தன்னை இகழ்ந்து சொல்லும் இடத்தும் தன்னைப் புகழ்ந்து சொல்லலாம். தொகுத்தல், விரித்தல், தொகுத்துவிரித்தல், மொழிபெயர்த்தல் என வழி நூல் நான்கு வகைப்படும்.

பெண்களுக்கு அணிகலன் இல்லையென்றால் அழகு குறைதல் போன்று எல்லோரும் மகிழ்ந்து கற்கும்படி பல வகையாலும் பல பொருளை விரித்துச் சொல்லினும் 'பாயிரம் இல்லாவிட்டால் சீர்மை குறையும்.

பாட விளக்கம்:

இது பி. பொ. பிரதியில் 8 ஆம் சூத்திரத்தின் ஒரு பகுதியின் விரியாக இச்சூத்திரம் அமைந்துள்ளது.

8 குன்றமிகை படமாறு கொளப்பின்கூ றியது
கூறல்வெற் றெனத்தொடுத்தல், மற்றொன்று விரித்தல்,
மன்றவழூஉச் சொற்புணர்த்தல், சென்றுதேய்ந் திறுதல்,
மயங்கவைத்த, னின்றுபய னின்மைபத்தாங் குற்றம்
இன்றிசுருங் கச்சொலல்,வி ளங்கவைத்த ன,வின்றோர்க்
கினிமை, நன்மொ ழிப்புணர்த்த லு,தாரணத்த தாதல்,
ஒன்றுமலை யாமை முறை யின்வைப்பே, யாழம்
ஒலியுடைமை, விழுமியது பயத்தல்,பத்தாமழகே (அ)

குற்றமும் அழகும் உணர்த்துகின்றது.

உரை:

குன்றக்கூறல், மிகைபடக்கூறல், மாறுகொளக்கூறல், கூறியது கூறல் வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், வழூச்சொல்லேச் சேர்த்தல், சென்று தேய்ந்து இறுதல், மயங்கவைத்தல், நின்று பயன் இன்மை என்று குற்றம் பத்து வகை.

சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி யுணர்த்தல், உதாரணத்தை உடையதாதல், ஒன்று மலேயாமை, முறையின் வைப்பே, ஆழம் உடைமை, ஓசை உடைமை, விழுமியது பயத்தல் ஆகிய பத்தும் அழகின் வகையாம்.

பாட விளக்கம்:

இது பி.பொ. பிரதி 9 ஆம் சூத்திரத்தின் ஒரு பகுதியோடு கருத்து ஒற்றுமை உடையது.

9 அழிமறுத்த, னேர்தல்,பிறர் நூற்குற்றங் காட்ட,
லாமிறுவர் மாறுகோ ளொருதலேயே, துணிதல்,
கொழிதானட் டித்தனது நிறுத்தல்பிறர் மதமேற்
கொண்டகற்றல், பிறிதொடுப டான்றன் மதங்கொளலாய்,
எழுவகைநூன் மதங்களிங் கிவ்வகையா மெனவே,
யேற்புழிநன் கோர்ந்துநூற் பொருள் வழக்கோடுணர்த்தி
வழுவறக்கேட் போர்வியப்பத் தகும்வகையே செலுத்து
மதித்திறந்தந் (திரவுத்) தியது வெண்ணுன் காமே (கூ)

மறத்தின் விரியும் உத்தியின் பொது இலக்கணமும் கூறுகின்றது.

உரை:

மறுத்தல், ஒத்துக்கொள்ளுதல், நூலில் உள்ள குற்றம் காட்டுதல் இருவர் மாறுகோள் ஒருதலே துணிவு, தான் நாட்டி தனது நிறுத்தல், பிறர்மதம் மேற்கொண்டு அகற்றல், பிறர் கருத்தை ஒத்துக் கொள்ளாது தன்னுடைய கருத்தையே கூறு

தல், தன்மதம் கொள்ளல் என மதம் எழு வகைப்படும். ஏற்கும் இடம் அறிந்து உணர்த்தப்படும் பொருளை நூல் வழக்கு உலகு வழக்கோடு பொருந்த உணர்த்திக் குற்றம் இல்லாமல் கேட்போர் வியக்கும்படி தக்கமுறையில் செலுத்தும் உத்தி முப்பத்திரண்டு வகைப்படும்.

பாட விளக்கம்:

இது பி. பொ. பிரதி 9ஆம் சூத்திரத்தின் ஒரு பகுதியை ஒத்தது. உத்தியின் பொது இலக்கணம் பி. பொ. பிரதியில் காணப்படவில்லை.

10 மேலைநுத லிப்புகுதல், தொகுத்தல்,வகுத் துரைத்தல்
விகற்பத்தின் முடித்திடலுய்த் துணர்தன்,மாட் டெறிதல்,
நூலிடைத்தன் றுணிவுபிறர் மதஞ்சொலல்,தா னெடுத்து
நுவறன்முடித் துக்காட்டல், முடிவிடங்கூ றுதலே,
சாலெடுத்துக் காட்,டெடுக்கு மொழியினெய்த வைத்தல்,
தான்மிக்கெ டுத்துரைத்த, லெஞ்சு சொல்லின் விரித்தல்,
ஏலுமுரை யிற்கோட, லுரைத்துமென்ற லுரைத்தாம்
எனமொழிந்த, துடன்மொழியா ததனைமுடித்திடவே. (௧௦)

உத்தியின் விரி கூறுகின்றது

உரை:

1) நுதலிப்புகுதல், 2) தொகுத்துக் கூறுதல், 3) வகுத்துக்கூறுதல், 4) விகற்பத்தின் முடித்திடல், 5) உய்த்து உணர்தல், 6) மாட்டெறிதல், 7) தன் துணிவு உரைத்தல், 8) பிறர் மதம் சொல்லுதல், 9) தானெடுத்து மொழிதல், 10) முடித்துக் காட்டல், 11) முடிவு இடம் கூறல், 12) எடுத்துக்காட்டல், 13) எடுத்த மொழியின் எய்தவைத்தல், 14) தன் குறிவழக்கம் மிக எடுத்து உரைத்தல், 15) எஞ்சிய சொல்லின் விரித்தல், 16) உரையிற் கோடல், 17) உரைத்தும் என்றல் 18) உரைத்து விட்டோம் என்று கூறல் 19) உடன் மொழியாததனை முடித்துக் கூறல்.

பாட விளக்கம்:

இதுவும் அடுத்த சூத்திரமும் பி. பொ பிரதி 10, 11 ஆம் சூத்திரங்களை ஒட்டியன. பாட ஒற்றுமை மிகக் குறைவு

11 முடிந்ததனை முடித்தலிரட் டுறமொழித லேமுன்
மொழிந்துகொளல் பின்னிறுத்த லின்னதன்றீ தென்றல்
உடன்படலே யேதுகாட் டுத்தொடர்ச்சொற் புணர்த்தல்
ஒற்றெனத்தன் னினமுடித்த லொப்பின்முடித் திடலே
மிடைந்தசொல்லின் முடிவினிலப் பொருள் சொலல், சொற்பொருளே
விரித்தலிற் பகற்றலெதிர் போற்றலுமவ் வகையாம்
அடர்ந்தசிகுற் றமுதனன்கும் பல்சிறந்த வினவயாம்
அறம் பொருளின் பமும்வீட்டின் பணைதலுநூற்பயனே (கக)

உத்தியின் விரியும் நூற்பயனும் கூறுகின்றது.

20) முடிந்ததனை முடித்தல், 21) இரட்டுற மொழிதல், 22) முன்மொழிந்து கொளல், 23) பின்னால் நிறுத்தல், 24) இன்னது அல்லது இதுவெனக் கூறல், 25) உடன்படுதல், 26) ஏதுகாட்டுதல், 27) தொடர் சொற் புணர்த்தல், 28) தன்னினம் முடித்தல், 29) ஒப்பின் முடித்தல், 30) சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல், 31) சொற் பொருள் உணர்த்தல் 32) எதிரது போற்றல் என்பன அவற்றின் விரியாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் நூலின் பயனாகும்.

பாட விளக்கம்:

பயன் பற்றிய விளக்கம் பி. பொ. பிரதியில் 9 ஆம் சூத்திரத்தில் காணப்படுகின்றது.

12 அணைந்தபல்வ கைப்பொருள்சில் லெழுந்தினிற்பே ருருச்சிற்
றுடியினிற் கண்டாங்குச் செறித்தினிது விளக்கிக்
குணஞ்செய்பொருட் டிட்பநுட்பஞ் சிறந்தனசூத்திரமாங்
குறிசெய்கை யிரண்டாய்ப்பிண் டந்தொகுத்தல் வகுத்தல்
இணங்குவிரி புறனடையைந் தினுஞ்சொலல்சூத் திரமாம்
இந்நிலையா றெழுக்கரிநோக் கந்தவளைப் பாய்த்து
யணிந்ததொரு பருந்தீன்வீழ் வன்னவா மோத்துப்
படலமெனச் சூத்திரத்தின் றிரட்டிரண்டென் றுரே (கஉ)

சூத்திரம், திரட்டு ஆகியவை விளங்குகின்றது.

பலவகைப்பட்ட பொருளைச் சில எழுத்துக்களால் பெரிய உருவம் சிறிய கண்ணாடியில் காண்பது போல செறிவாக இனிது விளக்கி பண்பு உடைய பொருளின் திட்ப நுட்பம் சிறந்து விளங்குமாறு செய்வது சூத்திரம்.

குறி, செய்கை என இரண்டாய்ப் பிண்டம், தொகை, வகை, விரி, புறனடை என ஐந்து வகைப் பிரிவினை உடையது சூத்திரம்.

ஆற்றொழுக்கு, அரிமா நோக்கு, தவளைப் பாய்த்து (பாய்ச்சல்), பருந்தின் வீழ்ச்சி முதலியன போன்று ஓத்து, படலம் என சூத்திரத்தின் திரட்டு இரு வகைப்படும்.

பாட விளக்கம்:

பி. பொ. பி. 12ஆம் சூத்திரத்தில் சூத்திரத்தின் பொது இலக்கணம் மட்டுமே விளக்கப்பட்டுள்ளது.

இக்கருத்து நன்னூல் 18, 20 ஆகிய இரண்டு சூத்திரங்களைத் தழுவியது. ஆயினும் நன்னூலார் பிண்டம். தொகை, வகை, குறி, செய்கை, புறனடை என்ற ஆறு பிரிவு உடையது என்று பொதுவாகக் கூறிச் சென்றுள்ளார். நன்னூல் உரையாசிரியர்கள் ஆறுவகைப்படச் சொல்லினும்

குறிச்சூத்திரமும் செய்கைச் சூத்திரமும் என்றும் இரண்டின் உள்ளே மற்றை நான்கும் அடங்கும் என்ற விளக்கத்தைத் தழுவியே சாமி கவிராயர் இருவகையாகப் பிரித்து விரி என்ற ஒன்றைப் புதிதாகச்சேர்த்துக் கூறியுள்ளார்,

13. ஓரினமாம் பொருளையின மணிநிரல்வைத் தாங்கே
யொருவழிவைத் திடல் ஓத்தாம்; ஒரு நெறியே யன்றிச்
சேர்பொருள்வி ராய்ப்பொதுச்சொற் றொடரினது படலஞ்,
சேப்புமதி கார,மோத் தின்றொகுதி காண்டம்
சோர்வில்பட லத்தொகுதி பாடமதி காரம்
தொகைகருத்துச் சொற்பொருள்சொல் வகை, விரிவி
சேடங்
கூர்வினவி டைதுணிவு பயனுதாரணமே
குருமொழியீ ரேழுறுப்புங் கொளலுரையாங் காணே (கங)

படலம், காண்டம், அதிகாரம், உரை முதலியன விளக்குகின்றது.

ஓரினத்தைச் சேர்ந்த பொருளை, ஒரு இனத்தைச் சேர்ந்த மணிகளை முறையே பதித்தாற்போல ஒரு வழிபட வைப்பது ஓத்து ஆகும்.

ஒருமுறையன்றி பல பொருளையும் கலந்து பொதுச் சொற்கள் தொடர்ந்து வரின் படலம் எனப்படும்.

ஓத்தின் தொகுதி அதிகாரம் எனப்படும். அதிகாரத்தின் தொகுதி காண்டம்.

பாடம், அதிகாரம், தொகை, கருத்து, சொற்பொருள், சொல்வகை, விரி, விசேடம், வினு, விடை, துணிவு, பயன், உதாரணம், குரு மொழி (ஆசிரிய வசனம்) என்ற பதினான்கு உறுப்பும் கொள்வது உரையாகும்.

பாட விளக்கம்:

பி. பொ. பிரதி 12 ஆம் சூத்திரத்தில் படலம், உரை என்ற இரண்டும் விளக்கப்பட்டுள்ளன. உரையிலும் காண்டி", விருத்தி என்ற இருவகையே அங்கு பேசப்பட்டுள்ளது. ஆனல் அக்கருத்து இப்பிரதியில் அடுத்த சூத்திரத்தில் பேசப்படு கின்றது.

14. காண்டிகையே, விருத்தியென்றவ் வுரையிரண்டாம் அவற்றுட்
காண்டிகைசொற் பொருள் கருத்து தாரணத்து மவற்றுள்
தூண்டும்வின விடைகொடுஞ்சூத்திரப்பொருட் டோற் றுவவாஞ்
சூத்திரத்துட் பொருளலது மங்ஙனில தமையா
வேண்டுபொருள் யாவையுந்தன் னுரையானுங் குருநூல்
விதியானும் ஐயமற வப்பதித்த வுரையும்
ஈண்டியிட விளக்குவது விருத்தி, நூல்வரலா
றித்துணையு முன்னுணர்ந்தோ ரினிதுணர்வார் தமிழே
(கச)

உரைவகையின் விளக்கம் தருகின்றது.

உரை:-

காண்டிகை, விருத்தி என இருவகைப்படும் உரை. அவற்றுள் காண்டிகை சொற்பொருள், கருத்து, உதாரணம் ஆகியவற்றையும் வின, விடை, சூத்திரப் பொருள் தோன்றும் படி செய்வது ஆகியவற்றையும் கொண்டது.

சூத்திரப் பொருளை விளக்குவதோடு அவ்விடங்களுக்கு இன்றியமையாத பொருள்கள் யாவையும் தன்னுடைய உரை யாலும் ஆசிரிய வசனத்தாலும் ஐயம் நீங்க உரைத்த உரை யும் இடம் விளக்குவதும் விருத்தி ஆகும்.

நூல் வரலாறு நன்ருக முன்னே உணர்ந்தவர்கள் தமிழை இனிது உணர்வார்கள்.

முதலாவது எழுத்ததிகாரம்

க - வது எழுத்தாக்க மரபு

15. தமிழ்தருதென் பொதிகைமலை கயிலைமலை கமலஞ்
சங்கமிவற் றிறைவருக்குப் பொருளைமலர் வாயால்
உமிழ்குருவாய் ஆறெழுத்தோர் எழுத்தாய்ச்செந் தூர்வாழ்
ஒருகுமரன் இருசரணென் னுளத்துறைந்த வளத்தாற்
சிமிழனைய களபமுலைப் பசுமயிலே முதியோர்
செப்பெழுத்துச் சொற்பொருள்யாப் பலங்கார மெனுமைந்
தமிழ்தினிலக் கணவிரிவோ ரொன்றொருமூன் றியலாய்
அடக்கியிச் சுவாமிநா தத்தின்மொழி குவனே (க)

சிறப்புப் பாயிரம் கூறுகின்றது.

உரை: *கே. ப. பிரதியில் காண்க*

பாட விளக்கம்:

கே. ப. பிரதியின் பாடம்

3வதுவரி: (களபமுலை) பூ மயிலே
பி. பொ. பிரதியின் பாடங்கள்

2வதுவரி: (பொருளை) அருள் (வாயால்)

3வதுவரி: (ஆறு எழுத்து ஓர் எழுத்து) ஆகும்
செந்தூர் ஒரு குமரன்

4வதுவரி: (இலக்கண) *விரிவை* ஒவ்வொரு (மூன்று *இயலாய் அடக்கி*) மொழிகுவன்,
சுவாமிநாதம் இந்நூற் பெயரே.

16. மொழிக்குக்கா ரணமாகிப் பரையருளான் மூல
முகிழ்நாத காரியமாம் விந்தொலி;யோர்ந் தெழுதின்
எழுத்து(அ)துதான் பெயரெண்முறை பிறப்புருமாத் திரைமுன்
னீறிடைப்போ லியும்பதமும் புணர்வுமென்று றிரண்டாம்
சுழித்தமுதல் சார்புயிர்மெய் குறினெடில்சந் திவினுச்
சுட்டுவன்மை மென்மையிடை யறுகுறுக்க முயிர்மெய்

அழுத்தாய்த மீரளபு போலிவிட மமுதம்
ஆண்பெணலி யிவையவற்றுட் பெயரெனவெண் ணுகவே
(൳)

எழுத்து இலக்கணமும் எழுத்ததிகார வகையும் பெயரும் கூறுகின்றது.

பாட விளக்கம்:-

இது பி. பொ. பி. 14 ஆம் சூத்திரத்தோடு கருத்து ஒப்புமை உடையது. எழுத்து என்பதற்குரிய பொது விளக்கம் முன்னரும் எழுத்ததிகாரப் பகுதிகளை அடுத்தும் பெயரின் விரியும் இச்சூத்திரம் கூற, பி. பொ. பி. முதலில் எழுத்ததிகாரப் பகுதியும் அடுத்து 'எழுத்து' விளக்கமும் பின்னர்ப் பெயரின் விரியும் கூறுகின்றது.

17. எண்முதல்சார் பிரண்டவற்றுண் முதலுயிரொற் றிரண்டா
றிரண்டுயிர்மூ வாறுடலவ் விரிமுப்பா னய்தம்
ஒண்ணுகுறள் உ இ ஐ ஔ மவ்வாய்த முயிர்மெய்
யுயிரளபொற் றளபெனச்சார் பின்வகைபத் தவற்றுள்
அண்ணுயிர்மெய் யிருநூற்றுப் பதினாறே முயிரின்
அளபு பன்னொன் றொற்றளபே னையவோரொன்றாக
விண்முறையா லிருநூற்றுநாற்ப தொன்றவ் விரியாம்
விரியிரண்டுந் தொகுத்திருநூற் றெழுப தொன்றவ்
வகல்வே (௲)

உரை:

கே. ப. பிரதியில் உள்ளது.

பாட விளக்கம்:

பி. பொ. சுவடி 3 ஆம் சூத்திரத்தோடு ஒத்தது. ஆயினும் அங்கு முறை, எண் என்ற இரண்டும் விளக்கப் பட்டிருக்க அவை இங்குக் காணப்படவில்லை. இதில் எண் மட்டுமே விரித்துரைக்கப்பட்டுள்ளது.

18. அகராதி யுயிருற வியுவெவ்வொக் குறிலெந்
தாவீயூ வேயையோ வௌநெடிலே ழவியுத்
தருசுட்டா வோவீற்றெய் யாமுதலே யிருபாற்
சாரவினைக் கம்முதன்மூ வாறுமுட லவற்றுள்
இகல் கசட தபறவலி மெலி ஙஞண நமன
இடை யரல வழள... ....
வகரமவிக் கூட்டமவ் வியக்கூட்டை கான்மற்
றவுவக்கூட் டமமௌவிவ் வாறுசந்தி முறையே (ச)

முறையை விளக்குகிறது.

உரை:

கே. ப. பிரதியில் உள்ளது.

பாட விளக்கம்:

கே. ப. பி. பாடம்

2 வது வரி தகுசுட்டு (ஆ, 3)
,, சார்வினை(க் கம்முதன்)

புள்ளியிட்ட இடத்தையும் ஏனைய பகுதியையும் கே. ப பிரதியை ஒட்டித் திருத்திக்கொள்ள வேண்டும்.

19 முறைசிறப்பா னினத்தானம் முதனடத்தல் பிறப்பு
முயற்சிபொரு ளளவுருவு மேற்பனவொப் பின்மாம்;
திறையுயிராற் சூக்குமையா மூலவிந்தாற் பிறந்து
நேர்ந்துதா னனைக்கலந்து சிதறிமயிர் கருநீர்
உறவெழுத் தொடுக்குபைசந் தியதாய்நெஞ் சுயிர்சேர்ந்
துரித்தெரித்துள் ளுணர்(வு)வொலி மத்திமையாய்க் கண்டம்
செறியுமுச்சி நாசியுற்று நாவணம்பல் லிதழின்
செயலால்வை கரியாய்வெவ் வேறெழுத்தா யிடுமே. (ரு)

எழுத்துக்களின் இனமும் பிறப்பும் விளக்குகின்றது.

பாட விளக்கம்:-

கே. ப பிரதிபாடங்கள்

2வதுவரி: ... மூலவிந்தாற் புந்தி (சேர்ந்து)

பி. பொ. பி. 15ஆம் சூத்திரத்தின் இறுதியில் இனமும் 16ஆம் சூத்திரத்தில் பொதுப்பிறவியும் உயிரெழுத்துக்களின் பிறவியும் விளக்கப்பட்டுள்ளன.

உரை: கே. ப. பிரதியில் உள்ளது.

20 இடையுயிர்கண் மிடற்றினுச்சி வலிமெலிமூக் கவற்றுள்
இயல்வின்அஆ வங்காப்பவ் வங்காப்போ டண்பல்
அடிநாவின் விளிம்புறஇ ஈஎஏ ஐயாம்
அவற்றெடிதழ் குவிவின் உ ஊ ஒ ஓ ஔ உதிக்குந்
தொடரடிநா வடியண்ணமுறக்க ங வா மிடைநாத்
துன்னுமிடை யண்ணமுறச் ச ஞ வாகு முடிநா
முடியண்ண முறடணவா மண்பலடி யதிஞ
முடியுறவாந் தநமீகீ ழிதழுறவாம் பமவே (சு)

எழுத்துக்களுக்குரிய இடமும் உயிரெழுத்துக்களுக்கும் இடையினம் ஒழிந்த ஏனைய மெய்யெழுத்துக்களுக்கும் பிறப்பும் கூறுகின்றது.

பாட விளக்கம்:

இச்சூத்திரக் கருத்து பி. பொ. பிரதியில் 16ஆம் சூத்திரத்தில் ஒரு பகுதியிலும் 17ஆம் சூத்திரத்தில் ஒரு பகுதியிலும் சொல்லப்படுகிறது.

21 பம்புமண்ணக் குழிசேர்ந்த மிடற்றுக்கா லடிநாப்
பற்றயவ்வா மண்ணநுனி நாவருட ரழவாம்
நம்புமண்பன் முதலேநா விளிம்பொற்ற லவ்வா
நாவின்விளிம் பண்ணத்தை வருடளவ்வா மேற்பல்
வம்பிலிதழ் குற்றவவ்வா நுனிநாவண் ணத்தின்
வலிதொற்ற றனவாமோ ரிடத்தினிற்பல் லெழுத்துத்
தம்பிறப்போ தினுமெடுத்தல் படுத்தனலி வுழப்பிற்
றத்தமில்சில் பேதமுள காண்மதியா லுனியே (எ)

இடையினத்தின் பிறப்பும் பிறப்பின் திரிபும் கூறுகின்றது.

பாட விளக்கம்:

கே ப. பி. பாடம்

முதல்வரி: (அடிநாப்பற்ற) யவ்வாய்

உரை: கே. ப. பிரதியில் உள்ளது.

22 உனித்தெரிநெஞ் சொலியானங் காந்தியன்று குறிற்கீழ்
உயி(ர்ச்சார்) வலிமேலொற்றியல்போல் வருமாய்தப் புள்ளி
கனிக்குறினீங் குயிர்கணமூன் ருய்தமென்றைந் தொடர்க்கீழ்ச்
சார்வலியூ ருக்குறுகு மயமுன்குற ளுத்திரி
யிணைபுணைத்த மியாவினிக ரங்குறுகு முதலில்
இடைபின்பொருளை குன்றுமுத லற்றுமௌ வுளவத்திரிந்த
ணனப்பின்வம்மேன்[1] மக்குறுகுந் தனிக்குறில்சார் வளப்பி
னனுத்தகரத் திரிவின்முன்னுய் தங்குறுக்கா யிடுமே (அ)

ஆய்தம், குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகார ஔகார மகர ஆய்தக் குறுக்கங்கள் ஆகியவற்றை விளக்குகின்றது.

பாட விளக்கம்:

தனிக்குறில் (2வதுவரி) என்ற கே. ப. பி. பாடம் சிறந்தது

கே. ப. பிரதியின் பாடங்கள்:

1வதுவரி: (குறிற்கீழ்) உயிர் வலிமேல்

2வதுவரி: (குறள் உத்திரி) விற்

3 வது வரி: புணைத்த மியாவினிற் .. ..

(அற்றும் ஔவும்) லளத்திரிந்த

4 வது வரி: (குறில் சார்) லளப் பின்னும்

இப்பாடங்களே பொருள் சிறக்க உதவுகின்றன

[1]வம்முன் என்று இருக்க வேண்டும்.

23. ஆயுமொற்றெல் லாமுமப்பான் முன்னுருவா யுயிர்வே
ருகிற்கான் மேற்கீழாம் விலங்குகொ டிரட்டாய்
காயம்வெவ்வே ருகியுயி ரளவாயவ் வடிவைக்
கரந்துயிர்பின் ஞய்த்தாமுந் துயிர்த்தலுயிர் மெய்யாம்
ஏயஇசை கெடின்மொழிக்கு முன்பினிடை குறிதம்
மினக்குறிலாய் நெடினீளும் ஐ ஔ இ உக் குறிலாய்க்
கூயளவா மாய்தம்விய லளஙஞண நமனக்
குறிற்கீழா யிடைகடையிக் காங்குறியொற் றதற்கே (௯)

உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை ஆகியவற்றை விளக்குகின்றது.

பாட விளக்கம்:

பி. பொ. பிரதி 19 ஆம் சூத்திரத்தோடு பெரிதும் ஒப்புமை உடையது.

கே. ப. பிரதியின் பாடங்கள்:

3 வது வரி: (ஐ, ஔ, இ, உக் குறி) யாய்

4 வது வரி: (ஆய்தம்) வயலள......

,, (இடை, கடை)மிக்காங்

இப்பாடங்களே பொருள் சிறக்கப் பயன்படுகின்றன.

2 வது வரி பி. பொ. பிரதி தனித்தனி வாக்கியங்களால் இருக்கின்றது. 'காயம் வெவ்வேரும்; உயிர் அளவு அளவாம்; உயிர்பின் காட்டும்; உடல்முன் காட்டும்; இவை உயிர் மெய்யாம். இவ்வாறே இறுதி வரியிலும் சிறு வேறுபாடு உள்ளது.

24. ஒற்றுயிரா திகள்பாதத் தாறுறுப்பின் முக்கூட்
டேழ்மைத்த வடிவெகர வொகரமெய்ப்புள் ளியுமாம்
அற்றநெடி லிரண்டு;குறு கையெனமுத லீரொன்
றரை;யிடையொன் ருங்,குறிலொன் ருய்தமெய்குற் றுகரங்
குற்றிகர மரைமவ்வாய் தக்குறுக்க முங்கால்;

குறித்துணரிற் கண்ணிமைத்த னொடித்தன்மாத் திரைதான்;
மற்றளபுக் கொலிக்கெடுநி றைப்பளபாம் பண்ட
மாற்றுவிளி யிசைகுறிப்பு மிகலுமெழுத் துறுமே. (௧௦)

எழுத்துக்களின் வரிவடிவமும் மாத்திரையும் விளக்குகின்றது.

பாட விளக்கம்.

இது பி. பொ. பிரதி 20 ஆம் சூத்திரத்தோடு பெரிதும் ஒற்றுமை உடையது.

கே. ப. பிரதியின் பாடம்:

4 வது வரி; (மற்ற)ளவுக்கு

25. உறுமுயிர்க சதநபம வரியும்உஊ ஒஓ
ஒழிந்தவொடு வவ்வுமீ உஊஓ ஐஔ
வறுமுயிரி னொடுஞவ்வுமல் லவைஇஈ எர
யலவின்யவ் வுமாநூற்று நான்குமொழி முதற்காம்
பெறுயமுனி... ... ...
பின்னிலேயே யுயர் ஞணந மனயரல வழளக்
குறுகுமுவ்வோ டறுநான்கா மொந்நவ்வொடாங் கவவிற்
கூடியெளவா மெய்யோடே லாதெகர வுயிரே (௧௧)

மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்களை விளக்குகின்றது.

பாட விளக்கம்-

இது பி. பொ. பிரதி 21 ஆம் சூத்திரத்தோடு தொடர்புடையது. அங்கு மெய்ம்மயக்கமும் இதே சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது, இரண்டிற்கும் சொல் ஒற்றுமை மிகமிகக் குறைவு.

கே ப. பிரதியில் "ஒந்நவோ டாம்" (4 வது வரி) என்ற பாடம் உள்ளது.

26. உயிர்மயக்கு மெய்மயக்கொற் றுயிர்மயக்கொன் ஞெருமூன்
றொருமொழியிற் றொடர்மொழியி னிடைமயங்கு
முயிர்முன்
வியனுயிர்விட் டிசைத்தொடர்ச் சொலினுமெய் மயக்கம்
வேற்றுநிலை யுடனிலையென் றிருவகைத்தா மவற்றுண்
மயலிலுட னிலைதமிற்றும் ரழவலவீ ரெட்டு
மயங்குநஙத் தனிச்சொல்லுரு கசதபநீத் தீரேழ்
இயல்பின்மெய் யொடுமயங்கல் வேற்றுநிலை மயக்காம்
ஈண்டினியொற் றுயிர்மயக்க மவற்றொடவை மயக்கே
(௨௬)

எழுத்துக்களின் மயக்கம் கூறுகின்றது.

பாட விளக்கம்:

கே. ப. பிரதியின் பாடங்கள்:

முதல்வரி: (உயிர் மயக்கு) ஒற்று(ஒரு மூன்று)

3வது வரி: (மயக்கம்) வேற்றுமை(நிலை)...

4வது வரி: இயல்பிற (மெய்யொடு)

உரை கே. ப. பிரதியில் உள்ளது.

இச்சூத்திரக் கருத்து, பி பொ. பிரதியில் 21 ஆம் சூத்திரத்தின் பிற்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

27. மயங்குமேன்முன் னர்வவ்வின் மடறமுன் கசப
வரும்னணமுன் கபமவரும் லளமுன்வரும் பகவ
தயங்குயர ழமுன்கப்ம வதநவரும் லம்முன்
சவுவம்முன் வவுமயங்கு மிருசொலினும் யரழ
வயின்சஞவு னணமுன்வச ஞவும்ளம்முன் சவ்வும்
வலிஙயவில் பத்தின்முன்னர் யவுந்தொடர்ச்சொ
லிடையா
முயர்ந்தயர ழமுன்கபம தநசஞங வீரொற்
றுறும்ரழவும் யவின்ஙவ்வுந் தனிக்குறிலு ருவே. (௨௭)

மெய்மயக்கங்களை விளக்குகின்றது.

பாட விளக்கம்:

இது பி. பொ. பிரதியின் 22 ஆம் சூத்திரத்தின் முதல் பகுதியோடு (மூன்று வரி) தொடர்புடையது.

கே. ப. பிரதியின் பாடங்கள்:

3வது வரி (ளம்முன்) சவும்.

28. தனையுணர்த்தி னெழுத்துமுன்பின் னிடைவிதிநீத் தலுமாந்
தன்மையொன் ஞேற்றுமையா யப்பொருட்டாம் போலி
இனமதிரண் டிரண்டாயொற் றுமையாநீத் தம்முன்
இயவுறினை யுவவுறினௌ மோவவுவே யயி
மனசதப சதவயவே வமலளவே ஞநவா
மற்றிடைமுன் சஞயமுன்ஞம் வையியையு மகரம்
பனுகரங்கான் காரணச்சா ரியையெழுத்திற் கொன்று
பலவினொன்று பலவியையு மிலதுமா மெழுத்தே (கச)

போலியும் எழுத்துச் சாரியையும் விளக்குகின்றது.

பாட விளக்கம்:

இது பி. பொ. பிரதியின் 22 ஆம் சூத்திரத்தின் பிற் பகுதியோடு தொடர்பு உடையது.

கே. ப. பிரதியின் பாடம்:

3 வது வரி; (சஞய முன்ஞ மவை (யியையும்) இப் பாடமே பொருத்தமாக அமைந்துள்ளது. தமிழ்ப்பொழிலிலும் மகரம்புள்ளியோடேயே காணப்படுகிறது.

உ-வது பதமரபு

29. எழுத்தொன்றுந் தொடர்ந்துமயற் பொருடரினே பதமாம்;
இதுபகாப் பதங்கள்பகு பதங்களென விரண்டாம்;
மொழிப் பகுப்பாற் பயனில் பெயர் வினையொடிடை யுரியா(ம்)
முற்பகாப் பதம்;பகாப் பதந், தொடர்ச்சொ லலவாய்

விழைத்தபெயர் முற்றெச்சம் பிறவுமாய்ப் பகுதி
விகுதியிடை நிலையேசா ரியைசந்தி விகாரம்
பழுத்தகரு விகளினேற் பனகொண்டு முடியும்
பகுபதமுன் மூன்றினைப்பன் மூன்றிசைக்கப் புலுமே (க)

பதத்தின் இலக்கணமும் வகையும் உறுப்பும் கூறுகின்றது.

பதத்தின் விளக்கம் சற்று மாறுபாடு உடையது. 'எழுத்து ஒன்றுபல பொருளைத் தரித்தற் பதமாம்' என்ற பி. பொ. பிரதி விளக்கத்திற்கு இவ்விளக்கம் சிறப்பாக அமைந்துள்ளது. எழுத்து தன்னை உணர்த்துவதும் வேறு பொருளை உணர்த்துவதும் உண்டு.

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும் சொல்லின் ஆகும்' என்பது தொல்காப்பியம் (பெயரியல் 2.)

தன்னை உணர்த்தின் எழுத்தாம், பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாம் சொல் என்ற அவிநயப் புறனடையிலும் குறிப் பிடப்பட்டுள்ளது. எனவே இங்கு 'அயற் பொருள் தரின்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பகாப்பதம் தொடர்ச்சொல் அல்லாதது என்பது விளக்க மாக உள்ளது.

பாட விளக்கம்:

இது பி. பொ. பாட பதமரபு முதற் சூத்திரத்தோடு ஒற்றுமை உடையது.

30. புல்லுநட வாமடிசீ விடுகூவே வைநொ
போவெளவஃ கொடுரிஞண் பொருந்திருந்தின் றேய்பார்
செல்லேவவாழ் கேளெனும்பாட் டிருபான்மூன் றீற்றிற்
சேர்க்குமுத னிலையீண்டும் தெரிநிலையின் வினைக்கோ
சொல்பகுதி யவற்றின்விப்பி வேறுறுத லிணைதல்
சொற்றிரிதல் சிலவேவல் வினைப்பகுதி பொருளே
வெல்லிடங்கா லஞ்சினையே குணந்தொழிலென் றூழும்
வேறுபல வும்பெயரின் பகுதியெனக் கொளலே (உ)

பகுதியின் விரி கூறுகின்றது.

சிலபாடவேறுபாடுகளைத் தவிரப் பெரும்பான்மையான பகுதிகள் பி. பொ. பிரதியோடு ஒத்துள்ளன.

பி. பொ. பாடங்கள் 2வதுவரி: சேர்த்த (முதனிலை)

3வதுவரி: 'சொல் பகுதி' என்ற முதல் இரண்டு சொற்களே பொதுவான பகுதி.

4வதுவரி: நல் (விடம்)

31. கொளும்அன்ஞ னள்ளாளா ரர்பம்மார் அ ஆக்
குடுதுறுவெ னேனல்லோ டம்மாமெம் மேமோங்
களவிலும்மூர் கடதறவை யிய்யாமி னர்ரீர்
கயரவொற்ரு லேல்காணும் பிறவும்வினை விகுதி
விழுமிவற்றிற் சிலபலசொல் லெழுத்தீற்ருய்ப் பெயரின்
விகுதிதவ்வொற் றின்னிறப்புங் கிறுகின்ரு நின்று
தளர்நிகழ்வும் பவவெதிர்வு மைம்பான்மூ விடத்துந்
தரும்வினையி னிடைநிலவே றுளகிலிடை நிலயே (ங)

விகுதியின் விரியும் இடைநிலையும் கூறுகின்றது இது.

பாட விளக்கம்:

பி. பொ. பிரதியில் காணப்படும் பாட வேறுபாடுகள்.

1வதுவரி: கொண்ட (அன், ஆன்,) ... ...

2வதுவரி: கண்ட(றும் ஊர்) ... ...

3வதுவரி பண்டு (இவற்றிற் சில) ...

எழுத்து ஈற்றன, சொல் ஈற்றன-

பெயர்க்காம், கடதற ... ...

(கிறு) கிற்று

4வதுவரி: எண்டரு கின்று ஆநின்று நிகழ் பவ்வ
எதிர்வும் இடைநிலை பால் இடத்தேற்கும்
வினை ஏலா சிலவே.

ஏனைய ஒத்த பகுதிகள்

கரந்தைத் தமிழ்ச் சங்கப் பிரதி பாடம், இலக்கண ஆராய்ச்சியில் கோட்பாட்டுப் புதுமை புகுத்திய பெருமைக் குரியதாக அமைந்துள்ளது. பிற்கால இலக்கண நூல்கள் இடைநிலைகளாக த், ட், ற் இன் என்பன வரும் என்று குறிப்பிட இங்கு த், இன் என்ற இரண்டு நிலைகளே குறிப் பிடப்பட்டுள்ளன. எனவே ட், ற் என்ற இரண்டையும் தகரத் தின் மாற்றுருபாக அதாவது புணர்ச்சி மூலம் பெறக்கூடிய மாற்றுருபாகக் கருதியிருக்க வேண்டும். எனவேதான் சொல் கட்டுபாடு உடைய மாற்றுருபின் மாற்று வடிவங்களை அடுத்த சூத்திரத்தில் விளககுகிறார்.

விளக்கம்:

முன்னுள்ள இலக்கண நூல்கள் மாற்றுருபு (Allomorph) களில் ஒலிக்கப்பட்டு, பாட்டுடைய மாற்று உருபிற்கும் சொல் கட்டுப்பாடு உடைய மாற்று உருபிற்கும் வேறுபாடு செய்ய வில்லை. மொழி இயலில் சொல் கட்டுப்பாடு மாற்று உருபு களை மட்டுமே விதந்து எடுத்துச் சொல்லவும்; அவற்றிற் குரிய ஒலி கட்டுப்பாடுடைய மாற்று வடிவத்தைப் புணரிய லில் கூறுவர். அதே போன்று சாமி கவிராயரும் இறந்தகால உருபுகளாக 'இன்' 'த' என்ற இரண்டை மட்டும் எடுத்துக் கொண்டு அவற்றின் மாற்று உருபாக வேறு சிலவற்றைக் கருதியுள்ளார். அம்முறையில் சூத்திரம் மொழியாராய்ச்சியில், கோட்பாட்டு நிலையில் ஏற்பட்ட போற்றத் தக்க மாற்றமாக அமைந்தது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

32. இடைநிலையின் றிரிந்தியயாய் தத்திரிந்து டறவா
யிறப்புதவும் பகுதிவிகு திகள் சிலபோழ் துதவும்
சுடறவுவ்வீ ருய்க்குறிற்கீழ் வரும்பகுதி விகுதி
கலந்துகர மறினிறப்பைத் தருந்துறுமற் றவற்று
மடர்பவ்வீ றிறப்பெதிர்வும் டவ்வுகர மதனு
மந்தமிறப் பையுங்குகுயீ றேவன்மறை மின்மார்
கடைவியங்கோ ளெதிர்வுமிய்யுஞ் செய்யுநிகழ்வெதிர்வாங்
காலமும் வெஞ் சிறுதிபல வியைபொழுதுந் தருமே. (ச)

கால இடை நிலையும் விகுதியும் கூறுகின்றது.

உரை:

இறந்தகால இடைநிலையான 'இன்' திரிந்து 'இ' ஆகவும் தகரம் திரிந்து டகரமாகவும் றகரமாகவும் மாறும்.

பகுதியும் விகுதியும் சில சமயம் இறந்த காலம் காட்டப் பயன்படும்.

கு, டு. று. என்ற ஈறுகள் குற்றெழுத்தை அடுத்து வரும் பகுதி விகுதிகள் கலந்து வந்தால் இறந்தகாலத்தைக் காட்டும். (வீறு) என்ற ஈறுகள் இறந்தகாலத்தையும் எதிர் காலத்தையும் டு, டும் என்பன இறந்தகாலத்தையும், கு, கும் என்ற ஈறுகள் ஏவலையும் எதிர்மறையையும் மின், மார் என்ற ஈறுகள் முறையே வியங்கோளையும் எதிர்காலத்தையும் காட்டும்.

செய்யும் என்ற வாய்பாடு எதிர்காலத்தையும் நிகழ் காலத்தையும் உணர்த்தும்.

'வெஞ்சிறுதிபல இயை பொழுதுந் தருமே' என்பது விளங்கவில்லை.

பாட விளக்கம்;

பி. பொ பிரதியில் இதற்கு இணையான சூத்திரம் காணப்படவில்லை

விளக்கம்:

ஓடினன் என்பதில் ஓடி செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சமாக வரும்பொழுது 'இன்' விகுதி இகரமாக மாறும். பெயரெச்சத்திற்கு முன்னும் (ஓடிய) இகர விகுதி பெரும்பான்மையாகச் சங்க காலத்தில் வழங்கி வந்தது.

செய்தான், உண்டான், தின்ருன், உண்டான் என்பதை உண் + த் + ஆன் என்று கொண்டு வினைப்பகுதியின் ஈற்றி லுள்ள ணகரம், ஞமடியாக இருப்பதால், தகரம் டகர மாக மாறிவிட்டது. இவ்வாறே தின்ருன் என்பதையும் தின் + த் + ஆன் என்று கொண்டு விளக்க வேண்டும்.

பகுதி காலம் காட்டும் என்பதற்கு நன்னூல் உரையா சிரியர்கள் தொட்டான், பெற்ருன், புக்கான் போன்றவற்றின் பகுதி (முறையே தொடு, பெறு, புகு) யில் உள்ள இறுதி எழுத்து இரட்டித்து வருவதை உதாரணமாகக் காட்டுவார் கள். ஆனுல் இவ்வுதாரணங்களில் இரட்டித்து வரும் ஒரு வல்லெழுத்து இருப்பதால் பகுதியே காலம் காட்டுவதென் பது அவ்வளவாகப் பொருந்தாது. மொழியியலறிஞர்கள் இவ் வுதாரணங்களை இரண்டு விதமாக விளக்குவர். எல். வி இராமசுவாமி ஐயர், தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் போன்ருேர் தகர இடை நிலையை அமைத்து அது புணர்ச்சி யில் நிலைமொழிக்கேற்ப மாறிவருவதாகக் காட்டுவர். சங்ககாலத்தில் இரண்டு வேறு வல்லினங்கள் ஒன்று சேரும்பொழுது வருமொழிக்கேற்ப நிலைமொழி மாறுவது காணப்படுவதால் அது பொருந்தாது என்று கொண்டு இரட்டித்து வருகிற மாறுபாடு (Process) மூலம் ஏற்பட்ட தாகக் கொள்ளவேண்டுமென்று சொல்லுவோரும் உளர்.

உண்டு, சென்று என்பவற்றில் முறையே டுகரமும், றுகரமும் இறந்தகாலத்தைக் காட்டுவதாக உரையாசிரியர் கள் கூறுவர். இவ்வாறு குகரம் இறந்தகாலப் பொருளில் வருவதற்கு உதாரணம் கிடைக்கவில்லை.

வந்து, வந்தும் என்பன முறையே வந்தேன், வந்தோம் எனப்பொருள்பட்டு இறந்தகாலங்காட்டின.

உண்ப என்பது உண்டார் எனவும் உண்பார் எனவும் பொருள்பட்டு இறந்தகாலமும் எதிர் காலமும் காட்டின:

உண்டு, உண்டும் என்பன முறையே உண்டேன் உண்டேம் எனப்பொருள்பட்டு இறந்தகாலம் காட்டின.

கு, கும் என்பது ஏவலையும் எதிர்மறையும் காட்டு மென்பதற்கு உதாரணம் கிடைக்கவில்லை.

உண்மின் என்பது பொதுவாக ஏவல் பொருளைத் தரு வதாகவே நன்னூலார் முதலிய இலக்கண ஆசிரியர்கள் கூறுவார்கள். ஆனல் இவண் இச்சொல் வியங்கோள் பொரு ளில் வரும் என்பது கவனிக்கத் தக்கது.

உண்மார் என மார் விகுதி எதிர்காலம் காட்டியது.

உண்ணும் என்னும் செய்யுமென் வாய்பாட்டு முற்று நிகழ்காலமும் எதிர்காலமும் காட்டிற்று.

பொதுவாகவே இச்சூத்திரம் விளக்கமாக அமையவில்லை, முதலில் கு, டு, று என்ற ஈறுகள் இறந்தகாலத்தைக் காட்டும் என்று கூறிவிட்டு, இடையில் டு, டும் இறந்த காலத்தைக் காட்டும் என்றது கூறியது கூறியலாக உள்ளது.

கு, கும் ஈறுகள் ஏவலையும் எதிர் மறையையும் காட்டும் என்றதும் என்ன என்று விளங்கவில்லை. மேலும் முதலில் தகரத்தையும் றகரத்தையும் தகரத்தின் மாற்று உருபாகக் (Allomorph) கூறிவிட்டுப் பின்னர் அவற்றைத் தனித்தனியே எடுத்துக் கூறிய முரண்பாடு ஏன் என்று விளங்கவில்லை.

38 தருங்காலம் பதமுதலீற் றிடையினெவை யவையே
சாற்றுமிடை நிலையதனுற் பெய்முதலீற் றிடையே
வருஞ்சொல்லெழுத் தனைத்துமே யோரொருசாரி யையாம்
வரலன்ற னிச்சினத்து நந்தநுமற்றலியு
மிருங்குதநா யடநணவக் கிற்றம்வையோ வேயி
வெனுமுப்பத் தொன்றும்பிற வுஞ்சாரி யையாந்
திரிந்துகெடுஞ் சிலபதமுன் விகுதிபத முருபு
சேரினென்று பலவரும்போம் விகற்புருஞ்சா ரியையே (ரு)

விகுதி, இடைநிலை, சாரியை ஆகியவற்றை விளக்கு கின்றது.

உரை:-

கால விகுதி பதத்தின் இறுதியிலும் இடைநிலையிலும் முன்சொன்னவாறு வரும். மொழிமுதலிலும் இறுதியிலும் இடையிலும் வரும் சொல்லும் எழுத்தும் ஓரோ ஒரு சாரி யையாக ஆகும். அன், ஆன், இச்சு, இன், அத்து, நம், தம், நும், அற்று, அல், இ, உம், கு, த, நா, ய, ட, ன, ண, அக்கு, இற்று, அம், ஐ, ஓ, ஏ ... ...

எனும் முப்பத்தொன்றும் பிறவும் சாரியை ஆகும். இவை திரிந்தும் கெட்டும் வரும்.

சில பதத்தின் முன் விகுதியும் பகுதியும் உருபும் சேர்ந் தால் ஒரு சாரியையோ பல சாரியையோ வரும்; போகும்; மாறுபாடு அடையும்.

பாட விளக்கம்:

பி. பொ. பா. 4வது சூத்திரத்துக் கருத்துக்களோடு சில ஒற்றுமை உடையன.

விளக்கம்:

சாரியை மொழி முதலில் வரும் என்பதற்கு உதாரணம் தெரியவில்லை.

சாரியை இடையில் வருவதற்கு உதாரணம் ஒன்றனை (ஒன்று + அன் + ஐ)

இங்கு பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் சாரியை வந் துள்ளது இதை. உருபு புணர்ச்சி என்று கூறலாம்.

சொல்லின் இறுதியில் வரும் என்பதற்கு உதாரணம்:

பெண்டன் (கை) (பெண்டு + அன்) (தொல். எழுத்து 421)

இதைப் பொருட்புணர்ச்சி என்று கொள்ளலாம்.

நூலினுள் முப்பத்தொரு சாரியை வரும் என்று கூறியிருப்பினும் அவை இன்னவென்று சரியாக விளங்கவில்லை.

அன் ஒன்றனை (ஒன்று + அன் + ஐ)

ஆன் ஒருபானை (ஒரு + பஃது + ஆன் + ஐ)

இச்சு உதாரணம் கிடைக்கவில்லை,

இன் கிழங்கினில் (கிழங்கு + இன் + இல்)

அத்து மரத்தை (மரம் + அத்து + ஐ)

நம் எல்லாநம்மையும் (எல்லாம் (எல்லோம்) + நம் + ஐ + உம்)

தம் எல்லா தம்மையும் (எல்லாரும் + தம் + ஐ + உம்)

நும் எல்லீர் நும்மையும் (எல்லிரும் + நும் + ஐ)

அற்று பலவற்றை (பல + அற்று + ஐ)

அல் தொடையல்

இ

உம் வானவரி வில்லும் திங்களும் போலும் (வில்லிடைத் திங்கள் போலும்) எழுத்ததிகாரம் 421 நச்சினார்க்கினியர் உரை மேற்கோள்

கு உய்குவை (உய் + கு + வ் + ஐ)

த

நா

ய

ட

ன ஆன் + (ஆ + ன்)

ண

அக்கு தாழக்கோல் (தாழ் + அக்கு + கோல்)

இற்று பதிற்றுப் பத்து (பத்து + இற்று + பத்து)

அம் புளியம் காய் (புளி + அம் + காய்)

ஐ அற்றைத் திங்கள் (அன்று + ஐ + திங்கள்)

ஓ கோ ஓ (கோ + ஓ)

ஏ ஏஎ (ஏ + எ)

பதமும் விகுதியும் சேருதல் விகுதிப் புணர்ச்சி என்றும் பதமும் பதமும் சேருவது பதப்புணர்ச்சி அல்லது பொருட் புணர்ச்சி என்றும், பதமும் உருபும் சேருவது உருபு புணர்ச்சி என்றும் அழைக்கலாம். இதற்கு நன்னூல் 253 ஆம் சூத்திரம் ஆதாரமாக அமையும். ஓடு என்ற பெயர்ச்சொல் வேற்றுமை உருபோடு சேரும்பொழுது ஓட்டின் என்றும், ஓடு என்ற வினைச்சொல் இன் என்ற வினையெச்ச விகுதியோடு சேரும் போது ஓடின் என்றும் புணர்வதால், உருபு புணர்ச்சி விகுதிப் புணர்ச்சி என்னும் இரண்டாகப் பிரித்தார்களோ என எண்ணவேண்டியுள்ளது

சாரியை வரும் போகும் என்றது சாரியை சேர்த்தும் சேர்க்காமலும் புணர்க்கலாம் என்ற கருத்தை விளக்கும்.

வேழக்கு (வேழம் + அக்கு)

வேழத்துக்கு (வேழம் + அத்து + கு)

கிழங்கொடு (கிழங்கு + ஒடு)

கிழங்கினொடு (கிழங்கு + இன் + ஒடு)

என்பன போன்று வரும் உதாரணங்கள் இவ்வுண்மையை விளக்கும். சாரியை மாறுபாடு அடையும் என்பது தொல்காப்பியனார் புணரியல் கூறிய சாரியை மாற்று வடிவங்களை மனத்தில் கொண்டது. அம் என்ற சாரியை வருமொழி மெல்லினமாகவும் இடையினமாகவும் இருக்கும் பொழுது அகரமாக மாறும். (தொல். எழுத்து. 130)

(உ. ம்,) புளியமரம் (புளி + அம் + மரம்)

புளியவேர் (புளி + அம் + வேர்)

இங்கு அம் என்ற சாரியை அகரமாக மாறி வந்துள்ளது

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	கடைசி	போயும்	போலியும்
18	முதல்	பத்தொன்பது	அறுபத்தொன்பது
21	கடைசி	மூலப்பாடம்	மூலபாடம்
25	14	பெருமையாலும்	பொருமையாலும்
29	20	அண்ணவாதல்	அன்னவாதல்
	25	முறளத் (தோன்றும்)	முறயத்
36	3	ம்க் குறுகும்	மக்குறுகும்
41	ஈற்றயல்	உட்படல்	உடன்படல்
44	10	(மாத்திரை) யீராய்	யீருய்
45	5	முறைமையார்	முறைமையாற்
46	8	(குறுகாமை) யினேற் மழ்கி	யினேற் மழி
	12	நிகழிதலின்	நிகழ்தலின்
47	24	வாக	வரக்
51	12	துள்ளெரிற்	துள்ளாரிற்
52	10	நகரத்தின்	ரகரத்தின்
54	1	மரு	மரூ
	8	ழகர	ககர
	ஈற்றயல்	கணப்படவில்லை	காணப்படவில்லை
56	14	மகரமாகிய	ழகரமாகிய
57	27	முதலீரிடை	முதலீறிடை
58	7	மெய்ஞானம்	மெய்ஞ்ஞானம்

Annamalai University

DEPARTMENT OF LINGUISTICS

PUBLICATIONS

1961

1.	Prof. T. P. Meenakshisundaran Sixty-first Birth day Commemoration Volume Collected Papers of Prof. T. P. Meenakshisundaran	Rs.	3-75
2.	Kolami—M. B. Emaneau	Rs.	11-50

1965

3.	History of Tamil Literature —T. P.Meenakshisundaran	Rs.	10-00
4.	Spoken Tamil I —M. Shanmugam Pillai	Rs.	6-66
5.	India and Historical Grammar —M. B. Emeneau	Rs.	4-00
6.	Lexicography —S. M. Katre	Rs.	4-00
7.	Dravidian —S. K. Chatterji	Rs.	4-00

1966

8.	Conversational Tamil —N. Kumaraswami Raja and K. Doraswamy	Rs.	7-00

1967

9.	Dravidian Linguistics, Ethnology and Folk Tales -Collected papers—M. B. Emaneau	Rs.	25-00
10.	Naccinarkkiniyar's Conception of Phonology —S. V. Shanmugam	Rs.	5-00
11.	A Generative Grammar of Tamil (A fragment of Tamil Syntax)—S. Agesthialingom	Rs.	7-00

1968

12. Spoken Tamil II – M. Shanmugam Pillai Rs. 6–66

13. Collected Papers on Dravidian Linguistics
– T. Burrow Rs. 8–00

14. A Modern Evaluation of *Nannu:l*
– G. Vijayavenugopal Rs. 8–00

15. Two Lectures on the Historicity of Language Families - M. Andronov Rs. 1–50

16. A Descriptive Grammar of Gondi
– P. S. Subrahmanyam Rs. 5-00

1969

17. Dravidian Linguistics (Seminar papers)
(Eds.) S. Agesthialingom and
N. Kumaraswami Raja Rs. 7-00

18. Post-Nasal Voiceless plosives in Dravidian
– N. Kumaraswami Raja Rs. 3–00

19. The Tirunelveli Tamil Dialect
–A. Kamatchinathan Rs. 5–00

1970

20. Gowda Kannada – K. Kushalappa Gowda Rs. 3–00

21. Vaagri Boli- An Indo–Aryan Language
– G. Srinivasa Varma Rs. 5-00

22. Dravidian Comparative Phonology-A Sketch
– M. B. Emeneau Rs. 6–00

23. The Language of Tamil Inscriptions
1250–1350 A. D., – S. Agesthialingom and
S. V. Shanmugam Rs. 5-00

1971

24. Dravidian Verb Morphology (A Comparative Study) – P. S. Subrahmanyam Rs. 10–00

25. Dravidian Nouns (A Comparative Study) – S. V. Shanmugam Rs. 8–00

26. The Kollimalai Tamil Dialect - K. Karunakaran Rs. 6–00

1972

27. Third Seminar on Dravidian Linguistics (Eds.) S. Agesthialingom and S. V. Shanmugam Rs. 10–00

28. A Crammar of Kannada (based on the inscriptions of Coorg, South Kanara and North Kanara Dts. 1000 to 1400 A D.) - K. Kushalappa Gowda Rs. 10–00

29. Tolka:ppiya mo*l*iyial (Collection of papers-presented at the Seminar on Tolka:ppiyam)- (Eds.)S. Agesthialingom and K. Murugaiyan Rs. 10-00

1973

30. A Bibliography of Dravidian Linguistics – S. Agesthialingom and S. Sakthivel Rs. 10-00

31. A Bibliography for the Study of Nilagiri Hill Tribes– S.Agesthialingom and S. Sakthivel Rs. 2–00

32. Structure of Malto- Sisir Kumar Das Rs. 5-00

1974

33. Contrastive Linguistics and Language Teaching – K. Theivanatham Pillai Rs. 10–00

34. An Introduction to Modern Telugu – P. S. Subrahmanyam Rs. 10-00

35. Ilakkana a:yvukka*tt*uraika*l*–I –(Eds.) S. Agesthialingom and K. Balasubramanian Rs. 12–00

1975

36. Cuva:mina:tam (—Ed.) S. V. Shanmugam Rs- 10-00

37. Nominal Composition in Malayalam
(A Generative transformational approach)
—P. N. Ravindran Rs. 5-00

38. Linguistic Diversity
—M. W. S. De Silva ...

1976

39. Dravidian Case System
—(Eds.) S. Agesthialingom and
K. Kushalappa Gowda ...

40. Phonology of Kodagu with Vocabulary
– R. Balakrishnan

41. Phonology of Toda with Vocabulary
—S. Sathivel

42. Cuva:mina:tha mu:lamum viruthi uraiyum
—(Ed.) S. V. Shanmugam ...

43. Four Lectures on Pa:ṇini's Aṣṭadhyāyi
— H. S. Ananthanarayana

44. Phonology of Kasaba with Vocabulary
— V. Chidambaranatha Pillai

45. Kanikkara Dialect
—S. Agesthialingom

46. Saiva Vellala Dialect of Tamil
—K. Karunakaran and C. Shanmugam Pillai

47. Seminar on Dravidian Linguistics–V
(—Eds.) S. Agesthialingom and P. S. Subrahmanyam

48. Harijan Dialect of Tamil
– G. Srinivasa Varma and N. Ramaswami